D
V211,31 '801
801.113.1.
224638

வெளியீடு 27-7-2001 Issued 27-7-2001

350/2002

840

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 24, 2001 – தொகுதி 113– எண் 1

**Wednesday the 24th January, 2001 – Volume 113– No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

350/2002

# 24-1-2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1. வினாக்கள்—விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| *2. சிறப்புக் கவன ஈர்ப்பு—* | |
| வாக்காளர் பட்டியலில் பெரும்பாலானோர் பெயர்கள் விடுபட்டுள்ளது மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படாமை | 41-71 |
| திரு. சி. ஞானசேகரன் | 41-46 |
| திரு. சைதை கா. கிட்டு | 46-48,69 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 48-57,69,70 |
| திரு. ஐ. கணேசன் | 59-63 |
| *திரு. டி. மணி | 63-65 |
| திரு. சி. வேலாயுதன் | 65-66 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 70-71 |

பக்கங்கள்

*3. அறிக்கைகள் அளித்தல்—*

பொதுக் கணக்குக் குழு 72

*4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்*—தொடர்ச்சி

• டாக்டர் தே. குமாரதாஸ் 72-85

*திரு. இரா. பெர்னார்டு 85-92

திரு. கே. தங்கமணி 92-98

திரு. மீ.அ. வைதியலிங்கம் 98-106

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் 106-112

திரு. ஜி. நிஜாமுதீன் 113-119

திரு. பி.ஆர். சுந்தரம் 119-139

*5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—* 140



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

5. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

19. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
*கால்நடை பராமரிப்பு.*

21. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

23. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

24. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

25. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

5. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 7. | **Minister for Transport and Labour** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control. |
| 8. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 9. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 10. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 11. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. | **Minister for Revenue** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 14. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 15. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas. Refugees and Evacuees. |
| 16. | **Minister for Youth and Pollution Control** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports, Youth Service Corps and Environmental Pollution Control. |
| 17. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 18. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 19. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 20. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |

224639.
சென்னை 600 008
நூலகம்



D
V21,31'P01
P01.113.1 v

6. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

7. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலம், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகு கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

8. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

14. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில்.

15. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

16. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்பாடு.

17. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 22. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 23. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 24. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 25. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்**

**திரு. சுப. தங்கவேலன்**

**திரு. ஏ.ஜி. சம்பத்**

**திரு. ப. மோகன் கந்தசாமி**

**திரு. பி. வெங்கடசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

**22-1-2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு*

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 8. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

19. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல்., - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி., - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல்., - துணைச் செயலாளர்
22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்
23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., - சார்புச் செயலாளர்
24. திருமதி என். துளசிபாய், பி.ஏ., - சார்புச் செயலாளர்
25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்
26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., - சார்புச் செயலாளர்
27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல்., - சார்புச் செயலாளர்
28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். - சார்புச் செயலாளர்
29. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., - தலைமை நிருபர்
30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., - சார்புச் செயலாளர்
31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்., - சார்புச் செயலாளர்
32. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., - சார்புச் செயலாளர்
33. திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்
34. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., - சார்புச் செயலாளர்
35. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்., - தலைமை நிருபர்
36. திரு. தி. உமாபதி, பி.ஏ., - தலைமை நிருபர்
37. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ.,பி.ஜி.எல்., - சார்புச் செயலாளர்
38. திரு. கோ. தேவராஜன், பி.ஏ., - சார்புச் செயலாளர்
39. திருமதி ச. இரா. சுகுணா - தலைமை நிருபர்
40. திருமதி ச. நிர்மலா, பி.காம்., - தலைமை நிருபர்
41. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., - சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. - திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. - அந்தியூர் (செ.வ.)
3. அப்துல் லத்தீப், திரு. ம. - வாணியம்பாடி
4. அப்பாவு, திரு. மு. - இராதாபுரம்
5. அமரமூர்த்தி, திரு. டி. - அரியலூர்
6. அய்யலுசாமி, திரு. வி. - கோவில்பட்டி
7. அருண்குமார், திரு. பா. - மேட்டுப்பாளையம்
8. அழகராஜா, திரு. என்.ஆர். - தேனி
9. அழகிரி, திரு. ச. - சிதம்பரம்
10. அழகுவேலு, திரு. ச. - கண்டமங்கலம் (செ.வ.)
11. அன்பழகன், திரு. வ. - செய்யார்
12. அன்பழகன், பேராசிரியர் க. - துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. - திருச்சிராப்பள்ளி-2
14. ஆசையன், திரு. பெ. - ஆண்டிப்பட்டி
15. ஆண்டமுத்து, திரு. வெ.அ. - பவானிசாகர்
16. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். - வில்லிவாக்கம்
17. ஆலடி அருணா, திரு. - ஆலங்குளம்
18. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
19. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
20. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்

21. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
22. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
23. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
24. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
25. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
26. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. - ஆண்டிமடம்
27. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
28. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
31. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
32. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
33. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
34. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
35. இராமஜெயம், திரு. ந. பூ. - மயிலாப்பூர்
36. இராஜரெட்டி, திரு.ச. - தளி
37. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
38. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)
39. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
40. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
41. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
42. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி



43. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
44. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
45. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
46. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
47. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
48. கன்னையன், திரு. க. - தொட்டியம்
49. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
50. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
51. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
52. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
53. கிருஷ்ணன், திரு. சீ. வெ. - வேடசந்தூர்
54. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
55. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
56. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
57. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
58. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
59. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
60. கோபால், திரு. பா. - மேட்டூர்
61. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
62. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
63. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
64. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
65. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்

| | | | |
|---|---|---|---|
| 66. | சண்முகம், திரு. கோ. | - | திருப்பத்தூர் |
| 67. | சண்முகம், திரு. சி. | - | ஆலந்தூர் |
| 68. | சண்முகம், திரு. ம. | - | கிணத்துக்கடவு |
| 69. | சண்முகம், திரு. வி.சி. | - | நெல்லிக்குப்பம் |
| 70. | சந்தானம், திரு. லா. | - | சோழவந்தான் |
| 71. | சந்திரசேகரன், திரு. சி. | - | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 72. | சந்திரசேகரன், திரு. துரை. | - | திருவையாறு |
| 73. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | - | சமயநல்லூர் (செ.வ.) |
| 74. | சம்பத், திரு. ஏ.ஜி. | - | முகையூர் |
| 75. | சரஸ்வதி, திருமதி ஆர். | - | தாராபுரம் (செ.வ.) |
| 76. | சற்குணபாண்டியன்,<br>திருமதி எஸ்.பி. | - | டாக்டர்<br>இராதாகிருஷ்ணன் நகர் |
| 77. | சாமிநாதன், திரு. மு.பெ. | - | வெள்ளக்கோவில் |
| 78. | சிங்காரவேலு, திரு. வி.பி. | - | வால்பாறை (செ.வ.) |
| 79. | சிவபுண்ணியம், திரு. வை. | - | மன்னார்குடி |
| 80. | சிவராமன், திரு. ஆர். | - | திருப்பத்தூர் |
| 81. | சிவராஜ், திரு. சு. | - | ரிஷிவந்தியம் |
| 82. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | - | பனமரத்துப்பட்டி |
| 83. | சிவானந்தம், திரு. ஆர். | - | ஆரணி |
| 84. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | - | திருத்தணி |
| 85. | சின்னய்யா, திரு. வெ. | - | திருமயம் |
| 86. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | - | விருதுநகர் |
| 87. | சுகவனம், திரு. இ.ஜி. | - | பர்கூர் |



| | | | |
|---|---|---|---|
| 88. | சுடலைமுத்து, திரு. அ. | - | போடிநாயக்கனூர் |
| 89. | சுதர்சனம், திரு. டி. | - | பூந்தமல்லி |
| 90. | சுந்தரம், திரு. க. | - | பொன்னேரி (செ.வ.) |
| 91. | சுந்தரம், திரு. ந. | - | காரைக்குடி |
| 92. | சுந்தரம், திரு. பி.ஆர். | - | இராசிபுரம் |
| 93. | சுந்தர், திரு. கே. | - | உத்திரமேரூர் |
| 94. | சுப்பராயன், திரு. கே. | - | திருப்பூர் |
| 95. | சுப்பிரமணி என்கிற<br>சி.சு. மணி, திரு. சி. | - | திருவள்ளூர் |
| 96. | சுப்பிரமணி, திரு. பி.என். | - | ஆற்காடு |
| 97. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | - | திருநெல்வேலி |
| 98. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | - | மொடக்குறிச்சி |
| 99. | சுரேஷ் ராசன், திரு. என். | - | கன்னியாகுமரி |
| 100. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | - | மருங்காபுரி |
| 101. | செங்கை சிவம், திரு. | - | பெரம்பூர் (செ.வ.) |
| 102. | செல்லக்குமார், டாக்டர் அ. | - | தியாகராய நகர் |
| 103. | செல்வம், திரு. ரெ. | - | குளித்தலை |
| 104. | செல்வராஜ் என்கிற<br>கவிதைப்பித்தன், திரு. | - | கொளத்தூர் (செ.வ.) |
| 105. | செல்வராஜ், திரு. து. | - | உடுமலைப்பேட்டை |
| 106. | சேகரன், திரு. ஆர்.ஆர். | - | ஓமலூர் |
| 107. | சேதுநாதன், திரு. ரா. | - | திண்டிவனம் |
| 108. | சைதை கா. கிட்டு, திரு. | - | சைதாப்பேட்டை |
| 109. | ஞானசேகரன், டாக்டர் ஆ. | - | மேல்மலையனூர் |

156. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
157. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
158. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
159. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
160. பெரும்மாள், திரு. வி. - ஏற்காடு (ஆவா.)
161. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
162. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
163. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
164. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
165. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
166. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
167. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
168. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
169. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
170. மணி, திரு. டி. - விளவங்கோடு
171. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
172. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
173. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
174. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
175. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
176. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
177. மனோகரன், திரு. கு. - தருமபுரி
178. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்



179. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
180. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
181. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
182. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
183. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
184. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
185. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
186. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
187. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
188. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
189. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
190. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
191. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
192. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
193. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
194. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
195. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
196. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
197. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
198. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)
199. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்
200. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்

110. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
111. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
112. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
113. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
114. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
115. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
116. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
117. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
118. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
119. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
120. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
121. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
122. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
123. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
124. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
125. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
126. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்
127. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
128. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
129. துரைமுருகன், திரு. - காட்பாடி
130. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
131. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
132. நடராசன், திரு. ஆ. - பேரூர்



133. நடராஜன், திரு. த. - செஞ்சி
134. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
135. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
136. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
137. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
138. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
139. நேரு, திரு. கா.நா. - லால்குடி
140. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
141. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
142. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
145. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
146. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
147. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
148. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
149. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
150. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
151. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
152. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
153. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
154. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
155. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)

201. ராஜு, திரு. எஸ். - பொள்ளாச்சி
202. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. - சத்தியமங்கலம்
203. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். - காங்கேயம்
204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
205. வாசுகி முருகேசன், திருமதி - கரூர்
206. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
207. விஜயகுமார், திரு. கே.எம். - சாத்தூர்
208. விஜயன், திரு. டி.சி. - திருவொற்றியூர்
209. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - வீரபாண்டி
210. வீரப்பன், திரு. கே.கே. - கபிலர்மலை
211. வெங்கடசாமி, திரு. பி. - ஓசூர்
212. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
213. வெங்கடாசலம், திரு. ஜி.எல். - பாலக்கோடு
214. வெங்கடேசன், திரு. ச.க. - மதுராந்தகம்
215. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். - காவேரிப்பட்டினம்
216. வெங்கிடு, திரு. ஜி.பி. - கோபிச்செட்டிப் பாளையம்
217. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். - அரூர் (செ.வ.)
218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
219. வேலாயுதன், திரு. சி. - பத்மநாபபுரம்
220. வேலுசாமி, திரு. வ. - மதுரை கிழக்கு
221. வேல்சாமி, திரு. க. - நாமக்கல் (செ.வ.)
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
224. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். - திருச்செந்தூர்
225. ஜோதிகண்ணன், திரு. மு.ந. - முசிறி
226. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
227. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
228. ஆன் டி' மான்டி, திருமதி - நியமனம்
229. வெற்றிடம் - அறந்தாங்கி
230. வெற்றிடம் - உசிலம்பட்டி
231. வெற்றிடம் - சிவகாசி
232. வெற்றிடம் - திருப்போரூர் (செ.வ.)
233. வெற்றிடம் - திருமங்கலம்
234. வெற்றிடம் - திருவல்லிக்கேணி
235. வெற்றிடம் - மயிலாடுதுறை

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவ

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 11, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 ஜனவரி 24, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்*
*வகையறியார் வல்லதூஉம் இல்."*

அவையின் தன்மை அறியாமல் சொற்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது; பேசும் திறமையும் கிடையாது.

## 1. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**41—**

**அரசு பெண்கள் கல்லூரி**

***22939—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு பெண்கள் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் ஆண்கள், பெண்கள் இருபாலர் படிக்கிற அரசுக் கல்லூரி ஒன்றுதான் இருக்கிறது. இந்த ஆண்டுகூட, 2500 மாணவிகள் விண்ணப்பித்தார்கள். ஆனால் 150 மாணவிகளுக்குத்தான் அங்கே இடம் கிடைத்தது. தேவையான அளவிற்கு இடம் இல்லாத காரணத்தால், பெண்கள் மேலும் படிப்பதற்கு, கல்வித் தரம் உயருவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. தனியார் கல்லூரிகளில் சேர வேண்டுமானால், ஏராளமாக நன்கொடை கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் விடுதிக் கட்டணம் எல்லாம் கட்டுவதற்கான வசதியில்லாமல் இருக்கிறார்கள். விவசாயத்தை மட்டும் நம்பி வாழ்கின்ற மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அரசு பெண்கள் கல்லூரி தொடங்குவதற்கு வாய்ப்பளிப்பார்களா அல்லது அருணாச்சலேஸ்வரர் கோவில் மூலமாகவாவது பெண்கள் கல்லூரி தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் அரசு ஒதுக்குகிற பெருமளவு நிதியில் கல்லூரிக் கல்விக்காக ஒதுக்கப்படக்கூடிய தொகை மிகக் குறைவாகத்தான் அமைகிறது. காரணம், எந்த அடிப்படையில் மகளிர் கல்விக்காக கல்லூரி தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்களோ, அதே அடிப்படையில், கிராமங்களிலே பள்ளிக்கூடங்கள், மகளிருக்கு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இவைகளை ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் கல்வியினுடைய குறிக்கோள், அதுவும் அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு நிறைவாக அமைகிறது. ஆகவே, அரசாங்கத்தினுடைய நிதியிலே ஏறத்தாழ ஆசிரியர்களுக்கு ஊதியம் என்ற வகையில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு பள்ளிக் கல்விக்கும், தொடக்கக் கல்விக்கும்தான் செலவிட வேண்டிய கட்டாயமான நிலைமை இருக்கிறது. சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்களுடைய தேவையை நிறைவு செய்வதற்கான அடிப்படைப்



2001 ஜனவரி 24]

பணிகளை நிறைவேற்றியதற்குப் பின்னர்தான் கல்லூரிக் கல்விக்காக, அதுவும் மேலும் மேலும் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்காக அரசு நிதிப் பொறுப்பை ஏற்கக்கூடிய நிலைமை உருவாகும் என்பதால் அதை ஒரு கொள்கையாக அரசு ஏற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய பள்ளிகள், கல்லூரிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையை உணர்ந்து, தற்போது அந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்கின்ற முகத்தான் பல இடங்களிலே ஆசிரியர் நேர்முகத் தேர்வு நடைபெற்று, ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில், அந்த மாவட்டத்திலேயே பிறந்து, அந்த மாவட்டத்திலேயே படித்து, அந்த மாவட்டத்திலேயே வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருந்தால்தான் அவர்களுக்கு ஆசிரியர் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று அரசு அறிவித்ததாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்துகிறார்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன தொடர்பு?

**திரு. ஜி. பழனிசாமி:** கல்விக்கு மிகவும் சம்பந்தப்பட்ட கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூத்த உறுப்பினர், இப்படி துணைக் கேள்வி கேட்கலாமா?

**திரு. ஜி. பழனிசாமி:** இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட கேள்வி. அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி? இது கல்லூரியைப் பற்றிய கேள்வி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, பள்ளி என்பதனால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி என்ன என்று பாருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இது ரொம்ப அவசியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது முழுவதும் அவசியமானதுதான். நான் ஒன்றும் மறுக்கவில்லை. எதை எப்பொழுது கேட்க வேண்டுமென்று இருக்கிறது அல்லவா?

[2001 ஜனவரி 24

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமானதொரு விடையை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பழனிசாமி அவர்கள், தொடக்கக் கல்வித் துறையில், ஆசிரியரைத் தேர்வு செய்கிற முறையில், அந்தந்த மாவட்டத்தில் தேர்ந்து பதிவு பெற்றவர்களுக்குத்தான் முன்னுரிமை என்று மாவட்டக் கல்வி அலுவலர்கள் தெரிவிக்கிறார்களே என்று கேட்டார்கள். நீண்டகாலமாக, அந்தந்த மாவட்டத்திற்குத்தான் ஆசிரியர்கள் நியமனம். எனவே, அந்தந்த மாவட்டத்தில் படித்தவர்களுக்குத்தான் முன்னுரிமை. இடையிலே ஏழு, எட்டு ஆண்டு காலம், குமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகியவற்றில் படித்து, அங்கே வேலை கிடைக்கவில்லை என்பதால் ஏராளமான படித்தவர்கள் வேறு மாவட்டங்களில் பதிவு செய்துகொள்கிற பழக்கம் ஏற்பட்டது. அதன் காரணமாக, அண்மைக் காலத்திலே பல மாவட்டங்களில் போதுமான ஆசிரியர்கள் இல்லையென்ற நிலைமை ஏற்படும் அளவிற்கு வெளி மாவட்டங்களிலேயிருந்து வந்து பதிவு செய்தவர்களைப் போட்டு விடுகிறார்கள். அதனால் சில நேரங்களில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கிடைக்காமலே போய் விடுகிறது. ஆகவே, ஒரு மாவட்டத்தில் அந்த மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்காகத் தெரிவு செய்கிறபோது அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைத்தான் எடுக்க வேண்டுமென்பது அரசின் கொள்கை. அப்படிச் செய்யும்போது, தேவைப்பட்டால், இன்னொரு மாவட்ட Employment Exchange மூலமாக, அரசே பட்டியல் கேட்டுப் பெற்று அவர்களை நியமிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக எல்லையில் மூன்று மாவட்டங்களில் உள்ள 42 கல்லூரிகளில் பெண்களுக்காக ஒரே ஒரு அரசுக் கல்லூரி—இராணி அண்ணா கல்லூரி -- 1967-ல் அண்ணா அவர்கள் தந்த கல்லூரி மட்டும்தான் உண்டு. இப்போது கட்டடம் கட்ட பேராசிரியர் அவர்கள் பணம் ஒதுக்கித் தந்தார்கள். அது போக, சுயநிதிக் கல்லூரிகள் ஏராளமாக இருக்கின்றன. நெல்லை மற்றும் சுற்றியுள்ள இரண்டு மாவட்டங்களில் பெண்களுக்காக ஒரு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அண்ணா



2001 ஜனவரி 24]

தந்ததற்குப் பிறகு, அரசு பெண்கள் கல்லூரியை யாரும் தரவில்லை. அண்ணாவினுடைய அருமைத் தம்பி, பேராசிரியர் அவர்கள் அதை வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சாதித்த சாதனையை அன்பழகனால் சாதிக்க முடியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. எம். ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**42—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல்**

***30742—திரு. எம். ரங்கநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூர் வட்டம், எடப்பள்ளி கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு சிறு திருத்தத்துடன் விடை அளிக்க விரும்புகிறேன். குன்னூர் வட்டம், எடப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென அனைத்து வசதியுடன்கூடிய கட்டடம் கட்டப்பட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், கொறடா திரு. முபாரக் அவர்களாலும், திரு. குண்டன் அவர்களாலும், திரு. ரங்கநாதன் அவர்களாலும் இந்த மாதம் திறந்து வைக்கப்பட்டது. இதனை மேலும் மேம்படுத்த திட்டம் ஏதுமில்லை.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் வட்டம், எடப்பள்ளியிலே ஆரம்ப சுகாதார நிலையம் வலிவோடும், பொலிவோடும் அமைத்துத் தந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, பக்கத்திலே இழித்துறையிலே ஆரம்பக் கட்டத்திலே துணை சுகாதார நிலையம் அமைத்து வேலை நடந்து

[2001 ஜனவரி 24

கொண்டிருக்கிறது. அதை விரைவிலே செய்து தர வேண்டும். மேலும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மகப்பேறு மருத்துவர் இல்லாத குறையை நீக்க வேண்டும். மேலும் மகப்பேறு மருத்துவமனைகளிலும், ஆங்காங்குள்ள தாலுக்கா மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. விரைவிலே முடித்துத் தர வேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாக ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாக துணை சுகாதார நிலையம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவர்கள் அங்கே குறைவாக இருக்கிறார்கள், அதைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். பொதுவாக, சில பகுதிகளுக்கு மருத்துவர்களை எவ்வளவுதான் நாம் பரிந்துரை செய்தாலும், நீலகிரி போன்ற மாவட்டங்களுக்கு, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்குச் செல்வதற்கு மறுக்கிறார்கள். அல்லது விடுப்பில் போய்விடுகிறார்கள். இதற்காக ஏதாவது சிறப்பாக ஒரு திட்டத்தைத் தீட்ட முடியுமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிக்கு வருவதற்கு யாராவது டாக்டர்கள் விருப்பம் தெரிவித்தால், அந்த டாக்டர்களை 24 மணி நேரத்திலே அந்தப் பகுதிக்கு மாற்றித் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**43—**

**மருத்துவப் பரிசோதனைத் திட்டம்**

***35771—திரு. ச. அழகுவேலு:**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—**



2001 ஜனவரி 24]

விழுப்புரம் மாவட்ட மருத்துவமனையில் முழு உடல் மருத்துவப் பரிசோதனை திட்டம் அமல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முழு உடல் மருத்துவப் பரிசோதனைத் திட்டம் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்ற குறளின் அடிப்படையிலே தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 'வருமுன் காப்போம்' திட்டத்தின் மூலமாக என்னுடைய வினாவிற்கு விடை கிடைத்திருக்கிறது. இந்த வினா நீண்ட நாட்களுக்கு முன்னால் கேட்கப்பட்டது. அந்தக் காலத்தில் இந்தத் திட்டம் இல்லாத காரணத்தினால் இந்த வினா எழுப்பப்பட்டது. ஆனால், நடுத்தர மக்கள் 'வருமுன் காப்போம்' திட்டத்திலே பயன் அடைய முடியாத சந்தர்ப்பம் ஏற்படுகின்றபோது விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவமனையில் அவர்கள் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள வாய்ப்பளிக்கக்கூடிய வகையிலே அரசு இந்தத் திட்டத்தை அங்கே நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்ட தலைமை மருத்துவனையில் இந்தத் திட்டம் நிச்சயமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கே 250 ரூபாய் கட்டணம் செலுத்தினால், எக்ஸ்ரே, இ.சி.ஜி. சோனாகிராம், இரத்த சர்க்கரை, யூரியா மற்றும் கொழுப்பு, எல்.எஃப்.டி., அல்ட்ரா சோனாகிராம் போன்ற பரிசோதனைகள் செய்து கொள்ளவசதி செய்து தரப்பட்டிருக்கிறது. ஏழைகளுக்கு இலவசமாகவும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 250 ரூபாய் கட்டணம் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சோதனைகள் தனியார் மருத்துவமனைகளிலே செய்துகொள்ள வேண்டுமென்றால், சுமார் 3,000 ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்கள். இதையெல்லாம் கருதித்தான் தமிழ்நாட்டிலே எல்லா மருத்துவமனைகளிலேயும் இந்தத் திட்டம் முதலமைச்சருடைய அறிவுரையின் பேரில் தொடங்கப்பட்டிருக்கிறது.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**44—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***16540—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கடையநல்லூர் தொகுதியில், தாமிரபரணி-கடையநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இங்கே படிக்கிறேன்.

*(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடையநல்லூர், புளியங்குடி நகராட்சிகள், சுரண்டை மற்றும் சாம்பவர் வடகரை நகர பேரூராட்சிகள், சுந்தரபாண்டியபுரம் ஊரக பேரூராட்சி மற்றும் 84 வழியோரக் குடியிருப்புகள் பயன் பெறும் வகையில் ரூ. 29 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு நீருற்றுக் கிணறுகள் மற்றும் ஆற்றுப் படுகைகளில் நீரேற்றக் குழாய்கள் அமைக்கும் பணிகள் தவிர தரைமட்டத் தொட்டிகள் கட்டுதல், நீரேற்றக் குழாய்கள் பதித்தல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.*

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதி மக்கள் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைக்க கடையநல்லூர்-தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிக்கு நிதியொதுக்கி பணியை முடுக்கிவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை



2001 ஜனவரி 24]

அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பணி எப்போது முடியும், கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை நீரேற்று நிலையம் அமைக்கின்ற இடத்தில் பொது மக்கள் ஓர் அச்சத்தின் காரணத்தால் அதிலே கரை உடைந்து விடும் அல்லது பக்கத்திலே இருக்கிற கோயிலுக்கு ஏதாவது சங்கடங்கள் ஏற்படும் என்று அவர்கள் கருதிக்கொண்டு அந்த இடத்தில் நீரேற்று நிலையம் அமைப்பதை தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தகவல் தரப்பட்டு, அவர் கூப்பிட்டுப் பேசி ஒரு சுமுக முடிவு எடுத்து அந்தப் பணி மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம். அதுவரையில், இந்தப் பணிகள் எல்லாம் தடைப்பட வேண்டாம் என்றுதான் மற்றைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்தப் பணிகள் முடிவதற்குத் தகுதந்தாற்போல 18 மாத காலத்திற்கு மேல் அந்தப் பணிகள் நிலுவையில் இருக்கக் கூடாது என்று கடுமையான உத்தரவிட்டிருக்கிறோம். தலைமை நீரேற்று நிலையத்தின் பணி சிக்கிரமாக முடிந்துவிடுமேயானால், 18 மாதங்களுக்குள்ளாகவே இந்தப் பணிகளை முடிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரசிகாமணிவரை வருகிற சங்கரன்கோயில், ஆலங்குளம் வழியோரக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எனது தொகுதியில் வீரசிகாமணிக்கு அருகில் உள்ள திருவட்டநல்லூர் ஊராட்சி, அரியநாயகபுரம் ஊராட்சி, மடத்துப்பட்டி ஊராட்சி, புன்னவனம் ஊராட்சி, கீழவீரசிகாமணி ஊராட்சி, பொய்கை நொச்சிவளம் போன்ற ஊராட்சிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருந்தும் அந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இப்போது கடையநல்லூர், புளியங்குடி நகராட்சிக்கு வருகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள என்னுடைய தொகுதியிலுள்ள மேற்சொன்ன ஊராட்சிகளையும் சேர்த்துக்கொள்ளும்படி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக மனு கொடுத்திருந்தபோதிலும், இதுவரையிலேயும் அவை சேர்த்துக்கொள்ளப்பட்டனவா, இல்லையா

[2001 ஜனவரி 24

என்ற விவரம் தெரியவில்லை. இருந்தாலும் சேர்த்துக்கொள்ள ஆவன செய்யப்படுமா, அப்படிச் சேர்த்துக் கொண்டால் எப்போது அந்தத் திட்டத்தில் இந்தக் கிராம ஊராட்சிகளுக்கும் சேர்த்து வேலை தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை இந்தத் திட்டத்தைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிற நேரத்தில் ஒருசில கிராமங்கள் விடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டு அவை சேர்க்கப்பட்டுத்தான் கடையநல்லூர், புளியங்குடி நகராட்சிகள் மற்றும் சுரண்டை, சாம்பவர் வடகரை பேரூராட்சிகளுக்கு 19 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டமும் 1999-2000 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நகர்ப்புறத் திட்டத்தின்கீழ் சுந்தரபாண்டியபுரம் மற்றும் 84 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு 9 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவிலே கூட்டுக் குடிநீர்த் திட்டமும் திட்டப்பட்டுள்ளன. அவற்றில் இவை அடங்காமல் தனியாக இருக்குமானால் அவற்றையும் சேர்த்தோ அல்லது தனித் திட்டத்தின் மூலமோ அதைப்பற்றிப் பரிசீலித்துத்தான் ஒரு முடிவு சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**45—**

### வேளாண்மைக் கல்லூரி

***39929—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.



2001 ஜனவரி 24]

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வேலூர் மாவட்டம் வேளாண்மை நிறைந்த மாவட்டம். எங்கள் மாவட்ட மக்கள் வேளாண்மையையே முழுக்க முழுக்க நம்பியிருக்கிறவர்கள். நீண்டகாலமாக எங்கள் மக்களுடைய ஆசை, விருப்பம் அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்பதாகும். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டு மக்களுக்குச் செய்திருக்கிற சாதனைகளை அவர்கள் நம்மிடையே பல்வேறு வகையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிற அந்தச் சாதனைகளில், எங்கள் மாவட்ட விவசாயம் செழிக்கின்ற வகையில் வேளாண்மை பற்றிய அறிவு வளர்கின்ற வகையில் எங்கள் மாவட்டத்தில் பல்வேறு வகையான—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும். உரை நிகழ்த்தக் கூடாது.

**திரு. இரா. மகேந்திரன்:** நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் மீண்டும் 5-வது முறையாக ஆட்சியிலே அமரவிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைய மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்ற இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**46—**

### கால்வாயைச் செப்பனிடுதல்

***25949—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், கோதண்டபுரம் ஏரியின் கால்வாயைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப இப்பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் வழங்கப்படுவதனால் பல விவசாயிகள் ஏரியினுடைய கால்வாய்களைச் செப்பனிடுவதிலே மெத்தனம் காட்டுகிறார்கள். எனவே, கிராமங்களிலுள்ள ஏரி நீர் வரத்துக் கால்வாய்கள் சிதிலமடைந்து பல நேரங்களில் விளை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. நான் குறிப்பிட்டிருக்கிற கோதண்டபுரம் ஏரி செப்பனிடுதல் என்பது, பொதுமக்களினுடைய, விவசாயிகளினுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. எனவே, தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதிலே விரைவாகப் பணியை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தொகுதியின்பால் இருக்கிற பரிவையும், இந்த ஏரியின் அருகில் வாழ்கிற மக்களிடத்திலே இருக்கிற ஆசையையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வண்ணம் இந்த ஏரியைச் செப்பனிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, டாக்டர் பத்மா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**47—**

**நீர் ஒழுங்கி அமைத்தல்**

***35721—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் காவிரி கோட்டத்திற்குட்பட்ட பூந்தோட்டம் புகை வண்டி நிலையத்திற்கு அருகில் அரசலாற்றில் நீர் ஒழுங்கி அமைத்து திருமாளம், கொங்கராயநல்லூர், வீராவாடி, சகடமங்கலம் ஆகிய ஊர்கள் பாசனம் பெற அரசு ஆவன செய்யுமா?



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசலாற்றில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திற்குக் கீழ்புறம் நீர் ஒழுங்கி அமைத்து புதிய வாய்க்கால் மூலம் பாசனம் அளிப்பது தொழில்நுட்ப அடிப்படையில் சாத்தியமில்லை. திருமாளம், கொங்கராயநல்லூர், வீரவாடி ஆகிய கிராமங்கள் நூலாறு ஆற்றில் பிரியும் கொங்கராயநல்லூர் வாய்க்கால் மூலம் பாசனம் பெறுகின்றன. சகடமங்கலம் கிராமம் அரசலாற்றில் பிரியும் கூத்தனூர் வாய்க்காலின் மூலம் பாசனம் பெறுகிறது. இந்த இரு ஆறுகளின் மூலம் பாசனம் பெறும் இந்தக் கிராமங்களில் எந்த ஆண்டு பாசனமும் தடைப்பட்டதில்லை. மேலும், பாசன வசதி இல்லாமல் நிலங்கள் தரிசாகப் போடப்படவில்லை.

*முற்பகல் 9-50*

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில்நுட்ப அடிப்படையில் இதை அமைக்க சாத்தியமில்லை என்று கூறியிருக்கிறார்கள். இரண்டாவதாக தரிசாக நிலம் போடப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். தொழில்நுட்ப அடிப்படையில் அமைப்பதற்கு அடிப்படை வசதி இல்லை என்றாலும்கூட 5 கிலோ மீட்டர் தள்ளியாவது அமைக்கலாம். காரணம், நான் குறிப்பிட்ட திருமாளம், கொங்கராயநல்லூர், வீரவாடி, சகடமங்கலம் போன்ற கிராமங்கள் கடைமடைப் பகுதிகளாக இருக்கிற காரணத்தினாலும், முறையாக நீர்ப்பாசனம் வராத காரணத்தினாலும், நீர்வரத்து சரியாக இல்லாததாலும் அடிக்கடி முறைகேடான பாசனம் நடைபெறுகிற காரணத்தினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகடமங்கலமும், கொங்கராயநல்லூரும் ஏற்கெனவே பாசனம் பெறுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் குறிப்பிட்ட திருமாளம், கொங்கராயநல்லூர், வீரவாடி, சகடமங்கலம் ஆகிய ஊர்கள் வடிகாலாக அரசலாறு பயன்படுகின்றன. எனவே அரசலாற்றின் வடிகாலாக இருக்கிற காரணத்தினால் அரசலாற்றின் இருமருங்கிலும் மதகுகள் அமைக்கப்பட்டு துணை வடிகால் மூலம் தண்ணீரை வெளியேற்றுகிறோம். ஆனால் இப்போது நீர் ஒழுங்கி ஒன்று

கட்டப்படுமானால் அது என்ன ஆகும்? கூத்தனூர் வாய்க்கால், அதற்குப் பிறகு சலபாதி வாய்க்கால், பூந்தோட்ட வாய்க்கால், பிறகு மகாநதிபுரம் வாய்க்கால், இந்த வாய்க்கால்கள் எல்லாம் அடிபட்டுப் போய்விடும். ஆகையினால் மீண்டும் புதிய பிரச்சினை எழும்பும் வாய்ப்புள்ள காரணத்தால்தான் அங்கே ஒரு நீர்ஒழுங்கி அமைப்பது சாத்தியம் இல்லை என்று தெரிவித்தேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை. ஏதோ அமைச்சரிடத்தில் அனுமதி வாங்கியிருக்கிறேன் என்று சொன்னீர்கள், சரி கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் துணைக் கேள்விக்கு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் அனுமதி வாங்கிவிட்டேன் என்று சொல்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய வேலூர் நகருக்குள் ஓடுகிற மழைநீர்க் கால்வாயைத் தூர் எடுப்பதற்கு 80 இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள், நன்றி. பணி நடந்தது. ஆனால் 3½ கோடி ரூபாய் கேட்டிருந்தேன். இன்னும் அந்தக் கால்வாயில் பல பகுதிகள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. ஏற்கெனவே தூர் வாரிய கால்வாயினுடைய (parapet wall) கைப்பிடிச் சுவர்களை—எல்லாம் இடித்துவிட்டு, மீண்டும் அதைக் கட்டித்தராமல் விட்டுவிட்டார்கள். அதுபோல எடுத்த அந்தத் தூர் மண்ணைக்கூட அந்த இடத்திலேயே போட்டுவிட்டு, அதை அப்புறப்படுத்தாத காரணத்தினால் மீண்டும் அது கால்வாயிலேயே போய்விட்டது. அதையெல்லாம் முழுமையாகச் செப்பனிடத் தேவைப்படக்கூடிய 2½ கோடி ரூபாயை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்து எங்கள் வேலூர் முழுவதும் இருக்கக்கூடிய அந்தக் கால்வாயைத் தூர் எடுக்க ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பத்மாவிற்கு





தொகுதியின்பால் இருக்கிற அக்கறையின் காரணமாக ஒரு கேள்வி எழுதிக் கொடுத்து, அந்தக் கேள்வி தொடர்பாகப் பல விஷயங்களைச் சேகரித்து துணைக் கேள்விகளும் கேட்டு, தொகுதிக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு செயலாற்றியதைப்போல, திரு. ஞானசேகரன் அவர்கள் வேலூரின்பால் இத்தகைய எண்ணம் கொண்டு ஒரு தனிக் கேள்வி அமைத்திருந்தால் இதைவிட இன்னும் கொஞ்சம் விரிவாகவும் சொல்லி, நிதியும் தந்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

48—

### வாகன விபத்துத் தீர்ப்பாயம்

***30975—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் மோட்டார் வாகன விபத்துக்களில் நஷ்டஈடு கோரும் வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதால் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்காக மோட்டார் வாகன விபத்துத் தீர்ப்பாயம் ஒன்று திருநெல்வேலி நகரில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இப்போது மாவட்ட நீதிமன்றங்கள் 3, சப்-கோர்ட் 3, ஆக 6 நீதிமன்றங்கள்; தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றம், சப்-கோர்ட் எல்லாம் சேர்ந்து 3; கன்னியாகுமரியில் அதேபோல 3; இத்தனை நீதிமன்றங்கள் இருந்தாலும்கூட மோட்டார் வாகன விபத்துக்களை விசாரிப்பதில் காலதாமதம் ஆகி 6 ஆண்டு காலம், 7 ஆண்டு காலம் நஷ்டஈடு கிடைக்காமல் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. ஆகவே இதைக் கவனத்தில் கொண்டு நம்முடைய

[2001 ஜனவரி 24

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே திருநெல்வேலியில் Labour Court இருப்பதைப்போல இந்த 3 மாவட்டங்களுக்கும் சேர்த்து நெல்லையில் ஒரு தீர்ப்பாயம், அதாவது மோட்டார் வாகன விபத்துக்கள் நஷ்டஈடு கோரும் தீர்ப்பாயம் (Motor Accidents Claims Tribunal) அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-11-1994-ல் அனைத்து தலைமை குற்றவியல் நீதிபதிகளும், ஒவ்வொரு தலைமை குற்றவியல் நடுவர் மன்றங்களிலேயும் தீர்ப்பாயர்களாக, உறுப்பினர்களாக அமரச் செய்யப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டன. அதையேகூட நீட்டித்து, தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலே இருக்கிற நீதிபதிகள் மட்டுமின்றி மாவட்டங்களிலே இருக்கிற மற்ற நீதிபதிகள், கூடுதல் மாவட்ட நீதிபதிகள் மற்றும் சார்பு நீதிமன்ற நீதிபதிகள் கூட இந்த வழக்குகளை விசாரிக்கலாம் என்றும் அவர்களுக்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி நகரத்தில் மட்டும் தலைமை கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தலைமை குற்றவியல் நடுவர் மன்றம், தலைமை மற்றும் கூடுதல் சார்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கு மோட்டார் வாகன விபத்துக்கள் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க 10-11-1994 முதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இத்தனை நீதிமன்றங்களுக்கும் அதிகாரங்கள் இருக்கின்றபோது தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**49—**

### போக்குவரத்து அலுவலகம்

***33298—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அரக்கோணம் மக்கள் தொகை அதிகம் கொண்ட ஒரு நகரம் ஆகும். அங்கே வாகனங்கள் வாங்குவது அன்றாடம் பெருகிக்கொண்டேயிருக்கின்றது. ஆனால், அவற்றுக்கு தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கும், புதுப்பிப்பதற்கும், வரிகள் கட்டுவதற்கும் இராணிப்பேட்டைக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே அங்கே ஒரு துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆரம்பிக்கப்போகிறோம் என்று அதிகாரிகள் எல்லாம் என்னைப் பார்த்து, இடம்கூட வாடகைக்குத் தேர்வு செய்யச் சொல்லிவிட்டார்கள். ஆனால், திடீரென்று அது நிறுத்தப்பட்டது. ஆகவே, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பொதுமக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலித்து தயவுகூர்ந்து அரக்கோணம் நகரத்திலே ஒரு துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்திற்கும் இராணிப்பேட்டைக்கும் இடையில் உள்ள தூரம் 48 கிலோமீட்டர்தான். மேலும், அந்தப் பகுதியிலே உள்ள போக்குவரத்து வாகனங்களோ 768 மட்டும்தான். ஆகவே, அங்கே இப்போது துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் உருவாக்குவதற்கு வாய்ப்புகள் கிடையாது. அப்படி உருவாக்கப்பட வேண்டுமானால், கிட்டத்தட்ட 8 பேர்களை அங்கே நியமிக்க வேண்டியிருக்கும். கூடுதல் செலவு ஆகும். ஆகவே, அரசினுடைய நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு இப்போது அங்கே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் உருவாக்குவதற்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏழு தாலுகா தலைநகரங்களிலே, ஈரோடு, பெருந்துறை, காங்கேயம், தாராபுரம், சத்தியமங்கலம், கோபி ஆகிய ஆறு வட்டங்களினுடைய

[2001 ஜனவரி 24

தலைநகரங்களிலே போக்குவரத்து அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்தச் சூழ்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் அதிகாரிகளிடத்திலேயும் பவானி நகரில் ஓர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து, அத்துறை அதிகாரிகளும் இவ்வலுவலகம் ஆரம்பித்தால் இலாபகரமாகவே செயல்படும் என்று கருத்துக்களைத் தெரிவித்து, கோப்பு வந்த நேரத்திலேகூட, பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த கோரிக்கையைப் பரிசீலித்து உடனடியாக, மார்ச் மாதத்திற்கு முன்பாக, அந்த அலுவலகத்தை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு *4* ஆண்டுகளிலே *12* துணை அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி என்னிடம் வலியுறுத்தி வருவதும் உண்மைதான். அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அதுகுறித்து முடிவு எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *50*, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**50—**

### கூட்டுறவு வங்கி

***36734—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியில் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை நான் உங்களுடைய அனுமதியோடு அளிக்கின்றேன்.

ஏற்கெனவே சட்டமன்றத்திலே புதிய வட்டங்களில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மட்டுமல்லாமல், ஊரக வளர்ச்சி வங்கிகளும் தொடங்கப்படும் என்று அறிவித்ததையொட்டி, *19* வங்கிகளுக்கு NABARD அனுமதிக்காகச் சென்றது. NABARD-லே இருக்கின்ற அலுவலர்கள் மேலும் பல விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த அரசு முயற்சி எடுத்திருக்கிறது. விரைவில் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *51*, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**51—**

### நீதிமன்றத்திற்கு இடவசதி

***15070—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் மாவட்ட முன்சீப் கோர்ட் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நீதிமன்றம் நடத்துவதற்கு இடவசதி ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இயங்கி வருவதை அரசு அறியும்.

(ஆ) இந்த நீதிமன்றம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அதற்குத் தனியே கட்டடம் கட்டித் தரும் வாய்ப்பு எழவில்லை.

[2001 ஜனவரி 24

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையில் ஏற்கெனவே இருந்த கட்டடத்தில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது; அங்கே இடம் போதவில்லை. அங்கே நிறைய புறம்போக்கு இடங்கள் இருக்கின்றன, தாலுகா ஆபீஸ் இருக்கின்றது, டிஎஸ்.பி.ஆபீஸ் இருக்கின்றது. அங்கேயே ஐ.சி.டி.எஸ். சென்டர் இருக்கின்றது. இப்போது கல்லூரிகூட அங்கேதான் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. இவை அத்தனையும் அங்கே இருக்கின்ற காரணத்தினாலே, தயவுசெய்து மறுபரிசிலனை செய்து—அங்கே இருக்கின்ற இடங்களையே எடுத்துக் கொடுத்தால், எம்.எல்.ஏ. நிதியிலேயிருந்துகூட நான் கொடுக்கலாம். அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கின்ற குறிப்பில், திண்டுக்கல் மாவட்டத்தில் 16 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இதிலே வேடசந்தூரிலே இருக்கிற நீதிமன்றம் மட்டும்தான் வாடகைக் கட்டடத்திலே இருக்கிறது. மற்ற 15 நீதிமன்றங்களும் அரசுக் கட்டடத்தில்தான் இருக்கின்றன. எனவே, நிலக்கோட்டையில் அரசுக் கட்டடத்தில்தான் இருக்கிறது. அதற்காகப் புதிய கட்டடம் தேவையில்லை என்று அரசு சார்பில் எனக்குக் குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் போதவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இடம் போதவில்லை, அங்கேயே புறம்போக்கு இடம் இருக்கின்றது. அதை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டால் எம்.எல்.ஏ. நிதியிலேயிருந்துகூட பணத்தைக் கொடுத்து நாங்களேகூட கட்டடத்தைக் கட்டிக்கொள்வோம் அல்லது யாரிடத்திலேயாவது சொன்னாலும் கட்டிக் கொடுப்பார்கள். எனவே, தயவுசெய்து அதை மறுபரிசிலனை செய்து இடம் கொடுப்பதற்கான வழிவகையை அமைச்சரால் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இடம் போதவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் நீதித் துறையிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளோ அல்லது வழக்கறிஞர்களிடத்திலிருந்து அப்படியொரு வேண்டுகோளோ வந்ததாக எனக்குக் குறிப்பு தரப்படவில்லை. அதைத்தான் நான் அவருக்கு நினைவுபடுத்துகிறேன்.



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**52—**

**பயிற்சி நிலையம்**

***36805—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கைத்தறி மற்றும் நூற்பாலைகள் அதிகமிருப்பதால் ஆடை வடிவமைப்பு மற்றும் நவீன ஆடை தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்தில் தனியாக ஆடை வடிவமைப்பு மற்றும் நவீன ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் தமிழ்நாடு அரசிடம் இல்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே கைத்தறித் துணிகள் அதிக அளவிலே உற்பத்தியாகின்றன. அந்தத் துணிகளுக்குச் சரியான சந்தை இல்லாமல் அந்தத் தொழில் மிகவும் தேக்கமடைந்த நிலையிலே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஏற்ற வகையிலே அங்கே ஓர் ஆடை வடிவமைப்பு நிலையம் அமைப்பதற்குப் பயிற்சி கொடுத்தால் அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு அந்தத் துணிகளுக்கும் நல்லதொரு வணிகச் சந்தை அமையும். ஆகவே, அரசு மீண்டும் மறுபரிசிலனை செய்து அந்தப் பகுதியிலே ஓர் ஆடை வடிவமைப்புப் பயிற்சி நிலையம் அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, National Institute of Fashion Technology என்பதை தலைநகரமான சென்னையிலே மத்திய அரசு சிறப்பாக நடத்தி வருகிறது. அதில் நெசவாளர் குடும்பத்திலுடைய குழந்தைகள் படிக்கக்கூடிய வாய்ப்பை நாம் உருவாக்கியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே 3 வருட ஆடை வடிவமைப்பு, 2 வருட ஆடை தயாரிப்பு, 2 வருட பின்னலாடை முறை, 3 ½ வருட நவீன தொழில் நுட்பம் ஆகிய பட்டயம், பட்டங்கள் அதிலே பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்திலே மட்டும் இருக்கின்ற நெசவாளர் குடும்பத்து மாணவர்கள் மொத்தம் 69.43 சதவீதம் சென்னை Fashion Technology கல்லூரியிலே படிக்கிறார்கள். சேலத்தில் மத்திய அரசினுடைய தொழில் நுட்ப நிலையம் ஒன்று பெருமளவிலே சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. அதிலே படிக்கின்ற நெசவாளர் குடும்ப மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு மாதத்திற்கு ரூ.300 வீதமும், இரண்டாம் ஆண்டு மாதத்திற்கு ரூ.350 வீதமும், மூன்றாம் ஆண்டு மாதத்திற்கு ரூ.400 வீதமும் வழங்கி, அனைத்துச் செலவுகளையும் துறையே ஏற்று, சேலத்திலே இருக்கின்ற அந்தக் கல்லூரியில் நெசவாளர் குடும்ப மாணவர்கள் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறது. இதுகுறித்து என்ன முடிவு எடுப்பதாக இருந்தாலும், அது மத்திய அரசு எடுக்கக்கூடிய முடிவே தவிர மாநில அரசு முடிவு எடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. என். பெரியசாமி, மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

**53—**

**கழிவுநீரால் பாதிப்பு**

***25239—திரு. என். பெரியசாமி:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் ஆலையிலிருந்து கழிவு நீர் போகின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற புன்னக்காயல் என்ற மீனவர் கிராமம் மிகவும் பாதிக்கப்படுகிறது. புன்னக்காயல், மீனளத் துறை அமைச்சராக இருக்கின்ற அம்மையாருடைய திருச்செந்தூர் தொகுதியிலே இருக்கிறது. இலங்கை போன்ற வெளிநாட்டிலே பிடிபட்ட மீனவர்களைக்கூட காப்பாற்றுகிற நம்முடைய மீனளத் துறை அமைச்சருடைய தொகுதியில் இப்படியொரு பாதிப்பு வந்திருக்கும்போது நம்முடைய சக அமைச்சர் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டாமா, எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் தொழிற்சாலை (D.C.W) 1959ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அந்தத் தொழிற்சாலையின் கழிவு நீர் அமைப்புகளை மேம்படுத்த வேண்டுமென்று, மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆணையிட்டது. மிக அதிகச் செலவாகும் என்று கூறி உயர் நீதிமன்றத்தில் W.M.P. No. 23669/2000 மற்றும் W.P. No. 5983/96 என்ற ஆணைப்படி அந்த ஆலை தடையாணை பெற்றது. உயர் நீதிமன்றம் 12-10-2000-ல் வழங்கிய உத்தரவில் மேற்படி தொழிற்சாலை உறுதி அளித்த வண்ணம் அமிலத்தைப் பிரித்தெடுக்கும் அமைப்புக்கு மாற்றாக தற்பொழுது உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னேற்றங்களைச் செய்து அதனை ஓர் ஆண்டுக்குள் செயல்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது. அதன்படி தொழிற்சாலை வேலைகளைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் வழியாக கப்பலில், குஜராத்தைச் சேர்ந்த அம்புஜா நிறுவனம் 90 ரூபாய்க்கு சிமெண்ட் கொண்டு வந்து விற்பதற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் அனுமதி கிடைக்காததால், அந்த சிமெண்ட் கப்பல் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டுள்ளது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வியை முறையாகக் கேட்க வேண்டும். நீங்கள் நல்ல உறுப்பினர், உட்காருங்கள்.

வினா எண் 54, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர்.

**54—**

### பத்திரப் பதிவு அலுவலகம்

***38634—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, வடசேரி ஊராட்சியில் ஒரு புதிய பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, வடசேரி ஊராட்சியில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதி, வடசேரி ஊராட்சி, வளர்ந்து வருகிற ஊராட்சிகளில் ஒன்றாக இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள திருமங்கலக்கோட்டை, கிழையூர், மேலையூர், கர்ணகுடி கிழக்கு, கர்ணகுடி மேற்கு, அருமனை, முள்ளூர் பட்டிக்காடு போன்ற கிராம மக்கள் எல்லாம் பத்திரப் பதிவு செய்ய வேண்டுமானால், 26 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் தூரமுள்ள ஒரத்தநாட்டுக்குத்தான் செல்ல வேண்டும்.



2001 ஜனவரி 24]

அதைவிட ஒக்கநாடு கிழையூர் என்ற கிராமத்தில் உள்ளவர்கள் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வடுவூர் பதிவு அலுவலகத்தில்தான் பதிவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே வடசேரியைச் சுற்றியுள்ள 10 கிராமங்களை இணைத்து வடசேரியில் புதிய பதிவு அலுவலகத்தைத் திறப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற கிராமங்களை இணைத்து வடசேரி ஊராட்சியில் ஒரு சார்பதிவு அலுவலகம் அமைப்பதற்கு ஓர் ஆண்டுக்கு எவ்வளவு ஆவணங்கள் அங்கே பதிவாகும் என்று கணக்கிட்டுப் பார்த்ததில், அவர் சொல்கிற அடிப்படையில், உள்ளிக்கோட்டை, பாப்பாநாடு ஆகிய இரண்டு ஊர்களைப் பிரித்து, ஓர் ஆண்டுக்குப் பதிவாகி இருக்கின்ற ஆவணங்கள் எண்ணிக்கை 423 ஆக இருக்கிறது என்று தெரியவந்தது. ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் புதிதாகத் திறக்கப்பட வேண்டுமானால் ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 2000 ஆவணங்களாவது பதிவாக வேண்டுமென்று அரசு இலக்கு நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் அருகாமையில் இருக்கிற உள்ளிக்கோட்டை, பாப்பாநாடு ஆகிய இரண்டு ஊர்களையும் சேர்த்தால்கூட 2000 ஆவணங்கள் பதிவாகாத நிலையில், புதிய அலுவலகம் வடசேரியில் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**55—**

### குளிர்சாதன வசதி

***11506—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அரங்கத்தினை குளிர்சாதன வசதி பொருத்திய அரங்கமாக மாற்றும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை வள்ளுவர் கோட்டத்தினை குளிர்சாதன வசதி பொருத்திய அரங்கமாக மாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை.

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திற்குப் பொதுமறை தந்த அய்யன் வள்ளுவருக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த காலத்தில் வள்ளுவர் கோட்டம் அமைத்து, இன்றைக்கு சென்னைக்கு வருகின்ற தமிழக மக்கள் அனைவரும் பார்க்கக்கூடிய இடங்களில் ஒன்றாக வள்ளுவர் கோட்டம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த நினைவுச் சின்னத்தை கடந்த காலத்தில் இருந்த அரசு புறக்கணித்து அதை எவ்வளவு தூரம் சீரழிய வைக்க முடியுமோ அந்த அளவுக்கு நிலைமையை உருவாக்கிய காலகட்டம் மாறி இந்த ஐந்தாண்டுக் காலமாக தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றபின் அது நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு, அங்கே பல பொது நிகழ்ச்சிகளும் அரசு விழாக்களும் நடத்தப்படுகின்றன. மக்களும் ஆர்வத்தோடு அங்கே வந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால், அங்கே குளிர்சாதன வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்தால் இந்த அரங்கத்தில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனைவரும் முன்வருவார்கள் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை வள்ளுவர் கோட்டத்தை குளிர்சாதனம் பொருந்திய நிலைக்கு மாற்றுவதற்காக 250 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால், அந்த வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கிய கணபதி ஸ்தபதி அவர்கள் வள்ளுவர் கோட்ட அரங்கத்தினை குளிர் சாதன வசதி பொருந்திய அரங்கமாக மாற்றும்போது அதற்கேற்ப தளத்தின் உயரத்தைக் குறைக்க நேரிடும் என்றும், மேலும் அரங்கத்தின் கதவுகள், சாளரங்கள் போன்றவைகளும் அவற்றைச் சார்ந்த கலை அமைப்புகளும் பாதிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்கள். மேலும், பெரிய அளவிலான நீளம், அகலம், உயரம் கொண்டதும், காற்றோட்டத்திற்காகப் போதுமான சாளரங்களையும், கதவுகளையும் கொண்டதாக வள்ளுவர் கோட்டம்



2001 ஜனவரி 24]

அரங்கு வடிவமைக்கப்பட்டுள்ளதால், குளிர்சாதன வசதி பொருத்துவது தேவையற்றது எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் வள்ளுவர் கோட்ட அரங்கத்தினை குளிர்சாதன வசதி பொருந்திய அரங்கமாக மாற்ற, பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துரு கைவிடப்பட்டது. மேலும், வான்புகழ் வள்ளுவனுக்கு வானுயரச் சிலை அமைத்த தலைவர் கலைஞர் அவர்கள் கன்னியாகுமரி முனையில் வள்ளுவர் சிலை திறக்கின்றபோது, 133 அதிகாரங்களைக் குறிக்கின்ற வகையில் அழகான வண்ண ஓவியங்களைத் தீட்டி, அந்தக் கண்காட்சியை நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே திறந்து வைத்தார்கள். அதிலே இடம்பெற்ற படங்கள் எல்லாம் இப்போது வள்ளுவர் கோட்டத்திலே பொதுமக்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு இலட்சக்கணக்கான பேர் வந்து பார்க்கின்ற அளவுக்கு மிகச் சிறப்பு வாய்ந்த இடமாக வள்ளுவர் கோட்டம் திகழ்ந்து கொண்டிருக்கின்ற அளவுக்கு கலைஞர் அவர்களுடைய அரசு செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் வள்ளுவனுக்கு, வள்ளுவர் கோட்டம் அமைத்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். அதைப்போல, குமரி முனையிலே உலகம் போற்றும் உயர்ந்த சிலை அமைத்துத் தந்தவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட வள்ளுவர் கோட்டத்திலே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தீட்டி இருக்கக்கூடிய குறளோவியங்களை வண்ணப் படமாக எடுத்து, ஒலி-ஒளி வடிவக்காட்சி அமைத்து நம் சுற்றுலாப் பயணிகளுக்குப் போட்டுக் காட்டுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாகத்தான் வள்ளுவர் கோட்டத்திலே ஓவியங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, திருவள்ளுவரைப் பற்றிய எல்லா வகையான நூல்களும் இடம் பெறத் தக்க அளவுக்கு நூலகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வள்ளுவர் கோட்டம் இன்றைக்கு ஒரு தலைசிறந்த கலைக் கோட்டமாக விளங்குகிற அளவுக்கு நடவடிக்கை எடுத்துச் செயலாற்றி வருகிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்படும்.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தை மாதம் தரை எல்லாம் குளிரும் என்று சொல்வார்கள். மாசி மாதம் மச்செல்லாம் குளிரும் என்று சொல்வார்கள். இந்த சட்டசபைக்கூடம், வளாகம் இவற்றில் குளிர்சாதனப் பெட்டி பொருத்தியிருப்பதால் ஒரே குளிராக இருக்கிறது. என்னைப்போல உடல்நிலை சரியில்லாதவர்களுக்குக் குளிர் காய்ச்சல் வருவது மாதிரி இருக்கிறது. நீரழிவு வியாதி உள்ளவர்களுக்கு அடிக்கொருதடவை 'urine' வந்துகொண்டிருக்கிறது. அதனால், மிதமான உஷ்ணம், மிதமான குளிர் சாதனம் உள்ள ஒரு பெட்டியை இந்தச் சட்டமன்ற வளாகத்திலே பொருத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்.56 திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**56—**

**பத்திரிகையாளர் குடும்ப நல நிதி**

***39512—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறந்து விடுகிறபோது குடும்ப நல நிதி வழங்கப்படுவதைப்போல பத்திரிகையாளர்களுக்கும் குடும்ப நல நிதித் திட்டம் ஏற்படுத்த அரசு பரிசிலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) பத்திரிகையாளர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களுடைய குடும்பங்களுக்கு "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின்" கீழ் உதவி நிதி வழங்கும் திட்டம் ஏற்கெனவே



2001 ஜனவரி 24]

அரசின் நடைமுறையில் உள்ளது. பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம் 1997 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. [அரசாணை (நிலை) எண் 66, நாள் 20-3-1997] இத்திட்டத்தின்கீழ் பத்திரிகைத் துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000/- உதவி நிதியாக வழங்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் ஒன்பது பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு 2¼ இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1999 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கான நிதி உதவியை ரூ.25,000/- லிருந்து 40,000 ஆக உயர்த்தி ஆணையிட்டார்கள். [அரசாணை (நிலை) எண்.85, நாள் 28-4-1999] 1999 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஆறு பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு ரூ.40,000 வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2000 ஆம் ஆண்டு இந்நிதி உதவியை ரூ.40,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பத்திரிகையாளர்கள் பத்திரிகைச் செய்திகளைச் சேகரிப்பதற்காக கிடைக்கின்ற வாகனங்களிலே செல்கின்ற நிலைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். நம்முடைய அவையிலே நிருபராக இருந்த மாலை முரசு நிருபர் திரு. கனகராஜ் அவர்கள்கூட இரு சக்கர வாகன விபத்திலே சிக்கி மரணமுற்றார்கள். ஆகவே மிகவும் ஆபத்தான நிலையிலே பணியாற்றக்கூடிய அவர்களுடைய குடும்ப நல நிதியத்தை ரூபாய் 2 இலட்சமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையாளர்களின் குடும்ப நல நிதியத்தை

வழங்குகிற திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நான்காண்டு காலத்திலே தொடர்ந்து 25,000, 40,000, 50,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். தொடர்ந்து 5-வது முறையாக, முதல்வர் கலைஞர் அவர்கள் பணியாற்றுகிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்கள் எல்லாம் நிறைவேறுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி, (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மூலக் கேள்வி கேட்டவரே நா.பெரியசாமி அவர்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை மாதிரி உறுப்பினர்கள் என்னைச் சுற்றி நிற்பதால் இத்தகைய பிரச்சினை ஏற்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகிற குடும்ப உதவித் திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் தகவல் தொடர்புத் துறையில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பிரிண்டிங் மீடியா, எலக்ட்ரானிக் மீடியா-வில் பணிபுரியக்கூடிய பத்திரிகையாளர்களுடைய, செய்தியாளர்களுடைய எண்ணிக்கை மிகவும் உயர்ந்த அளவிலே இருக்கிறது. அதிலேகூட 20 ஆண்டுகாலம் ஒரு பத்திரிகை நிறுவனத்திலே பணிபுரிவது என்பது இன்றைய காலகட்டத்திலே மிகுந்த இடர்பாடுகளைக் கொண்டுள்ளது. அதனால் இந்தத் துறையினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அதில் பணியாற்றக்கூடிய பத்திரிகையாளர்கள், செய்தியாளர்களுடைய எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு ஒரு சிறப்புத் திட்டம் வகுத்து, 20 ஆண்டுகள் என்றிருப்பதை 5 ஆண்டுகாலமாகக் குறைத்து, அந்த உதவித் திட்டத்தை வழங்குவதற்கு, மரணம் சம்பவிக்கும்போது மட்டும் கிடைக்கக்கூடிய உதவித் தொகையாக அல்லாமல், அவர்கள் பணியாற்றுகிற பணிக் காலத்தைக் கருத்திலே கொண்டு தொடர்ந்து கிடைக்கக்கூடிய உதவித் தொகையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய்வாய்ப்படுகின்ற காலகட்டங்களில் 20 ஆண்டுகள் என்றில்லாமல் 5 ஆண்டுகள் என்று இருந்தாலும் போதும் என்று விதியிருக்கிறது. எனவே 20 ஆண்டுகாலமாவது பணியாற்றினால்தான் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அரசுப் பணியாளர்கள்கூட 58 வயதுவரை பணியாற்ற வேண்டும் என்பதைப்போல எந்த ஒரு அமைப்பாக இருந்தாலும் குறிப்பிட்ட கால வரம்பு இருந்தால்தான் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருக்கும். இருந்தாலும் எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை பத்திரிகையாளர்களோடு கலந்துபேசி, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சருடைய கருத்தறிந்து செயலாற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்திலே மீடியா என்பது மிக அத்தியாவசியமானதாக இருக்கிறது. அதே நிலையிலே அரசியல் கட்சிகளுடைய நிலைப்பாடுகளை, தலைவர் பெருமக்களுடைய, பயணங்களை, கருத்துக்களை, அரசினுடைய செய்திகளை, அரசு விளம்பரங்களை அரசுத் திட்டங்களையெல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடியவர்கள் பத்திரிகையாளர்கள், இவர்கள் இரவு பகல் பாராமல் உழைக்கிறார்கள். எந்த இடத்தில் என்ன நடக்குமோ என்று கூடத் தெரியாமல், தங்களுடைய உயிரைத் துச்சமென நினைத்து, செய்தி சேகரிக்கின்ற நேரத்திலே, எந்த நிலை வேண்டுமானாலும் ஏற்படும் என்றெல்லாம் இருக்கிற காரணத்தாலே—அதேநேரத்திலே அவர்கள் வசதி படைத்தவர்களும் கிடையாது—அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற நோக்கத்திலே கால அளவைக் கருத்தில் கொள்ளாமல், எந்த நேரத்திலே விபத்து ஏற்பட்டாலும்—பணியிலேயிருந்து ஓய்வு பெற்றாலும்கூட—அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக தற்போது இருக்கக்கூடிய 40,000 ரூபாய் என்பதை ஒரு இலட்சமாக உயர்த்த அரசு முன்வருமா என்பதை வலியுறுத்திக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையாளர்கள் நலன் காப்பதில் இந்தியாவிலேயே

கலைஞருடைய அரசுக்கு நிகரான அரசு எதுவும் கிடையாது. கடந்த காலத்தில் பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது ஊரறிந்த விவகாரம். பத்திரிகையிலே எழுதியவர்கள், முரசொலி செல்வம் போன்றவர்கள் இங்கே கூண்டிலே நிறுத்தப்பட்டார்கள். சில பத்திரிகையாளர்கள் அரசைப் பற்றி விமர்சனம் செய்தபோது, ஆட்டோக்களில் அடியாட்களை அனுப்பி எமலோகத்திற்கு அனுப்பப்பட்ட காலம் எல்லாம் உண்டு. ஆனால் இந்த ஆட்சியில் அப்படிப்பட்ட நிலைகள் அறவே இல்லை. இன்னும் சொல்லப்போனால், பத்திரிகையாளர்களுக்கு ஏதாவது ஒரு மூலையிலே பாதிப்பு என்றால், உடனடியாக நம்முடைய முதலமைச்சரவர்கள் கவனம் செலுத்தி, அதற்கு நிவாரணம் தருகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். குடும்ப ஓய்வூதியம் வழங்குகிற திட்டத்தையே கலைஞர்தான் உருவாக்கினார்கள். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல, ரூ.25,000-லிருந்து ரூ.50,000 ஆக வந்திருக்கிறது. ஆண்டுக்காண்டு நிதியை உயர்த்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, வருகின்ற காலங்களில் அப்படிப்பட்ட நிதியை உயர்த்தி வழங்குவதற்கான ஒரு சூழ்நிலையையும் இந்த அரசு உருவாக்கித் தரும். அதுமாத்திரமல்லாமல், செய்தியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கியிருக்கிறோம். அங்கீகார அட்டைகள் இந்த ஆண்டு 403 பேர்களுக்கு வழங்கியிருக்கிறோம். இலவச பஸ் பாஸ் வழங்குகிறோம். அதேபோல மருத்துவமனையில் இலவசமாக வைத்திய வசதி செய்து கொடுக்கிறோம். 50 சதவிகிதம் அளவுக்கு இரயில் பாஸ் இலவசமாக வழங்கும் வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம் குடியிருப்பு மனைகளை வழங்கியிருக்கிறோம். வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். வீடுகளையும் கட்டித் தந்திருக்கிறோம். ரூபாய் 50 இலட்சம் வரையில் வீடு கட்டுவதற்கு மானியமாகவும் இந்த அரசு வழங்கியிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் பத்திரிகையாளர் நலன் காக்கும் அரசாக கலைஞர் அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியசாமி, எவ்வளவு நேரம்தான் கேட்டுக் கொண்டேயிருப்பீர்கள்? திரு சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் உள்ளது





என்று சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்திரிகையாளர்கள் தங்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று கிட்டத்தட்ட 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லி, சமீபத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் வந்தபோது அவரிடம் மனு கொடுத்தார்கள். நானும் சென்றிருந்தேன். முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு இருக்கிறது? தமிழகத்தில் எத்தனை மாவட்டங்களில் பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்கவில்லை. வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை எடுத்து அது நம்முடைய C.L.A. அவர்களிடத்தில் இப்போது பரிசீலனையில் இருந்துகொண்டு இருக்கிறது. அதேபோல, திண்டுக்கல், தருமபுரி, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருக்கிறோம். மேலும் பல மாவட்டங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுத்து தொடர்ந்து பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்துவதோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சென்னையில் திருவான்மியூர் அருகில் கொட்டிவாக்கத்தில் 136 செய்தியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல, திருச்சிராப்பள்ளி, கொட்டப்பட்டு பால்பண்ணை அருகில் அவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அங்கேயும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். அதேபோல குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்படுகிற வீடுகளிலிருந்து அவர்களுக்கு வீடுகளை வழங்கவும் நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கொட்டிவாக்கத்தில் மொத்தம் 50 இலட்சம் ரூபாய் அரசு மானியம் அளித்திருக்கிறது. ஒருவருக்கு அதிகபட்சமாக 40 ஆயிரம் ரூபாய் வரையில் மானியம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த வகையில் வீடுகளை கட்டித் தந்திருக்கிறோம். நம்முடைய பேரவைத் தலைவருடைய பெருமுயற்சியால் மதுரையில் இருக்கிற செய்தியாளர்களுக்கு மதுரை, தல்லாகுளம் கிராமத்தில் 3.70 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி 70 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பு மனைகளாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எத்தனை பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது? இல்லையென்றால் அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயிருந்தும் வீட்டுமனை வேண்டுமென்று பத்திரிகையாளர்கள் விண்ணப்பம் கொடுப்பார்கள். அப்படி விண்ணப்பம் கொடுக்கிறபோது, யார் யாருக்குத் தகுதி இருக்கிறதோ, அந்தத் தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்கப்படும். குறைந்தபட்சம் அந்தப் பத்திரிகையிலே நிரந்தர ஊழியராகப் பணியாற்றியிருக்க வேண்டும். ஒருவர் இரண்டாண்டாவது பணியாற்றியிருக்க வேண்டும். அதுமட்டும் அல்லாமல், அந்தப் பத்திரிகை நிருவாகத்தினுடைய அனுமதிக் கடிதம் மற்றும் எங்களிடத்தில் பணியாற்றி வருகிறார் என்பதற்கான சான்றிதழ் வேண்டும். அதேநேரத்தில் வசதி வாய்ப்பு உள்ளவராக இருந்தால் அந்தந்த நிலத்திற்கு உரிய கிரயத்தைப் பெற்றுக்கொண்டும், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தால் இலவசமாகவும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களுக்கான குடும்ப நல உதவித் திட்டத்தை பத்திரிகையாளர்களோடு கலந்து பேசி எளிமைப்படுத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது பத்திரிகைத் துறையிலும், செய்தித் துறையிலும் உரிய வேலைக்கு பணம் பெற்றுக்கொள்கிற அல்லது பணம் கொடுத்துச் செய்திகளை வாங்குகிற ஒரு முறை இருக்கிறது. பத்திரிகை நிறுவனத்திற்கும் அந்தப் பணியைச் செய்யக்கூடிய பத்திரிகைக்காரருக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. Freelancer என்று சொல்வார்கள். அப்படிப்பட்டவர்களும் இந்தத் திட்டத்திலே இடம் பெறத்தக்க வகையில் அதை மாற்றி அமைக்க வேண்டும். ஏனென்றால், ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதால் பிற துறைகளில் ஏற்பட்டுள்ள ஆபத்து பத்திரிகைத் துறையிலும், ஊரகத் துறையிலும் வந்திருக்கிறது. எனவே, பத்திரிகை நிறுவனத்தில் எந்த அடிப்படையில் தொடர்பு வைத்து இருந்தாலும்கூட அவர்களுக்கும் குடும்ப நல உதவி கிடைக்கும் வகையில் திட்டத்தை மாற்றி அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டத்தில் பயன்பெற வேண்டுமானால் விதி என்று ஒன்று இருந்தாக வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகிறவர்களுக்கெல்லாம் வழங்க வேண்டுமென்று சொன்னால் பெயரளவிலே சிலபேர் பத்திரிகையைப் பதிவு செய்துகொண்டு பத்திரிகையை நடத்தாமல் இருக்கிறார்கள். சிலபேர் 100 பத்திரிகையை அடித்துவிட்டு விளம்பரம் மட்டும் செய்கிறார்கள். ஆகவே இந்த நிதியைப் பெறுவதற்கான ஒரு தகுதி வாய்ந்த பத்திரிகையாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 10 ஆயிரம் பிரதிகளாவது வெளிவருகிற நிலை இருக்க வேண்டும். பத்திரிகையிலே நிரந்தரப் பணியாளர்களாக இருக்கிற நிலை இருந்தால்தான் அப்படிப்பட்ட உதவிகளைச் செய்வதற்கான வாய்ப்பு இருக்கும். இல்லாவிட்டால் முறைகேடுகள் நடைபெறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கும். ஒருவர் நினைத்தால் என்னிடத்திலே பணியாற்றுகிறார் என்று சொல்லி அந்த உதவியைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும். எனவே, சட்ட ரீதியாக விதிமுறைகளின்படிதான் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டிவாக்கத்தில் பத்திரிகையாளர்களுக்கு 125 வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு 3 ½ கோடி ரூபாய் அளவிற்குக் கடன், வங்கியிலிருந்தும் மற்ற துறைகளிலிருந்தும் வாங்கி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் எல்லாம் மிகவும் குறைந்த சம்பளம் பெறுகின்றவர்கள் என்பதால் இந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு நம்முடைய அரசு ஏதாவது முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்படுகிற வீடுகள். ஆனாலும், இவர்களுக்கு பத்திரிகையாளர்கள் என்ற முறையில் அரசு மானியம் வழங்குகிற அடிப்படையிலே, ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாய் அதிகபட்சம் மானியத்தை வழங்கியிருக்கிறோம். மொத்தம் ரூ.50 இலட்சம் வரையில் மானியத்தை வழங்கியிருக்கிறோம். ஆகவே, கடனைத் தள்ளுபடி செய்வதா, வேண்டாமா என்பது அந்தத் துறை எடுக்க வேண்டிய முடிவு. அதே நேரத்தில், வீடு கட்டிக் கொடுப்பதே பெரிய காரியமாக இருக்கிற இந்தக் காலகட்டத்தில் கட்டப்படுகிற வீடுகளுக்கெல்லாம் மானியம் வழங்குவதே ஒரு பேருதவியாக இருக்கலாம். கடனைத் தள்ளுபடி செய்துகொண்டே போனால் மற்ற காரியங்கள் எப்படி நடக்கும் என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 57, திரு. ம. சண்முகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**57—**

### கோழி இறைச்சித் தொழிற்சாலை

***29479—திரு. ம. சண்முகம்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, உடுமலைப் பகுதியில் கறிக்கோழி இறைச்சியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய ஒரு தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லுக்கு அடுத்தபடியாக பொள்ளாச்சி, உடுமலை, கிணத்துக்கடவு, வால்பாறை பகுதிகளிலே மிக அதிக அளவிலே கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 25 இலட்சம் கிலோ வாரம்தோறும் அங்கே உற்பத்தியாகிறது. ஆனால், கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக விலை வீழ்ச்சியின் காரணமாக, அந்தக் கோழி உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் எல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே உற்பத்தியாகின்ற கறி, இறைச்சியைப் பதப்படுத்துகின்ற ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பது மறுபரிசீலனை செய்யப்படுமா எனவும், அதே வேளையில் தனியார் பதப்படுத்துகின்ற இறைச்சிக்கு 8 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. —அந்த வரி ரத்து செய்யப்படுமா எனவும் அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு, பல்லடம் ஆகிய பகுதிகளிலும் மற்றும் மாவட்டத்தில் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் வாரம் ஒன்றுக்கு சுமார் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட கறிக்கோழி குஞ்சுகள் அங்கே உள்ள சுகுணா, பயனீர் போன்ற 6 பெரிய தனியார் குஞ்சு பொறிப்பகங்கள் மூலம் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தியாகும் கோழிகள் தமிழ்நாட்டிற்குள் மட்டுமல்ல, கேரளா, கர்நாடகா போன்ற வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. கறிக்கோழிகளைப் பொறுத்தவரையில் அதன் இறைச்சியைப் பதப்படுத்தி உண்ணுகின்ற பழக்கம் பெரும்பாலும் நம்முடைய நாட்டில் இன்னும் உருவாகவில்லை. வெளிநாடுகளில்தான் பதப்படுத்திப் பயன்படுத்துகின்ற வழக்கம் இருந்து வருகிறது. இந்நிலையில் வெளிநாடுகளை எடுத்துக் கொண்டால், குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் கோழிகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு நெஞ்சு, இறக்கை பகுதிகளை அவர்கள் பயன்படுத்திய பின் கோழிகளுடைய கால், தொடை பாகங்களை அவர்கள் கழிவு செய்கிறார்கள். அந்தக் கழிவு செய்யப்பட்ட கால், தொடை பாகங்கள் ஒரு கிலோ சுமார் ரூ.9 என்ற அளவில் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் உற்பத்தியாகும் கறிக்கோழிகள் இறைச்சி விற்பனையைவிட வெளிநாடுகளின் கோழி இறைச்சி உலக சந்தையில் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அவை நம் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டால் தமிழ்நாட்டில் கோழி உற்பத்தியாளர்களுக்கு பெரும் பாதிப்பையும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தும். இந்த நிலையில் மாநில அரசு, உற்பத்தியாகும் கறிக்கோழி இறைச்சியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வது லாபகரமாக இருக்குமா என்பது

[2001 ஜனவரி 24

முழுமையாக எல்லாக் கோணங்களிலும் கண்டறியப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. மேலும், நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் கோழி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க ரூ.10 கோடி முதலீடும் அதற்கு வேண்டிய இடவசதிகளும் தேவைப்படுகின்றன. இந்நிலையில் இது லாபகரமான தொழிலாக அமையுமா என்பது குறித்து அரசு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**58—**

**கால்நடை மருத்துவமனை**

***30615—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், கொசவப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே,

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம் கொசவப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, வட மதுரை ஒன்றியம், கொசவப்பட்டியிலிருந்து வடமதுரை சுமார் 7 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. கொசவப்பட்டி பகுதியில் சுந்தரபுரி, நல்லமனார்கோட்டை, எட்டிகுளத்துப்பட்டி, லக்கம்பட்டி ஈ.புதூர் போன்ற பகுதிகளிலே நிறைய கால்நடைகள்



2001 ஜனவரி 24]

இருப்பதால் அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசிலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 நிதி ஆண்டில் புதிய கால்நடை மருந்தகங்கள், புதிய மருத்துவமனைகள் தொடங்க அரசின் சார்பில் நிதி ஒதுக்கப்படவில்லை. என்றாலும் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தொகுதி வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் வடமதுரை, அய்யலூர் ஆகிய 2 இடங்களில் கால்நடை மருந்தகங்களும், பாடியூர், கானப்பாடி, வெள்ளை பொம்மன்பட்டி, வெள்ளம்பட்டி, தெள்ளம்பட்டி கோவில் ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே குளத்தூர் வாசத்தூர், மேல்வார்கோட்டை, ஆண்டிப்பட்டி, பாறைப்பட்டி, ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை அடிப்படையில் அந்தப் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டும் எதிர்வரும் ஆண்டுகளில் பரிசிலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 59, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**59—**

**பெண்கள் உயர்நிலைப்பள்ளி**

***27018—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, பூலாம்பாடியில் ஆதிதிராவிடர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் தொகுதி, பூலாம்பாடியில் ஆதிதிராவிடர் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 60, திரு. சி. கோபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.*

**60—**

**நடுநிலைப்பள்ளி**

***37263—திரு. சி. கோபு:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அணைக்கட்டு தொகுதி மகமதுபுரம் கிராம ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளியினை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அணைக்கட்டு தொகுதி, மகமதுபுரம் கிராம ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளியினை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

**வாக்காளர் பட்டியலில் பெரும்பாலானோர் பெயர்கள் விடுபட்டுள்ளது மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படாமை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்காளர் பட்டியலில் பெரும்பாலானோர் பெயர்கள் விடுபட்டுள்ளது மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்படாதது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் ஒத்திவைப்புத் தீர்மானமும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஜி.கே. மணி ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. சி. வேலாயுதன் திரு. சைதை கா. கிட்டு, திரு. ந.பூ. இராமஜெயம் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பும் கொடுத்து இருக்கின்றார்கள். எல்லாவற்றையும் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், மாநிலத் தேர்தல் ஆணையம் அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. இருந்தாலும் இது மக்கள் மத்தியிலே பரவலாகப் பேசப்படுகின்ற பிரச்சினை என்ற காரணத்தால், நம்முடைய மாநிலத் தேர்தல் ஆணையாளர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை அறிந்துகொள்ள இங்கே வர வேண்டுமென்று கேட்டிருந்தேன். அவர்களும் வந்து இருக்கின்றார்கள். ஆகவே, உறுப்பினர்கள் சுருக்கமாகத் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டு, திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுக்கக்கூடிய பணிகள் மிக வேகமாக நடப்பதாகச் சொன்னாலும்கூட, உண்மையிலேயே 40 சதவீதம் பேருக்குத்தான் சரியான வாக்காளர் அடையாள அட்டைகளை அந்த ஆணையம் கொடுத்து இருக்கிறது. 60 சதவீதம் பேருக்கு இன்னும் கொடுக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சில மாவட்டங்களிலே 65 சதவீதம் கொடுத்துவிட்டோம் என்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நம்முடைய தேர்தல் ஆணையத்திற்குச் சொன்னாலும்கூட, அதிலே உள்ள பல குளறுபடிகள் பற்றி சில பத்திரிகைகள் மிகத் தெளிவாகவே எழுதின. குழப்பத்திற்கு மறு பெயர் தேர்தல் ஆணையமே என்று கூறுமளவுக்கு நடக்கக்கூடிய நிகழ்வுகளை எல்லாம் சொல்லி, தேர்தல் ஆணையம் பல முறைகேடுகளைச் செய்து இருக்கிறது என்பதை அவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2001 ஜனவரி 24

கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய வேலூரை எடுத்துக் கொண்டீர்கள் என்று சொன்னால், 48 வார்டுகள் அடங்கியது அது. நேற்றுகூட எனக்கு வேலூரிலிருந்து 15 முறை தொலைபேசி செய்தி வந்தது. எங்களுடைய பெயர்களை விட்டிருக்கிறார்கள், 1600 நபர்களை விட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சென்ற தேர்தலுக்கு முந்தைய தேர்தலில், நாடாளுமன்ற வேட்பாளராக இருந்த பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர் மோகன் என்பவருடைய பெயரும் அவருடைய குடும்பத்தினரின் பெயர்களும்கூட முழுமையாக விடுபட்டு இருக்கின்றன. இப்படி உயிரோடு இருக்கிறவர்கள், ஆயிரம், 1600 நபர்களின் பெயர்களை ஒவ்வொரு வார்டிலும் விடுகிறார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட 48 வார்டுகளிலே 40 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் வாக்காளர்கள் விடுபடக்கூடிய ஒரு அபாயம் என்னுடைய வேலூர் நகரைப் பொறுத்தவரையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் வேடிக்கை என்னவென்று சொன்னால், இராமலிங்கம் என்று வாக்காளர் அட்டையிலே பெயர் இருக்கிறது; ஆனால் பெண்ணின் படம் இருக்கிறது. அந்த ஆதாரத்தைக்கூட நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களிடம் காலையிலே காட்டினேன். அதேபோல் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆண், பெயர் இராமலிங்கம் என்று போட்டுவிட்டு, ஒரு பெண் படம். . . . . . .

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு ஒன்றும் ஆதாரம் காண்பிக்க வேண்டாம். நாடு பூராவும் தெரிந்த உண்மைதான் இது. ஏகப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன. ஆகையினால் இதைக் கட்சிக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம். எல்லாத் தொகுதிகளையும் இது பாதித்திருக்கிறது. நீங்கள் இப்போது சொன்னீர்கள். என்னுடைய தொகுதியிலேயே, என்னுடைய மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டுக் கேட்டேன். 40,000 வாக்காளர்கள் பெயர்களை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதனால், என்ன, ஏது, எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்று மட்டும் பேசுங்கள். நம்முடைய மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. ஆகவே, தேர்தல் ஆணையாளரை எங்களுடைய உறுப்பினர்களுடைய கருத்தைக் கேட்க தயவுசெய்து வர வேண்டும் என்று சொல்லியிருந்தேன் அவர்களும் வந்திருக்கிறார்கள். ஆகையினால் சுருக்கமாக நீங்கள் அந்தக் கருத்தை மட்டும் பேசுங்கள்.



2001 ஜனவரி 24]

**திரு. சி. ஞானசேகரன்:** சரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல 77 வயது என்று அதிலே குறிப்பிட்டுவிட்டு 22 வயது வாலிபருடைய படத்தைப் போட்டிருக்கிறார்கள். இப்படிப் பல குளறுபடிகள். (மணியடிக்கப்பெற்றது) ஏன் ஏற்பட்டது இந்தக் குளறுபடிகள் என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், இதுமாதிரி பெயர் தவறாகப் போட்டிருக்கிறார்கள். ஆண், பெண் இவையெல்லாம் Obvious mistake, it has to be rectified. நீங்கள் Larger point-க்கு வாருங்கள். 40,000 வாக்களார்கள் பெயர்களை, 50,000 வாக்காளர்கள் பெயர்களை எடுத்து விட்டார்கள் என்று பேசிக்கொள்கிறார்களே, அதைப்பற்றிப் பேசுங்கள். ஏனென்றால், சென்னையிலே சைதாப்பேட்டை தொகுதியில் மாத்திரம்— அடுத்து உறுப்பினர் கிட்டு பேசப் போகிறார்—80,000 பெயர்களை எடுத்துவிட்டதாகப் பேசுகிறார்கள். ஆகையினால் நீங்கள் அந்தக் கருத்தைப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் வலியுறுத்த வருகிறேன். வேலூர் நகரைப் பொறுத்தவரையிலே 50,000 வோட்டுகளுக்கு மேலே போகிறது. மேலும் எனக்கு 4 பேரூராட்சிகள், 8 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கே 40,000 ஓட்டுகள் போனால் மொத்தம் 90,000 வோட்டுகள் என்னுடைய தொகுதியிலேயே போகிறது. எல்லோரும் உயிரோடு இருக்கிறவர்கள், permanent Address-லே குடியிருக்கிறவர்கள். அதைவிட வேடிக்கை ஒன்றை நான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொல்வது என்று சொன்னால், ஏற்கெனவே புகைப்படம் ஒட்டிய வாக்காளர் அடையாள அட்டையைக் கொடுத்துவிட்டு, அந்தப் பெயரை எடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே உயிரோடு இருந்து கொண்டிருக்கிறவர்களுக்கு புகைப்பட அட்டையைக் கொடுத்துவிட்டு, அந்தப் பெயர்களையும் எடுத்திருப்பதுதான் ஏன் என்று எங்களுக்குப் புரியவில்லை. இவ்வளவு குளறுபடிகளும் நடப்பதற்குக் காரணம் சரியான பணியாளர்களை இவர்கள் நியமிக்கவில்லை. பணியாளர்கள் போதிய அளவில் இல்லை. 'எல்காட்' மூலம் படம் எடுக்கிறார்கள். இவ்வளவு தவறுகள் ஏன் வந்தது என்றால், அரசு 'எல்காட்'க்கு ஒப்பந்தம் கொடுக்கிறது. எல்காட் Online system-ல் புகைப்படம் எடுப்பதாகச் சொல்கிறார்கள். 10 ரூபாய் ஒரு படம் எடுப்பதற்கு என்று இவர்கள் fix செய்தால், sub-contract-ல் 2 ரூபாய்க்கு, 3 ரூபாய்க்குக் கொடுத்து, அதனால்

புகைப்படமே சரியாகத் தெரியாத அளவுக்கு இருக்கின்றது. இப்படிப்பட்ட குளறுபடிகளைச் செய்து கொண்டிருக்கக்கூடிய தேர்தல் ஆணையம், எப்படித் தேர்தலை நடத்தப்போகிறது?

மொத்தமே எனக்கிருப்பது *1,90,000* ஓட்டுகள்தான். அதிலே *90,000* ஓட்டுகள் போய் விட்டது என்றால் பிறகு நாம் எப்படித் தேர்தலை நடத்தப் போகிறோம்? இது என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பஞ்சாயத்து தேர்தல் மாதிரி வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஈரோடு தொகுதியை எடுத்துக் கொண்டாலும் சரி, திருவண்ணாமலையை எடுத்துக்கொண்டாலும் சரி, உறுப்பினர் *(திரு ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரனிடம் ஏதோ கூறினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறேனே! நீங்கள் ஏன் அவரிடம் ஒத்து வாசிக்கிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** அண்ணா நகர், இதுபோன்று பல இடங்களிலே... *(குறுக்கீடு)*

**திரு. ஜி. பழனிசாமி:** சத்துவாச்சேரியிலே நிற்கிறார், அதனால்தான் நான் சொன்னேன்.

*(உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், திரு. சி. ஞானசேகரனிடம் ஒரு தாளைக்கொடுத்தார்.)*

**திரு. சி. ஞானசேகரன்:** புரசைவாக்கம் தொகுதியிலே மட்டும் *96,000* ஓட்டுகள் விடுபட்டிருக்கின்றன என்று நம்முடைய அருமை நண்பர் ரங்கநாதன் அவர்கள் சொல்கிறார். இதுபோன்று பல பேருக்கு அந்தக் குறை இருக்கிறது. இவ்வளவு குறைகளையும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தத் தொகுதி, அந்தத் தொகுதி என்று பேசிப் பிரயோசனம் இல்லை. தமிழ்நாடு முழுவதும் இது பிரச்சினையாக இருக்கிறது. என்ன காரணம் என்று கேட்டு முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தேர்தல் ஆணையம் போர்க்கால அடிப்படையிலே நம்முடைய அரசாங்கத்தோடு co-ordinate செய்து, பணியாளர்களைப் போதிய அளவில் பெற்று, வாக்காளர் அட்டைகளை



வழங்க வேண்டும். ஓரிடத்திற்கு படம் எடுக்கப் போகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். போட்டோ எடுக்கப் போகிறபோது, இவர்கள் போதிய கேமராமென்களை வைத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். போதிய அளவிற்கு இவர்கள் பிலிம் எடுத்துக்கொண்டு போக மாட்டேன் என்கிறார்கள். அதனால் பாதிப் பேர்களை போட்டோ எடுக்கிறார்கள், மீதிப் பேர்களை விட்டுவிடுகிறார்கள். சில இடங்களிலே சரியான விளம்பரம் இல்லாமல் புகைப்படம் எடுக்கப் போகிறபோது ஆட்களே வரமாட்டேன் என்கிறார்கள். ஒரு வார காலத்திற்கு முன்னாலேயே இந்த இந்த இடங்களில் போட்டோ எடுக்கப்படும் என்று விளம்பரம் செய்ய வேண்டும். அதேபோல *1,50,000* வாக்காளர்கள் இருக்கிற தொகுதிகளுக்கும் *3* நாட்கள், *3* இலட்சம், *4* இலட்சம் வாக்காளர்கள் இருக்கக்கூடிய தொகுதிகளுக்கும் மூன்று நாட்கள் என்று வரையறை செய்கிறார்கள். அப்படி இவர்கள் வரையறை செய்யக்கூடாது. வாக்காளர்களுடைய எண்ணிக்கையை வைத்து, இவ்வளவு பணியாளர்கள் இருந்தால்தான், இவ்வளவு கேமராக்கள் இருந்தால்தான் படம் எடுக்க முடியும் என்கிற நல்ல நெறிமுறைகளை இவர்கள் முதலிலே வகுத்துக்கொள்ள வேண்டும். செத்துப் போனவர்களின் பெயர்களை எடுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஊரில் இல்லாதவர்கள் பெயர்களை எடுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம். ஆனால் உயிரோடு இருக்கக் கூடியவர்கள், அதேபோல சில பேர் வீட்டைப் பூட்டிக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசி முடியுங்கள் என்றேன். நீங்கள் இதுதான் சான்ஸ் என்று புகுந்து விளையாடுகிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** உரையை முடித்து விடுகிறேன். இந்த... *(குறுக்கீடு)*

*(உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், திரு. சி. ஞானசேகரனிடம் ஒரு தாளைக் கொடுத்தார்.)*

**திரு. சி. ஞானசேகரன்:** Online...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், இது முறையல்ல. அவருக்குப் பதிலாக நீங்கள் பேசலாமே, என்னிடம் அனுமதி வாங்கிக் கொண்டு. இது என்ன? அவர் பேசும்போது தாளைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Online-ல் போட்டோ எடுக்கக்கூடிய நெறிமுறைகளைக் கொஞ்சம் சீரமைத்து — ஏனென்றால் இந்த சிஸ்டம் இப்போது utter failure — கொஞ்சம் நெறிமுறைப்படுத்தி, போதிய பணியாளர்களைப் போட்டு, போதிய கேமராக்களைக் கொடுத்து விடுபட்டுப் போய் இருக்கிற அத்தனை நபர்களுக்கும் வாக்காளர் அட்டைகள் வழங்க வேண்டும்.

இன்னும் மூன்று மாத காலத்தில் தேர்தல் வரப் போகிறது. தேர்தல் ஆணையம் மிக வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுத்தால்தான் இதைச் செய்து முடிக்க முடியும். ஆகவே இன்னும் ஒரு மாத காலத்திற்குள் விடுபட்டிருக்கக்கூடிய அத்தனை நபர்களையும் கணக்கெடுத்து உடனடியாக அவர்களை போட்டோ எடுத்து, அடையாள அட்டை வழங்கி, தேர்தல் நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தேர்தல் அதிகாரி அடிக்கடி ஒரு மிரட்டல் கொடுத்துக்கொண்டிருக்கிறார். புகைப்படம் இல்லாதவர்களுக்கு ஓட்டு இல்லை என்று சொல்கிறார்.

*(முற்பகல் 10-40)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** புகைப்படம் இல்லாதவர்களுக்கு, பழைய வாக்காளர் பட்டியலை வைத்து வாக்கு நிச்சயமாகப் போடுவதற்கான ஒரு வழி முறையை இந்த அரசும் சரி, தேர்தல் ஆணையமும் சரி வகுத்துக் கொடுத்தால்தான் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்று சொல்லி தேர்தல் ஆணையத்தின் மாநில தேர்தல் ஆணையர் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சைதை கா. கிட்டு.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் அட்டை சரிபார்ப்பதில் தொடர்ந்து பல்வேறு குழப்பமான சூழ்நிலை மக்கள் மத்தியிலே உருவாகியிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சென்னையிலே உள்ள 12 தொகுதிகளிலே நூறு சதவீதம் வாக்காளர்களை சரிபார்க்கப்போகிறோம் என்று சொல்லி — 26 இலட்சம் வாக்காளர்கள் என்று ஏற்கெனவே அவர்கள் கொடுத்த பட்டியலில் இருக்கிறது—இப்போது 15 இலட்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள். 11 இலட்சம் பேர்கள் இல்லை, அவர்களை delete





பண்ணியிருப்பதாக அவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்திலே சொல்லி இருக்கிறார்கள். 12 தொகுதிகளிலே 11 இலட்சம் வாக்காளர்கள் இல்லை என்று அவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்திலே சொல்லியிருக்கிறார்கள். Electorol roll சரிபார்ப்புப் பணிக்குப் போனவர்கள், கணக்கெடுக்கப் போனவர்கள் மாடி ஏறவில்லை, மாடி ஏறிப்போய் சரிபார்க்கவில்லை. பல பகுதிகளுக்குப் போகவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சைதாப்பேட்டையில் 1,15,000 வாக்காளர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள், மொத்தம் 2,85,000 வாக்காளர்கள். அதிலே 1,15,000 வாக்காளர்கள் இல்லை என்று அவர்களுடைய கணக்கிலே சொல்லி இருக்கிறார்கள். இப்படிச் சொல்லி இருக்கிறார்களே என்று எல்லா பள்ளிகளிலும் தொங்கவிடப்பட்டிருக்கிற வாக்காளர் பட்டியலைப் பார்த்தால் 140-வது வட்டத்திலே சி.ஐ.டி. குவார்டர்ஸ் 109-வது வாக்கு சாவடியைப் போய் பார்த்தால், அந்த சி.ஐ.டி. குவார்டர்சிலே 284 பேர்தான் மொத்தமே இருக்கிறார்கள். அந்த கவர்மெண்ட் குவார்டர்சிலே யாருமே இல்லை என்று, அங்கே போகாமலேயே அதை அடித்துவிட்டு வந்துவிட்டார்கள். அதுபோல 136-வது வட்டத்திலே ரயில்வே பார்டர் தெருவில் 2400 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அதிலே 2100 வாக்காளர்கள் தொடர்ந்து இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

1 முதல் 340 கதவிலக்கம் வரை 2100 வாக்காளர்கள் இல்லை, மொத்தமே 300 வாக்காளர்கள்தான் என்ற புள்ளிவிவரத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதுபோல 141 வது வட்டத்திலே உள்ள ஐ.ஐ.டி. குவார்டர்ஸ்-ல் மத்திய சர்க்கார் ஊழியர்கள் இருக்கிறார்கள். வீடு அலாட்மெண்ட் வாங்கி எல்லோரும் குடியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும், கிண்டி ஐ.ஐ.டி. குவார்டர்ஸ் பெரிய குவார்டர்ஸ், மத்திய சர்க்கார் ஊழியர்கள் இருக்கிறார்கள். அங்கே 3500 வாக்காளர்கள் இல்லை என்று இன்றைக்கு பட்டியல் தொங்க விட்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தால் மொத்தம் சென்னையிலே 12 தொகுதிகளில் நூறு சதவீதம் வெரிஃபிகேஷன் செய்தோம் என்று சொல்லிவிட்டு நம்முடைய தேர்தல் கமிஷன் மூலமாக போய்ப் பார்த்த ஊழியர்கள் சரியாகப் போய் பார்க்காமலேயே, இங்கே நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டே பெயர்களை delete பண்ணிவிட்டார்கள். அதனால் தயவு செய்து மறுபடியும் வீடுவீடாக சரி பார்க்க வேண்டும். இல்லையென்றால் ஏற்கெனவே இருக்கிற வாக்காளர் பட்டியலை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாக தலைமை தேர்தல் அதிகாரியைக் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் நீங்கள் கொடுத்த வாக்காளர் பட்டியல்தான். இப்போது 12 தொகுதிகளிலும், ஒரு ஜோனில்

சரிபார்க்க 7 நாட்கள் டைம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு 24 லிருந்து 31 வரைக்கும் 1,15,000 பேரை எப்படி போய் சரி பார்க்கப்போகிறார்கள். எப்படி போய் பார்ப்பார்கள்? இந்த 1,15,000 பேரையும் பார்க்க ஊழியர்கள் இருக்கிறார்களா? உங்கள் பெயர் விடுபட்டிருக்கிறது, நீங்கள் வந்து சரி பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஜோனிலிருந்து எல்லோருக்கும் தபால் எழுதிப் போட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இன்றைக்குச் சொல்கிறேன், இன்னும் ஒருவருக்குக்கூட தபால் போய்ச் சேரவில்லை. நான் போய் செக் பண்ணிவிட்டு வந்திருக்கிறேன். 1,15,000 பேருக்கு எப்போது தபால் போட்டு, அந்த 1,15,000 பேர்களும் ஒரே zone அலுவலகத்திற்கு வந்து — ஒரே A.C. தான் அதற்கு கண்ட்ரோல் — form பூர்த்தி செய்வார்கள்? முடியாது. மொத்தமாக இது குழப்பத்தில் இருக்கிறது என்பதை நான் பேரவைத் தலைவர் மூலமாக தேர்தல் கமிஷனுக்குச் சொல்கிறேன். அதனால் உடனடியாக நூற்றுக்கு நூறு சரிபார்க்கப்படுவதை எடுத்துவிட்டு, மொத்தத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அப்படிச் சேர்க்கவில்லையென்றாலும்கூட, எங்கெங்கே ஓட்டு போட்டார்களோ, அந்தந்த தேர்தல் பூத்துகளிலேயே விடுபட்ட வாக்காளர்களைச் சேர்ப்பதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்களைப் புதிதாகச் சேர்ப்பதாக இருந்தாலும் சரி, வாக்காளர் அடையாள அட்டை கொடுப்பதாக இருந்தாலும் சரி, அதில் பல குளறுபடிகள் தமிழகம் எங்கும் நடந்திருக்கிறது. ஆளுங்கட்சியினர் புதிதாக வாக்காளர்களைச் சேர்ப்பதிலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் நான் சொன்னேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) திரு. கிட்டு உட்காருங்கள். நேற்று நான் ஓர் உதாரணம் சொன்னேன். பொதுப் பிரச்சினையில் அரசியல் பேசக்கூடாது என்று நேற்று குறிப்பிட்டுச் சொன்னேன். த.மா.கா. துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, அவர் அரசியல் ஆதாயம் தேடாதவர், ஆகவே அவர் சொல்லுகின்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். எடுத்தவுடனேயே ஆளுங்கட்சி என்று இதிலே பேசினால் என்ன அர்த்தம்? ஆளுங்கட்சி சார்பில் ஒரு





இலட்சம் ஓட்டுகள் விடுபட்டிருக்கின்றன என்று பேசியிருக்கிறார். பிறகு திரும்பத் திரும்ப ஆளுங்கட்சி என்று பேசினால் அவைக் குறிப்பிலிருந்து எடுப்பேன். ஒழுங்காகப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லையென்றால் நீங்கள் பேச அனுமதி கொடுக்கமாட்டேன். (குறுக்கீடு) இது எல்லாத் தொகுதிகளிலும் இருக்கின்ற பிரச்சினை. பிறகு, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது முக்கியமான பிரச்சினை. நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்தான் ஒரு இலட்சம் ஓட்டுகளை எடுத்திருக்கிறார்கள் என்று பேசியிருக்கிறாரே! (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தாங்கள் தெரிவித்ததைப்போல, இந்தப் பிரச்சினையிலே நூற்றுக்கு நூறு அரசியல் கிடையாது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, யார் நினைத்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. இன்னொன்று, சென்னையிலே எங்களுடைய தொகுதிகளிலே எல்லாம் 96 ஆயிரம் ஓட்டுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதை நாங்கள் அரசியலாக்க விரும்பவில்லை. தாங்கள் பெருமுயற்சி எடுத்து தேர்தல் ஆணையாளரையே இந்த அவைக்கு வரச்சொல்லி, உறுப்பினர்களுடைய கருத்தை அறிந்து, இந்தப் பிரச்சினையை சரி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஆளுங்கட்சியினர் மீது புகார் கூறுவது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். நான் மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரத்திற்குச் சொல்கிறேன். ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். மாநில தேர்தல் ஆணையர் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. அவர் மத்திய தேர்தல் ஆணையத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறார். இங்கே அரசாங்கம் சொல்லி அவர் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. எல்லா தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல்களிலே இருந்து ஏராளமான பெயர்களை நீக்கிவிட்டார்கள் என்று புகார் இருக்கிறது. இது எல்லா கட்சிகளுக்கும் பொதுவானது. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பிரச்சினையே இல்லை. அந்தக் கண்ணோட்டத்தோடு பேசுவதாக இருந்தால் பேசுங்கள், இல்லையென்றால் உங்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களுடைய அண்ணா நகர் தொகுதியிலே *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் முதலில் அமைதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருப்பார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மொத்தத்தில் வாக்காளர் அடையாள அட்டை வழங்குவதில் பல குளறுபடிகள் நடந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேசவிடுங்கள். சொன்னால்தானே தெரியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிக்கு என்ன இருக்கிறது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் பொதுவாகச் சொல்லுகிறேன். இதிலே ஒரு வாக்காளர் அடையாள அட்டை வழங்கியபின், இன்னொரு வாக்காளர் அடையாள அட்டை வாங்கலாம். சைதாப்பேட்டையைப் பற்றிச் சொன்னார்கள். சைதாப்பேட்டையிலே மெகா லேசர் என்ற கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். சைதாப்பேட்டையிலே, அந்தக் கம்பெனி புகைப்படம் எடுத்து அடையாள அட்டை கொடுக்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறது.

**திரு. சைதை கா. கிட்டு:** அந்தக் கம்பெனி பற்றி எனக்குத் தெரியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களுக்குத் தெரியாததைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசுவநாதன், இப்படி அடிக்கடி நீங்கள் தேவையில்லாமல் எழுந்து நின்றால் உங்களை வெளியேற்றுவேன். *(குறுக்கீடுகள்)* நான் அவர்களை உட்கார வைக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* உங்களுக்கு முன்னால் அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தக் கம்பெனி வாக்காளர் அடையாள அட்டையை யார் வேண்டுமென்று கேட்டாலும், யார் பெயரிலேயும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. யார் போலியான புகைப்படத்தைக் கேட்டாலும், எத்தனை புகைப்படங்கள் வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.



சைதாப்பேட்டையிலே வாக்காளர் புகைப்படம் எடுக்கப்பட்டது. ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சருடைய படத்தையே என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதை நான் உங்களிடம் காட்டுகிறேன். அது சைதாப்பேட்டையிலே எடுத்தது.

*(மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு மத்திய தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் ஆகியோரது புகைப்படங்கள் கொண்ட வாக்காளர் அடையாள அட்டைகளை உறுப்பினர் சுந்தரம் அவையில் காட்டினார்.)*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி யார் வேண்டுமானாலும் படம் எடுக்கலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்? நிருபர்களிடம் காட்டுகிறேன். இதை நீங்கள் பாருங்கள், முதல்வருடைய புகைப்படத்தை.... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலிலே உட்காருங்கள். *(குறுக்கீடு)* சுந்தரம், நான் எழுந்து நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள் *(குறுக்கீடு)* அமைச்சரும் உட்கார வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது முதலமைச்சருடைய புகைப்படம், இது மாறனுடைய புகைப்படம். ஆளுங்கட்சி உறுப்பினர்களால் ஒரு படத்திற்குப் பதிலாக, இன்னொரு படத்தை.... *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடு)* கொஞ்சம் இருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர்கள் எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். சுந்தரம், உட்காருங்கள் நீங்கள். இரண்டு புகைப் படங்களைக் கொண்டுவந்து காட்டி, அதனால் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று சொல்வது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* சரி, இந்தப் புகைப்படம் வந்ததனால் என்ன ஊழல் என்று சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒருவருடைய புகைப்படத்திற்குப் பதிலாக இன்னொருவருடைய புகைப்படத்தை வைத்து, யார் வேண்டுமானாலும் எப்படியும் ஒட்டுப் போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குற்றச்சாட்டே இல்லை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு குற்றச்சாட்டா, அல்லவா என்பதுகூட அல்ல. அப்படி ஒரு அட்டை வந்திருந்தால், அது ஒரு குற்றச்சாட்டிற்கு உரியதாக இருக்குமானால் தேர்தல் கமிஷனர் அவர்களுக்குத் தெரிவித்து, அவர்தான் அதை ஆராய முடியுமே தவிர என்னுடைய புகைப்படத்தைக்கூட யாராவது எடுத்து, எங்காவது ஒட்டி, சுந்தரம் மாதிரி ஒருவரிடத்திலே கொடுத்து சட்டமன்றத்திலே வந்து பேசச் சொன்னால், அதை நான் செய்தேன் என்று அர்த்தம் அல்ல. எங்கள் படம் பல பேருக்குக் கிடைக்கும். சுந்தரம் படம் வேண்டுமானால் பல பேருக்குக் கிடைக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தவறு நடைபெற்றிருக்கிறதா என்பதை அமைச்சர்கூடச் சொல்ல முடியாது. ஏனென்றால், எனக்கு அதிலே பொறுப்பு, அந்த இலாக்காவிற்கு ஆகின்ற செலவிற்குத்தான். அந்தத் துறை அமைச்சர் என்று எனக்குப் பெயர். ஆனால், முறை என்ன என்று கேட்டால், எலெக்ஷன் கமிஷனுக்குக் கட்டுப்பட்டு, அதனுடைய ஆணையை ஏற்று, அவர்களோடு கலந்து பேசி, இங்குள்ள தேர்தல் ஆணையர், அவர் தனித்துத்தான் கடமையைச் செய்ய வேண்டும்; சுதந்திரமாகச் செய்ய வேண்டும். தேர்தல் ஆணையத்திற்குத்தான் அவர் பதில் சொல்ல வேண்டும். குற்றச்சாட்டுக்களை விசாரிக்கிற பொறுப்பு அவருக்கு உண்டு. சுந்தரம் அவர்களுக்கு இதிலே மிகுந்த அக்கறை இருந்திருக்குமானால், இதை உடனடியாக தேர்தல் ஆணையத்திலே காட்டி இது எப்படி வந்தது என்று கேட்கலாம். அப்படியே ஒரு அட்டை வந்தாலும், ஒரு ஓட்டுதான் போடமுடியும், அந்த அட்டையை வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும். அது முதலமைச்சரோ, அல்லது முரசொலி மாறனோ அல்லது அப்படியொரு முக்கியமானவரோ, இப்படி ஒரு ஓட்டு போடுகிற இடத்திற்குப் போகமாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், சுந்தரம் மாதிரி அவர்கள் யாரும் செயல்பட மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** வாக்குச்சாவடிக்கு வராமலேயே புகைப்படம் எடுக்க முடியும். இதிலே அந்தக் கம்பெனியை நீங்கள் பயன்படுத்தி...... (கூச்சல்-குழப்பம்) வாக்குச் சாவடிக்கு வராமலேயே புகைப்படம் எடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்வதற்காகச் சொல்கிறேன். அந்த





வேலைகளை நீங்களும் செய்திருக்கலாம். ஆகவே, இந்த வேலையை யார் வேண்டுமானாலும் செய்யலாம். புரிகிறதா? (குறுக்கீடு) உட்காருங்கள். நான் பதில் சொல்லி முடித்த பிறகு எழுந்திருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்த பிறகு எழுந்திருங்கள். இந்தப் புகாரை எலெக்ஷன் கமிஷனுக்குத் தெரிவித்து, அவர்கள் எந்த முறையிலே விசாரிக்க வேண்டுமோ அப்படி விசாரித்து, அவர்தான் கண்டுபிடிக்க வேண்டும். அவர்தான் அந்தக் கம்பெனியைத் தொடர்ந்து பணியாற்ற விடலாமா, கூடாதா என்று தீர்மானிக்க வேண்டுமே தவிர, இந்த சட்டசபையிலே கூட நாம் நேரடியாகத் தீர்மானிக்க முடியாது. நீங்கள் சொன்ன கருத்து எலெக்ஷன் கமிஷனுக்கு நிச்சயமாகக் கிடைத்திருக்கிறது. நீங்கள் கொடுக்கிற புகாரை வேண்டுமானால் — இந்தத் தாளைக்கூட — எலக்ஷன் கமிஷனுக்கு சபாநாயகர் மூலமாக தாராளமாக அனுப்பி வையுங்கள். இல்லை, அதற்கு மேல் நீங்கள் விரும்பினீர்களென்றால், எலெக்ஷன் கமிஷனரை சட்டமன்ற உறுப்பினர்கள், பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள்; அவர்கள் சந்திக்கிறபோது, அவர்கள் சொல்கிற குறைபாடுகளைக் கேட்டு கமிஷன் எப்படி நிவர்த்தி செய்யலாமோ அந்த முறைப்படிச் செய்யட்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வளவுதான் எங்களால் முடியும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலையை யார் வேண்டுமானாலும் எப்படியும் செய்ய முடியும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இல்லை, உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். நான் ஆளுங்கட்சி அமைச்சர், உட்காருங்கள். பதில் சொல்லி முடிக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) நான் சொல்லிய பின் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி விடுகிறேன். எனக்குத்தான் முன்னுரிமை (குறுக்கீடுகள்) முன்னுரிமை எனக்குத்தான், நான் சொன்னபிறகு சொல்லுங்கள். உட்காருங்கள், நான் சொன்ன பிறகு சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் சொல்லிவிடுகிறேன்.

*முற்பகல் 10-55*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பதில் சொல்லுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் தாராளமாகச் சொல்லுங்கள்.

அந்த அட்டையை பேரவைத் தலைவர் இன்னும் பரிசீலனை செய்யவில்லை. நீங்கள் சொல்வது உண்மையா என்பதை அவர் பரிசீலிக்க வேண்டும். உண்மையாக இருக்கலாம். இதற்கு யார் காரணம் என்பதை நாம் கண்டுபிடித்தால்தான் தெரியும். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற எந்தப் பைத்தியக்காரனும் முதலமைச்சர் கருணாநிதி படத்தைக் கொண்டுபோய் இன்னொரு இடத்திலே பதிவு பண்ணமாட்டான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் ஒரு அரசியல்வாதி என்ற முறையிலே சொல்கிறேன். இது எதிர்க்கட்சிக்காரர்கள் செய்த வேலைதான் என்று நான் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.விலே இருக்கிற யாரும் — கலைஞர் கருணாநிதியையோ, அன்பழகனையோ அல்லது வீராசாமியையோ — எங்கள் படத்தைக் கொண்டு போய் இன்னொரு தொகுதியிலே, அதுவும் அங்கே இருக்கிற வாக்காளர் பட்டியலிலே சேர்க்க அவர்களுக்கு அக்கறையும் இல்லை, அவசியமும் இல்லை. அந்த முறைகேடு செய்து, அவர்கள் தங்களுடைய பெயருக்கு ஈனம் தேடிக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, இது எப்படி நடந்தது என்பதை காவல் துறை கண்டுபிடிக்க வேண்டுமோ, எலெக்ஷன் கமிஷன் விசாரிக்க வேண்டுமோ அந்த விசாரணை நடைபெற்ற பின்னர்தான் அதைப்பற்றிச் சொல்ல முடியும். இதற்காக எந்தக் குற்றச்சாட்டும் இந்த அவையிலே இப்போது இடம் பெறாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** நீங்கள் கொஞ்சம் இருங்கள்..

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் கொஞ்சம் இருங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் அனுமதி வாங்க வேண்டும். திரு. பழனிசாமி, நீங்கள் உங்களுக்குள்ளேயே பேசி முடித்துக்கொள்ள முடியாது. நான் அனுமதி கொடுக்கிறவர்கள்தான் பேச வேண்டும். திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் ஒரு கம்பெனி பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய படத்தையும் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களுடைய படத்தையும் உங்களிடத்திலே காட்டியிருக்கிறார். இதை ஒரு உதாரணமாகக் கூட அவர் காட்டியிருக்கலாம். இதுமாதிரி பல்லாயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான அளவிலே வாக்காளர்கள் பெயர் பட்டியலை வைத்துக்கொண்டு, படங்களை எடுத்து,



போலித்தனமாக விற்பனை செய்வதற்கான ஏஜெண்ட்டோ, கள்ளநோட்டு அடிக்கிற மாதிரி (மணியடிக்கப்பெற்றது) இந்தத் தேர்தலை பயன்படுத்தக் கூட வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கிறது. அதனாலே, தேர்தல் கமிஷனர் வந்திருப்பதாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். பிறகு நீங்கள் மற்றதைப் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, கொஞ்சம் உட்காருங்கள் நீங்கள். நாட்டிலே பொதுவாக இருக்கிற புகார் என்னவென்றால், இருக்கிற வாக்காளர்கள் பெயரை எடுத்துவிட்டார்கள் என்பதுதான். அதுதான் பொதுவான புகார். கட்சிக்கு அப்பாற்பட்ட முறையிலே, உதாரணமாக, திரு. ரங்கநாதன் தன்னுடைய தொகுதியிலே 90 ஆயிரம் பேரை எடுத்து விட்டார்கள் என்றார். திரு. ஞானசேகரன் இவ்வளவு பேரை எடுத்துவிட்டார்கள் என்றார். ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் 96 ஆயிரம் பேரை எடுத்துவிட்டார்கள் என்றார். அதுதான் இப்போது பொதுவாக நாட்டிலே இருக்கிற பிரச்சினை. வாக்குரிமை இருக்கிறவர்களுடைய பெயரை எடுத்துவிட்டாாகள் என்பதுதான் இப்போது பொதுப் பிரச்சினை. இதிலே புதுப் பிரச்சினையை சுந்தரம் சொல்கிறார். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. இல்லாதவர்களைப் புதிதாக, ஏதோ போலியாகச் சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்கிறார். அந்தப் புகாரைப் போய் சொல்லட்டும். இதிலே எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை.

அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே தேர்தல் அதிகாரி கிடையாது. ஆகையினாலே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் போய் அவரிடம் சொல்லி, அது உண்மை என்றால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். எந்தக் கம்பெனியைப்பற்றிச் சொல்கிறாரோ, அதுபற்றி நேரடியாகப் போய் அவரிடம் புகாரைச் சொல்ல வேண்டும். இப்போது, நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலே நாம் பேசுவது இருக்கிற மக்களுக்கு வாக்குரிமையில்லை என்பதுதான். அதுதான் பெரிய பிரச்சினை. அதைப்பற்றிப் பேசுங்கள், நீங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் என்ன சொல்கிறார் என்றால், இந்த வேலையை தி.மு.க. காரன் யாரும் செய்ய மாட்டான் என்று சொல்கிறார். ஆனால், அந்தக் கம்பெனி, சைதாப்பேட்டையிலே இருக்கிற மெகா லேசர் கம்பெனியில் தி.மு.க. கொடி பறக்கிறது, அவர்களுக்கு நீங்கள்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, தி.மு.க. அந்த—

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். சுந்தரம், நான் சொல்வதைப் புரிந்துகொண்டு பேசுங்கள் நீங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் சொன்னீர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். கம்பெனிக்காரர்கள் நான் சொன்னால் எப்படிக் கொடுப்பார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் சொல்வதைப் புரிந்துகொண்டு பேசுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைப் புரிந்துகொண்டு பேசுங்கள். ஆளுங்கட்சி சார்பிலே இல்லாத வாக்காளர்களைச் சேர்ப்பதற்கு முயற்சி பண்ணியிருக்கிறார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு வையுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. அதிலே, ஒருவன் விவரம் இல்லாமல் முதலமைச்சர் படத்தை ஒட்டி போலிகார்டு வாங்கினான் என்றால், அதை வைத்துக்கொண்டு எப்படி ஓட்டுப் போட முடியும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கையெழுத்துதான் முக்கியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகையினாலே, நான் என்ன சொல்கிறேன் என்றால், பிரச்சினையே வாக்குரிமை இருக்கிறவர்களுக்கு இல்லாமல் பண்ணியிருக்கிறார்கள். அதுபற்றிப் பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னதற்கு ஒரே ஒரு விளக்கம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைக் கேட்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதுதான் ஆதாரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது போலி கார்டே தவிர, வேறு ஒன்றுமில்லை என்றால், நான் அடுத்தவர்களைக் கூப்பிட்டுவிடுவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதுமாதிரி தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடிக்கு வராமல் போட்டோ எடுக்கலாம். இதைத் தயார் பண்ணலாம் நீங்கள். அது உங்களுக்கு சாதகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போட்டோ எடுத்தால் மட்டும் என்ன ஆகப்போகிறது?



2001 ஜனவரி 24]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு போட்டோவை வைத்து 10 அட்டை தயார் செய்து ஓட்டுப் போடலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுந்தரம் சொல்கிற குற்றச்சாட்டு ஒருவேளை உண்மை என்று கருதினால்கூட அதை ஆராய்ந்து என்ன குற்றம், யார், எந்த கம்பெனி என்று விசாரித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கிற பொறுப்பு எல்லாம் எலெக்ஷன் கமிஷனுக்குத்தான். இது அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. அரசாங்கத்திற்கும் அப்பாற்பட்டது. அதனால் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டியது எலெக்ஷன் கமிஷனரிடம். இப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்ன குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமானாலும், அதைச் சொல்ல, அவரைச் சந்திப்பதற்கு அவர் நேரம் கொடுத்து, அவரைச் சந்தித்து சொல்லும் குற்றச்சாட்டை ஆராய வேண்டுமென்று நான் அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகையினாலே, நீங்கள் குற்றச்சாட்டாக ஆளுங்கட்சி சார்பிலே ஏராளமான பேர்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்று போய்ச் சொல்லுங்கள். நான் தேர்தல் ஆணையரிடம், சுந்தரம் அவர்களுக்கு ஒரு பேட்டி நேரம் கொடுங்கள், அவர் சொல்கிற குற்றச்சாட்டை விசாரியுங்கள் என்று சொல்கிறேன். இப்போது உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு முதலமைச்சருடைய படத்தையே அவர்கள் வந்து.... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருப்பித் திருப்பி பேசினால் என்ன அர்த்தம்? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, வரவிருக்கின்ற தேர்தலிலே... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்கார வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

[2001 ஜனவரி 24

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம் மட்டும் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரேயொரு விளக்கம் மட்டும். ஆளுங்கட்சிப் பற்றி குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விளக்கம் கேட்கப் போகிறீர்கள் நீங்கள்? (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். உங்கள் சார்பிலே உங்கள் கட்சி உறுப்பினர் விளக்கம் கொடுப்பார். நீங்கள் உட்காருங்கள். விசுவநாதன், என்ன விளக்கம் சொல்லுங்கள்?

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆளுங்கட்சிப் பற்றி நேரடியான குற்றச்சாட்டு என்று எடுத்துக்கொள்ள வேண்டாம். முறைகேடு நடந்தது என்பதற்கு உதாரணமாக எடுத்துச் சொல்வதற்குச் சொல்லியிருக்கிறோம். முதலமைச்சருடைய படத்தையும் (குறுக்கீடுகள்) தமிழகத்தினுடைய முதலமைச்சர் படத்தையும் (கூச்சல்-குழப்பம்) கேளுங்கள், கொஞ்சம் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) நான் உறுப்பினர் திரு. விசுவநாதனுக்கு அனுமதி கொடுத்துவிட்டேன். அவரை யார் தடுத்தாலும் நான் வெளியேற்றுவேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்து அமைச்சர் படத்தை யாரும் வைத்திருக்கக் கூடாது என்பதல்ல. ஒரு பொறுப்பு வாய்ந்த மத்திய அமைச்சர் படத்தையும்கூட எடுத்து தவறாகப் பயன்படுத்த முடியும் என்பதற்கு உதாரணமாகத்தான் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர.... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடராஜன் அவர்களை எச்சரிக்கை செய்கிறேன். உட்கார்ந்து கொண்டு யாரும் பேசக் கூடாது. நான் அவையை முறையாக நடத்த வேண்டும். ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி என்று நான் நடத்த முடியாது. விசுவநாதனுக்கு இப்போது நான் அனுமதி கொடுத்துவிட்டேன். யாரும் குறுக்கே பேசக்கூடாது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடு நடக்க முடியும் என்பதற்கு உதாரணமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறேனே தவிர....



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்களாவது புரிந்து கொள்ளுங்கள். சுந்தரத்திற்கு நான் சொல்வது புரியவில்லை. இப்போது தமிழ்நாட்டிலே இருக்கிற பிரச்சினை, வாக்காளர்கள் பட்டியலிலே இருக்கிறவர்களுக்கே வாக்குரிமை இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள் என்பதாகும். உறுப்பினர் கிட்டு பேசும்போது சொன்னார், 26 இலட்சம் வாக்காளர்கள் கொண்ட 12 தொகுதிகளிலே 11 இலட்சம் வாக்காளர்களை எடுத்துவிட்டு 15 இலட்சம் வாக்காளர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். இந்தப் பிரச்சினையைப் பேசுவதற்குத்தான் நான் உங்களைக் கூப்பிட்டிருக்கிறேன். ஆளுங்கட்சியிலே தவறாக போட்டோ எடுத்து வாக்காளர் பட்டியலிலே சேர்த்துவிட்டார்கள் என்றால், நீங்கள் தாராளமாக தேர்தல் ஆணையாளரைப் பார்த்துச் சொல்லுங்கள், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் விளக்கம் சொல்லி விட்டீர்களே?

**திரு. இரா. விசுவநாதன்:** முறைகேடு செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாகத்தான் சொன்னேன். சாதாரண பொதுமக்களும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள், நீங்கள் திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எந்தக் கம்பெனி மேல் புகார் இருக்கிறதோ, போய்ச் சொல்லுங்கள். இதோடு முடித்துக்கொள்ளுங்கள். உறுப்பினர் ஐ. கணேசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தேர்தல் அதிகாரியை இந்த அவைக்கு அழைத்து வந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய 6 கோடி மக்களுடைய பிரதிநிதிகளை, அவர்கள் எண்ணக்கூடிய எண்ண ஓட்டத்தை நேரடியாகப் புரிந்துகொள்வதற்காக இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல்: 11-05*

ஒரு மனிதனுடைய ஜீவாதார உரிமை ஓட்டுரிமை, அவனுடைய பிறப்புரிமை ஓட்டுரிமை. அந்த ஓட்டுரிமை எப்படியெல்லாம் மறுக்கப்படுகிறது, தடுக்கப்படுகிறது என்பதனை இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் புரிந்துகொண்டால் போதாது, நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து மக்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த அரசு ஒரு அரிய பெரிய முயற்சியை மேற்கொண்டு, உண்மையை தேர்தல் அதிகாரி அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அவரை வரவழைத்ததற்கு எத்தனை முறை சபாநாயகருக்கு நன்றி சொன்னாலும் அது சபாஷ் ஆகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று உலக நாடுகளுக்கு இணையாக நாம் பல்வேறு வகைகளிலே, கணினியிலும் மற்ற வகையிலேயும் முன்னேறிவிட்டோம். ஆனால் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் இருக்கக்கூடியவன், அவனுடைய உரிமை என்னவென்று கேட்டால் அவனுடைய ஓட்டுரிமையைக் காட்டுவான். ஆனால், இந்தியாவிலே காடுமேடுகளிலே, கழனி வரப்புகளிலே நடக்கக்கூடிய அந்த ஏழை எளிய மக்கள், பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று தங்களுடைய வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கக்கூடிய அந்த ஏழைகளுக்கு ஓட்டுரிமையை தேர்தல் அதிகாரி வழங்கியிருக்கிறார்களா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல முடியும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய எடப்பாடித் தொகுதிக்கு அவரே நேரடியாக வரட்டும். இருப்பாலி பஞ்சாயத்திலே எத்தனை ஓட்டுக்கள் விடுபட்டிருக்கின்றன என்பதனைப் புள்ளி விவரமாக அவரே எடுத்துக்கொள்ளட்டும்.

அதேபோல, பெண்ணாகரம் தொகுதி, அதேபோல தாரமங்கலம் தொகுதி, அதேபோல எடப்பாடித் தொகுதியிலே கொங்கணாபுரம், மகுடஞ்சாவடிப் பகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தமிழ்நாட்டிலே என்று சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஆம். தமிழ்நாட்டிலே, கொங்கணாபுரம் பகுதியிலே மட்டுமல்ல, இந்தத் தமிழகத்தின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 234 சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக தேர்தல் அதிகாரி அவர்கள் மொத்த





வாக்கிலே 4 சதவீத வாக்குகளுக்கும் மேலே இருந்தால் அவை நீக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. அது ஒரு பக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இதோ உரையை முடித்துவிடுகிறேன். இன்னும் விடுபட்டவர்களுடைய புகைப்படத்தை எடுக்க வேண்டும். மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டினுடைய ஜீவாதாரப் பிரச்சினையைப் பேசிக்கொண்டிருக்கிறேன். ஓட்டுரிமை இல்லை என்றால் அவன் மனிதனாக வாழவே அருகதையற்றவன். (குறுக்கீடு) ஆம். சுப்பராயன் அவர்கள் சொல்வதைப்போல ஒரு நாடற்ற அகதியாக இருக்கக்கூடிய பிரச்சினை. அப்பேற்பட்ட பிரச்சினையை நாம் வேடிக்கையாக, கிண்டலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. விடுபட்டது என்பது, நம்முடைய அவையினுடைய தலைநாயகர், சபாநாயகர் அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும். நான் இந்த அவையினுடைய மரபை மிகவும் மதிக்கக்கூடியவன். உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களைக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமானால் அவையினுடைய தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றுச் சொல்வதுதான் இந்த அவையினுடைய நாகரீகம். அதுதான் காலம் காலமாகக் கடைபிடிக்கப்பட்ட மரபு. ஆனால், சில சமயங்களிலே அவையினுடைய உரிமையைப் பெற்று, மரபை மீறிவிடுகிறோம். அதுவும், இதுபோல ஒரு நாட்டினுடைய முதல்வர், ஒன்பது முறை இந்த நாட்டிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், நான்கு முறை தமிழகத்தினுடைய முதல்வராக இந்த அவையிலே வீற்றிருந்து அழகு பார்த்தவர், அவர் போய் கள்ள ஓட்டு எங்கேயோ ஒரு மூலையில் போடுகிறார் என்றால் (குறுக்கீடு) போட முடியும் என்றால் யார் ஒத்துக்கொள்வார்கள்.

*(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. விஸ்வநாதன், திரு. ஜி பழனிசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

*முற்பகல்: 11-10*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** திரு. கணேசன் உட்கார்ந்தால் நான் சொல்வேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்கிறேன். திரு. கணேசன் அவர்கள், சுந்தரம் எழுப்பிய பிரச்சினையைத் தொடர்ந்து அது ஏதோ கள்ள ஓட்டுக்காக நடைபெற்றது என்ற ஒரு கருத்துப்பட இங்கு சொன்னார்கள். அந்த

நோக்கத்திலே அவர் சொன்னதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. இன்னும் விளக்கமாக சபாநாயகர் இறுதியில் கருத்து சொல்ல இருக்கிறார். ஆகவே, திரு. கணேசன் அவர்கள் அவர் தொகுதி அல்லது சேலம் மாவட்டம் அதில் வாக்காளர்கள் பதிவானது அல்லது புகைப்படம் எடுத்தது முதலான அந்தப் பிரச்சினையோடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உணர்வுகளை இந்த அவையில் இருக்கக்கூடிய அவை முன்னவர் அவர்களும், மற்றவர்களும் தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். ஒரு முதலமைச்சருடைய புகைப்படம் போட்டு மற்ற தொகுதியில் அச்சடித்திருக்கிறார்கள் என்றால் அது எப்படி வந்தது?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** திரு. கணேசன், அது பற்றி மாண்புமிகு தலைவர் அவர்களே சொல்லவிருக்கிறார். திரு. கணேசன் அவர்கள் பேசுவது இன்றையதினத்தைப் பொறுத்தவரையில் தேவையில்லாதது. ஏனென்றால் சபாநாயகர், திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் தந்த அந்த வாக்காளர் அடையாள அட்டையை வைத்துக் கொண்டு அதிலே என்ன இருக்கிறது என்பதை அவர்கள் சொல்லவிருக்கிறார்கள். ஆகவே, திரு. கணேசன் அவர்கள் பொதுப் பிரச்சினையை மட்டும் பேசினால் போதும். ஏனென்றால் இன்றைக்கு நேரமில்லை. பிறகு பொது விவாதத்தில் பல உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்காது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நம்முடைய அவையினுடைய முன்னவரும், நல்லவரும், வல்லவரும் இங்கே சொன்னதை நான் முழுமையாக ஏற்றுக்கொண்டு அதிலிருந்து சற்று விலகி, தயவுசெய்து இந்த விடுபட்ட வாக்காளர்களை, நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய உண்மையான வாக்காளர்களை எப்படியாவது தேர்தல் அதிகாரி அவர்கள் புகைப்படம் எடுக்க வேண்டும். அதற்காக புதிய முறையை நீங்கள் கண்டுபிடித்து விரைவாக அனைவருக்கும் புகைப்படம் எடுக்க வேண்டும். குறிப்பாக இந்த நாட்டிலே ஏழை, எளிய மக்கள் வாழக்கூடிய கிராமப் பகுதியிலே நூற்றுக்கு 80 பேர், 85 பேர் இன்னும் புகைப்படம் எடுக்காமல் இருக்கிறார்கள். அனைவருக்கும் புகைப்படம் எடுக்க வேண்டும். அதற்காக அவர்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தக்கூடிய பல்வேறு வகையிலே நல்ல விளம்பரங்கள் செய்ய வேண்டும். வாக்காளர் அட்டை இல்லாதவர்களுடைய குடும்பங்களுக்கு அரசு சலுகை எதுவுமே இல்லை





என்பதைப் போன்ற அறிவிப்புகளும் வர வேண்டும். அப்போதுதான் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படும். ரேஷன் கார்டு இல்லையென்றால் அரிசி, பருப்பு, துணிமணிகள் வாங்க முடியாததைப் போல இந்த அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அரசு சலுகைகள் நிச்சயமாக இல்லை என்று சொல்லக்கூடிய வகையிலே அரசும், தேர்தல் அதிகாரியும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி சொல்வதற்கு முன்னால் இந்தப் புகைப்படங்கள் அனைத்தும் எடுத்த பிறகு தேர்தல் நடத்துவதற்குண்டான தேதியை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் அட்டை புகைப்படம் எடுப்பது தொடர்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற சில பிரச்சினைகளை, நேரடியாக என்னுடைய அனுபவத்திலே பார்த்த சில பிரச்சினைகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். குறிப்பாக கடலோரக் கிராமங்கள் என்று சொல்வது நீரோடியிலிருந்து கன்னியாகுமரி வரை இருக்கிறது. இந்தப் பகுதியில் வாழ்கின்ற பெருவாரியான மீனவர்கள் பிற மாநிலங்களுக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தார்கள். புகைப்படம் எடுக்கின்ற நேரத்திலே அவர்கள் ஊரிலே இல்லை. எனவே, தேர்தல் கமிஷனுக்கு நான் ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன். கிறிஸ்து பிறப்பு தினத்தை முன்னிட்டு கோவா சென்றவர்கள் எல்லாம் ஊருக்குத் திரும்பி வருவார்கள், அந்த நேரத்திலே வாக்குச் சாவடிகளிலே வைத்து இந்தப் புகைப்படங்களை எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று என்னுடைய ஒரு வேண்டுகோளை ஏற்கெனவே அந்தக் கமிஷனுக்கு அனுப்பியிருந்தேன். அதுபோலவே நம்முடைய மாநில தேர்தல் கமிஷனுக்கும்கூட அந்தத் தகவலை நான் சொல்லியிருந்தேன். மாவட்ட கலெக்டரிடம் போய் மனுவைக் கொடுத்து, இந்தத் தேதியிலே நீங்கள் புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றும் சொல்லியிருந்தேன். ஆனால், அது கவனிக்கப்படவில்லை. அதன் விளைவு என்னவென்றால், 60 சதவீதம் மக்களுக்கு அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்கப்படவில்லை, அவர்களும் திரும்பிப் போய்விட்டார்கள். இனி அவர்களை நாம் கொண்டு வருவதற்கான சாத்தியம் ஏற்படுமா என்பது தெரியவில்லை. எனவே, இந்தப் புகைப்படத்தை Booth வாரியாக எடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

[திரு. டி. மணி] [2001 ஜனவரி 24

முற்பகல் 11-15

புகைப்படம் எடுத்த பிறகு அடையாள அட்டைகளை எப்படிக் கொடுத்தார்கள் என்பதுதான் பெரிய பிரச்சினை. அடையாள அட்டையை எப்படி ஒப்படைத்தார்கள் என்றால், கிராம நிர்வாக அலுவலகங்களிலே, ஒரு கோணிப் பையிலே 10, 20 பூத்துக்கு உண்டான அடையாள அட்டைகளைப் போட்டு, அங்கே கொண்டுபோய் வைத்தார்கள். அந்தக் கிராம நிர்வாக அதிகாரிகளிடம் யாராவது போய் அடையாள அட்டை வேண்டும் என்று கேட்டால், "அந்தக் கோணிப் பையிலே இருக்கிறது, போய் எடுத்துக்கொண்டு போ" என்று சொல்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டு போனவர்கள் ஒன்று அல்ல, 5 அடையாள அட்டைகளை எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பந்தப்படாத 5 அடையாள அட்டைகளை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். எனவே, உரியவர்களுடைய கையிலே இந்த அடையாள அட்டை கிடைக்கவில்லை என்பதுதான் இதிலே இருக்கின்ற இரண்டாவது விவகாரம்.

கேரள மாநிலத்தில் ஒன்றைச் செய்தார்கள். சரியோ, தவறோ, அவர்கள் அதைச் செய்தார்கள். புகைப்படம் எடுத்து இரண்டு நிமிடங்கள் தாண்டுவதற்குள்ளாக அந்த அடையாள அட்டை அவர்களுடைய கையிலே ஒப்படைக்கப்படுகின்றது. அவர்கள் சொல்கின்றார்கள், 5 நிமிடங்கள் இங்கே உட்காருங்கள் உடனே அடையாள அட்டையை கையிலே தந்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். அந்த முறையைக் கையாள்கின்றபோதுதான், அதிலே ஏதாவது முறைகேடு இருந்தால்கூட, அதைக் களைவதற்கும் நம்முடைய வாக்காளப் பெருமக்களுக்கு முழுமையாக அடையாள அட்டைகளை ஒப்படைப்பதற்கும் சாத்தியமாகும்.

சமீபத்திலே களியல் கிராமத்திலே புகைப்படம் எடுக்கச் சென்றார்கள். அது மலைப்பாங்கான பகுதி. அந்த இடத்தில் கடைசி பகுதிவரை போய் இவர்கள் சேர்ந்திருக்க மாட்டார்கள். சரியென்று, அந்தப் பகுதியிலே இருக்கின்ற வாக்குச் சாவடிகளிலே போய் புகைப்படம் எடுக்க ஆரம்பித்தார்கள். 3.00 மணிக்குச் சொன்னார்கள், இருந்த ஃபிலிம் தீர்ந்துவிட்டது, இனி நாளைக்குப் பார்க்கலாம் என்று.

ஆனால், அடுத்த நாள் அங்கு புகைப்படம் எடுப்பவர்கள் போகவில்லை. அதற்கு அடுத்த நாளும் போகவில்லை. எனவேதான், இந்த அடையாள அட்டை அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையில்,



2001 ஜனவரி 24] [திரு. டி. மணி]

அந்தந்த போலிங் பூத்துகளிலேயே எடுத்து, 5 நிமிடங்களுக்குள்ளாகக் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்கின்றபோதுதான், இதிலே வருகின்ற பிரச்சினைகளுக்கு முழுமையான ஒரு தீர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே இதைச் செய்யலாம்.

இரண்டாவது இன்னும் விவகாரம் வருமேயானால், ஆங்காங்கே ஒவ்வொரு போலிங் பூத் வாரியாக சர்வ கட்சியினர் கொண்ட ஒரு கமிட்டியை வைத்து விசாரணையை மேற்கொள்கின்றபோது, எந்தத் தப்பு தண்டா வந்தாலும் அதை முழுமையாக நாம் சரி செய்ய முடியும். அந்த வகையிலேயும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதுபோலவே, மலைப்பாங்கான பகுதிகளுக்குப் போய், கடல் பகுதிக்குப் போய் அந்த ஊர்களிலே இருப்பவர்களிடம் எல்லாம் அவர்களுடைய பெயர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்ற ஆய்வினைக்கூட நடத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அந்த வகையிலே இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும், புகைப்படம் எடுக்கின்றபோது எழுகின்ற பிரச்சினையானாலும் சரி, வாக்காளர்கள் தங்கள் பெயர்களை சேர்க்கின்றபோது எழுகின்ற பிரச்சினையானாலும் சரி, இந்த அடிப்படையிலே பிரச்சினைகளை அணுகுகின்றபோதுதான், மேலும் பிரச்சினைகள் வராமல் நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே அரசும், நம்முடைய தேர்தல் கமிஷனும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்புக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னது போன்று கேரள மாநிலத்திலே நடந்தது போன்று சமீபத்திலே எங்களுடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய தேசிய செயல் குழு சென்னையில் நடந்தபோதுகூட தெரிவிக்கப்பட்டது. முதலில் பட்டியலைச் சரிபார்த்து உடனே போட்டோ எடுக்கப்படுகிறது. 5 நிமிடங்களிலே அந்தப் படம் பிடித்து வழங்கப்படுகிறது. இப்படிச்செய்தால் முதலில் சொன்ன அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிவர்த்தி காண முடியும். அதாவது அந்த அடையாள அட்டையில் பெயர்கள் மாறி, மாறி இருக்கின்றன. பக்கத்து வீட்டிலுள்ள ஒரு பெண்ணுடைய பெயரில் இன்னொரு வீட்டிலுள்ள ஒரு ஆணுடைய பெயரைச் சேர்த்துவிட்டார்கள். எவ்வளவு அசிங்கமாகப் போய்விடுகிறது. அந்த மாதிரி, ஒரு குடும்பத்திலே

உள்ளவர்களுடைய பெயரை இன்னொரு குடும்பத்திலே கொண்டுபோய் சேர்த்து மாற்றிவிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி பிரச்சினைகள் மாற வேண்டுமென்றால் பட்டியலைச் சரிபார்த்து 5 நிமிடங்களிலேயே அடையாள அட்டையைக் கொடுத்து அவர்களைச் சரிபார்த்துக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். அவர் சரிபார்த்துக் கொள்கிறார்; வாங்கிக்கொள்கிறார் என்றால் என்னுடைய அடையாள அட்டை கிடைக்கவில்லை என்ற புகார் வராது அல்லது இன்னொருவர் வாங்கிச் சென்று விட்டார் என்ற புகார் வராது. அப்படி யார் யாரெல்லாம் எடுத்துவிட்டார்கள் என்று உடனே சரி பார்க்கும்பொழுது இந்தப் பிரச்சினை வராமல் இருக்கும். எனவே, இந்த அளவிற்கு விஞ்ஞானத்தில் நாம் முன்னேறியிருக்கும்பொழுது, எதற்காக புகைப்படம் எடுப்பது ஒருநாள்; வாங்குவது இன்னொரு நாள்? அது கிடைக்கவில்லை என்று புகார். எனவே, ஐந்தே நிமிடங்களில் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவோம் என்று சொன்னால் இங்கு சொன்ன அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும்.

*முற்பகல் 11-20*

இன்னொன்று. என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், ஒரு மிகப்பெரிய பிரச்சினை, இன்னும் தீராத பிரச்சினை 1996 தேர்தலின்பொழுது வாக்களிக்க வந்தபொழுது பத்மநாபபுரம் தொகுதியில் முள்ளிவளை டவுன் பஞ்சாயத்தில் பேயன்குழி என்று சொல்லக்கூடிய ஊரில் ஏற்பட்ட பிரச்சினை. பேயன்குழி பள்ளிக்கூடத்தில் ஆண்களுக்குத் தனி பூத் இருக்கிறது; பெண்களுக்குத் தனி பூத் இருக்கிறது; இன்னும் ஒரு பொது பூத். அப்படி மூன்று பூத்துகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். பேயன்குழி என்று சொல்லக்கூடிய ஊர் அந்த முள்ளிவளை பஞ்சாயத்திலேயே மிகப்பெரிய ஒரு ஊர். ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். அந்த வாக்காளர்கள் பட்டியலில் பேயன்குழி என்று சொல்லக்கூடிய பெயர் இல்லை. அதற்குப் பதிலாக பேரின்பபுரம் என்ற பெயர் இருக்கின்றது. உடனே வாக்களிக்க வந்த மக்களெல்லாம் வாக்களிக்க மாட்டோம் என்று சாலை மறியல் செய்கிறார்கள்; ஆர்.டி.ஓ. வருகின்றார்கள்; டி.எஸ்.பி., வருகின்றார்கள். இந்தத் தடவை நீங்கள் வாக்களியுங்கள்; அடுத்து அடையாள அட்டை வரும்பொழுது உங்களது ஊர் பேயன்குழி பெயர் மாற்றி வந்து விடும் என்று சொல்லி, உறுதிமொழி அளித்தார்கள். அதன்படி வாக்களிக்கப்பட்டது. ஆனால் பேரின்பபுரம் என்று சொல்லக் கூடிய ஊர் ரெவின்யூ ரெக்கார்டிலேயே கிடையாது. இருக்கக்கூடிய ஒரு



பெயர் மாறி வந்தால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ரெவின்யூ ரெகார்டிலே இல்லாத பெயர் எப்படி வந்தது?

அதற்குப் பிறகு பாராளுமன்றத் தேர்தல் வருகின்றது. பாராளு மன்றத் தேர்தலிலும் அந்த மாற்றம் வரவில்லை. திரும்பவும் அப்படியே வருகிறது. திரும்பவும் சாலை மறியல்; சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரெவின்யூ ரெக்கார்டிலே இல்லாத ஒரு பெயர் இருக்கிறது; பக்கத்து ஊரிலே உள்ள பெயரை மாற்றிப் போட்டு விடுவார்கள்; சரி, தவறுதல் என்று ஏற்றுக்கொள்ள முடியும். ரெவின்யூ ரெகார்டில் முள்ளிவளை என்று சொல்லக்கூடிய டவுன் பஞ்சாயத்து, இப்பொழுது வில்லேஜாக மாற்றியாகிவிட்டது. இப்படி மாறின ஒரு பஞ்சாயத்திலே இல்லாத ஒரு பெயர். அந்தப் பஞ்சாயத்திற்குள்ளேயே அந்தப் பெயர் கிடையாது. அப்படி இல்லாத பெயர் எப்படி வந்தது? திரும்பவும் சாலை மறியல்; திரும்பவும் சமரசம்; திரும்பவும் வாக்களிக்கின்றார்கள். அடையாள அட்டை எடுக்க திரும்பவும் அந்த வாக்காளர் பட்டியல் வருகின்றது. திரும்பவும் அந்தப் பெயர் மாற்றப்படவில்லை; திரும்பவும் சாலை மறியல், இப்பொழுது புகைப்படம் எடுக்க வந்தபொழுது யாரும் புகைப்படம் எடுக்கவில்லை, எடுக்க மாட்டோம் என்று மறியல் செய்து எடுக்காமல் இருந்திருக்கிறது.

நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால், மாற்றி வருவது மட்டுமல்ல; இத்தனை தடவையும் எந்த அதிகாரி வேண்டுமென்றே இதைச் செய்கின்றார் என்பதைக் கண்டறிந்து — அவர் வருவாய்த் துறைக்கு உட்பட்ட அதிகாரியாகத்தான் இருக்க முடியும்; — அவர் மீது தக்க நடவடிக்கை எடுத்தால் இதுபோன்று பெயர் மாற்றும் சம்பவங்கள் வராது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இதுபோன்று பல பிரச்சினைகள் உண்டு. எனக்குப் புள்ளி விவரம் இப்பொழுது மறந்து விட்டது. எனவே, ரெவின்யூ ரெக்கார்டில் இல்லாத பெயர். எந்தப் பெயரும் அடையாள அட்டையில் வரக் கூடாது. வருவாய்த் துறைக் கணக்கில் எந்தப் பெயர் இருக்கின்றது என்பதை மிகக் கவனமாக அரசாங்கம் கவனித்துக்கொள்ள வேண்டும்.

அதோடு இன்னொரு பிரச்சினை. மேல்பெருவிளை என்று சொல்லக்கூடிய ஓர் ஊர். (மணியடிக்கப்பெற்றது) இதோடு முடித்து விடுகிறேன்.

[2001 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நாடு தழுவிய பிரச்சினை என்றால் உங்கள் தொகுதியைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறீர்களே, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இல்லை, வெளியேற்ற வேண்டுமென்று சொல்கிறீர்களா? இதிலே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கருத்தைச் சொல்லியாகிவிட்டது. தேர்தல் துறைக்கு நம்முடைய அவை முன்னவர் அமைச்சர் என்கிற பொறுப்பு இருந்தாலும் இந்தப் பிரச்சினையிலே அவர்கள் ஒன்றும் பதில் சொல்ல முடியாது. ஆகையினால் என்னைப் பொறுத்தவரைக்கும், மாநிலத் தேர்தல் அதிகாரி அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறேன். இன்று மாலை 4 மணி அளவிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவரைப் பார்ப்பதற்கும், அவர்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கும் நான் ஏற்பாடு செய்திருக்கின்றேன். ஆகவே, கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே நிச்சயமாகப் போகலாம்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் இரண்டு அடடைகளைக் கொடுத்தார். ஒன்று முதலமைச்சர்; இன்னொன்று மத்திய அமைச்சர். இவ்விரண்டையும் பார்த்தேன். இரண்டும் ஆயிரம் விளக்குத் தொகுதி தான். சைதாப்பேட்டை தொகுதி இல்லை.

இது உண்மையான கார்டு, இது அவர்களிடம் இருக்க வேண்டிய அட்டை என்று எனக்குத் தோன்றுகின்றது. ஆகவே, இது இவரிடம் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. இதை என்னிடம் காட்டிவிட்டுத்தான் அவர் பேசியிருக்க வேண்டும். அந்த முறையைக் கடைப்பிடிக்கவில்லை.

இப்பொழுது நான் இந்த அட்டை, இது உண்மையான அட்டையா, எப்படி என்று விசாரணை செய்ய வேண்டும். அதைத் தேர்தல் அதிகாரி மூலமாக விசாரணை செய்வதற்கு உத்தரவிடுகின்றேன்.

ஒரு கம்பெனியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் சொன்னார்கள். Mega Lazer Company, அது சைதாப்பேட்டையிலே இருக்கிறது; கறுப்பு சிவப்பு கொடி பறக்கிறது என்று. அந்தக் கம்பெனி தண்டையார்பேட்டையிலே இருக்கிறது, சைதாப்பேட்டையில் இல்லை என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



2001 ஜனவரி 24]

*முற்பகல் 11-25*

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார். சைதாப்பேட்டையில் மெகா லேசர் கம்பெனி இருக்கிறது, கொடியெல்லாம் பறக்கிறது, முதலமைச்சர் படத்தையே சைதாப்பேட்டையில் போட்டோ எடுத்துப் போடுகிறார்கள் என்ற தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் மக்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள். இப்பொழுதுதான் போன் வந்தது. தவறான தகவலைச் சொன்னதற்கு, பேரவைத் தலைவர் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை இங்கே நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் அந்தக் கம்பெனியே அந்த இடத்தில் இல்லை என்று நானே சொல்லிவிட்டேன். நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு மேல் ஒன்றும் நடவடிக்கை தேவையில்லை. (குறுக்கீடு) எனக்கு கம்பெனி பற்றி ஒன்றும் முக்கியமில்லை. இந்தப் படம் உண்மையான படமா, அவர் கைக்கு எப்படிப் போனது என்றுதான் நான் விசாரணை செய்யவேண்டும். அதற்காக நான் வைத்திருக்கின்றேன். இந்த அட்டையை நான் திருப்பிக் கொடுக்க மாட்டேன். நான் விசாரணை செய்வேன். (குறுக்கீடு) என்ன சிரிக்கிறீர்கள் சுந்தரம், சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆயிரம் விளக்கு பகுதியில்தான் முதலமைச்சரின் இந்தப் படத்தை எடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அந்தக் கம்பெனியைப் பற்றித்தான் சொல்கிறேன்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சைதாப்பேட்டையில் இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சைதை கா. கிட்டு:** சைதாப்பேட்டையில் எடுத்தது என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் உட்காருங்கள். சைதை கிட்டு, உட்காருங்கள். பேரவைத் துணைத் தலைவர் இப்படி உட்கார்ந்துகொண்டே பேசக்கூடாது. திரு. சுந்தரம், பேசுங்கள்.

[2001 ஜனவரி 24

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மத்திய தொழில் துறை அமைச்சரும், முதலமைச்சரும் ஆயிரம் விளக்குப் பகுதியில்தான் இருக்கிறார்கள். ஆயிரம் விளக்குப் பகுதியில்தான் அது எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கம்பெனி பற்றி நான் சொன்னேனேயொழிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கம்பெனி அங்கே இல்லை என்று சொல்கிறார்கள். அது வேறு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எனக்குக் கிடைத்த தகவலைத்தான் நான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி, உங்களுக்குத் தெரிந்த தகவலைச் சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எனக்குக் கிடைத்த தகவலின்படி சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. உங்களுக்குத் தெரிந்த தகவலை நீங்கள் சொல்லலாம். ஒன்றே ஒன்று சொல்கிறேன். இந்த அட்டையைப் பற்றி இங்கே நீங்கள் பேசுவதற்கு முன்பு இந்த அட்டையை என்னிடம் காட்டிவிட்டுத்தான் பேசியிருக்க வேண்டும். நீங்கள் 5 வருடங்களாக இங்கே உறுப்பினராக இருக்கிறீர்கள். இப்போது கட்சித் தலைவராக வேறு ஆகியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவருக்கு ஆதாரம் காட்டாமல் அவையில் பேசக்கூடாது என்னும் விதியை இந்த ஐந்தாண்டுகளில்கூட நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை என்றால், அடுத்தாற்போல எப்படி நீங்கள் மந்திரி வேலை பார்க்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அது முக்கியமானது. அது எனக்கு வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கார்டு எப்படி உங்களுக்கு வந்தது, எப்படிப்போனது என்று நான் விசாரணை பண்ணியாக வேண்டும். ஆகையினால் அது என்னிடம்தான் இருக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அது தேவைப்படுகிறது. விசாரணைக்குப் பிறகு என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். அது எனக்கு வேண்டும்.



2001 ஜனவரி 24]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்டைகள் தங்களிடம் இருப்பது விசாரணைக்காக. இந்த அட்டைகள் அவருக்கு எப்படி வந்தன என்று தெரியவேண்டும். ஏனென்றால், இந்த அட்டைகள் நியாயமாகச் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டியவை. ஏனென்றால், என் அட்டை எனக்கு வந்திருக்கிறது. அமைச்சர் வீராசாமி அட்டை அவருக்கு வந்திருக்கிறது. கலைஞர் அட்டையும், திரு. மாறன் அட்டையும் எப்படியோ திரு. சுந்தரத்திடம் போய் இருக்கின்றன. அவை எப்படிப் போகலாம்? எப்படி அந்த முறைகேடு நடைபெற்றது என்பதும், அந்த முறைகேட்டில் யாருக்கு என்ன பங்கு என்பதும் முழுவதுமாக விசாரிக்கப்பட வேண்டும். மேலும் இந்த அட்டை கலைஞருக்கோ திரு. மாறனுக்கோ கிடைக்காமல் போய்விடுகின்ற நிலைமை இல்லாமல், இந்த அட்டை அவர்களுக்குக் கிடைப்பதற்கும் தாங்கள்தான் உறுதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒரிஜினல் அட்டை என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுக்கும் கொடுக்கப்படும். இது டூப்ளிகேட் என்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என் கையில் கொடுத்துவிடுங்கள் அதை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதை இப்போது கொடுக்க முடியாது. நான்தான் விசாரணை செய்வேன் என்று சொல்லியிருக்கிறேனே. இது இல்லாமல் எப்படி விசாரணை செய்ய முடியும்? விசாரணை செய்துவிட்டு இது ஒரிஜினல் அட்டை என்றால் முதலமைச்சரிடமும் மத்திய அமைச்சரிடமும் கொடுக்காமல், உங்களிடம் கொடுத்தால் நீங்கள் அவர்கள் பெயரில் ஓட்டுப் போடப் போகிறீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் சொல்வது என்னவென்றால், இந்த மாதிரி ஒரு முதலமைச்சருடைய படத்தையே போலியாகப் போடுகிறார்களே, இது எப்படி நடக்கும் என்றுதான்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உட்கார வேண்டும். (குறுக்கீடு) இதையெல்லாம் திருப்பி கிளற வேண்டாம். இது போலியா, உண்மையா என்பதற்காகத்தான் விசாரணைக்கு வைத்து இருக்கிறேன். இந்தப் பிரச்சினை இத்துடன் தீர்ந்துவிட்டது.

[2001 ஜனவரி 24

## 3. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 311 முதல் 315 வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். டாக்டர் தே. குமாரதாஸ், பத்து நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

*முற்பகல் 11-30*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னைப் பேச அனுமதித்ததற்காக நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்கிறபோது, பல ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் ஒன்றைச் சொன்னார்கள். ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னரும் தேவையில்லை என்ற கோஷத்தைச் சொன்னார்கள். அது எவ்வளவு உண்மையாக, தத்ரூபமாக அமைந்திருக்கிறது என்பது இந்த ஆளுநர் உரையைப் பார்க்கிறபோது தெரிகிறது. ஆளுநர் உரையில் பாராட்டுகின்ற அம்சங்கள் ஏதாவது இருக்கிறதா என்று தேடிப் பார்க்கிறபோது, அதிலே பாராட்டுகின்ற அம்சங்களே இல்லாமல் வேதனை அளிக்கிற



2001 ஜனவரி 24] [டாக்டர் தே. குமாரதாஸ்]

விதத்தில் இருப்பதைக் கண்டு நான் வியப்புறுகிறேன், வருத்தப்படுகிறேன். தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டுக்காக ஆட்சியைச் செய்தார்கள். ஆனால் கழகங்களுடைய ஆட்சி—திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி — உங்களுடைய ஆட்சியினுடைய தரம் ஓட்டிற்காக இருக்கிறதே தவிர, நாட்டிற்காக அமையவில்லை என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைவர் காமராஜருடைய ஆட்சியின்போது பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், வேலைவாய்ப்புகள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள், அதேபோல தொழிற்சாலைகள், இப்படி அதிகமாக இருந்து கொண்டிருந்தது உங்களுக்கும் தெரியும். ஆனால் இன்றைய சூழ்நிலையைப் பார்க்கிறபோது வருகிற வருமானத்தில் கிட்டத்தட்ட 20 முதல் 25 சதவிகிதம் மானியங்களாக வாரி இறைக்கப்படுகிறதே தவிர வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படாத சூழ்நிலையை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது குறிப்பிட்டதைப்போல, வீரப்பனுடைய பிரச்சினை என்று சொல்கிறபோது, சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது மட்டுமல்லாமல், தமிழக அரசுக்கே அது ஒரு அவமானமாக அமைந்துவிட்ட சூழ்நிலையையும் நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதற்குக் கொஞ்சம் கூடுதலாக சிரத்தை எடுத்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் தயவுகூர்ந்து அமைதி காக்க வேண்டுகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சி என்று சொல்கிறபோது, இந்த நாட்டு மக்களுக்காக ஆட்சி செய்தார்கள் என்று குறிப்பிட்டேன். இந்த நாட்டிலே மதுக் கடைகள் வராமல் — கள்ளுக் கடைகளாக இருந்தாலும் சரி, சாராயக் கடைகளாக இருந்தாலும் சரி, அயல் நாட்டு மதுக் கடைகளாக இருந்தாலும் சரி, அவை வராமல் — இளைய தலைமுறை கெட்டுவிடக்கூடாது என்கின்ற உணர்வோடு தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சி செய்தார்கள்.

ஆனால் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின்னாலே கழிந்த 30 ஆண்டுகள் தொடர்ச்சியாக நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், கள்ளுக் கடைகளும், மதுக் கடைகளும் நாட்டிலே வந்து, இளைய சமுதாயம், இளைய தலைமுறை கெட்டுப் போகின்ற ஒரு கொள்கையை நீங்கள் கடைபிடித்துக் கொண்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது, வேதனைக்குரியது. ஆகவே, இந்த நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கு கெட்டுக்கொண்டிருப்பதற்கு புள்ளிவிவரக் கணக்கிலே பார்த்தோம் என்று சொன்னாலும்கூட, பெருவாரியாக இந்த மதுக் கடைகள் மூலம்தான் இப்படிப்பட்ட தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது. எனவே அதை நீங்கள் கருத்தில் கொண்டு, தடை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த வாய்ப்பிலே தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு, தூத்துக்குடியிலிருந்து, பெங்களூருக்கு அரிசி கடத்தப்பட்டது என்றவொரு செய்தி வந்தது. இரயிலிலே அரிசியை கடத்திச் சென்றார்கள். அதை நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நேரடியாகப் பார்வையிட்டு சட்டமன்றத்திலே எழுப்பியபோது, அதைக் கடத்தியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தைச் சொன்னீர்கள். ஆனால் இதுவரைக்கும் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள், அரிசியை பறிமுதல் செய்து விட்டீர்களா, என்ன நிலவரத்தில் இருக்கிறது என்பது இதுவரைக்கும் ஒரு புரியாத புதிராக இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக நீங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளையும்...

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்குக் கடத்திச் செல்லப்பட்ட அரிசி பற்றிச் சொல்கிறார் என்று கருதுகிறேன். அவர்களுடைய 5 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டன. 5 பேர் குண்டர்கள் சட்டத்திலே கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரிசி பூராவும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுடைய மில்கள்கூட சில் வைக்கப்பட்டு ஓட்ட முடியாமல் இருந்தன. நீதிமன்றத்தின் மூலமாக அவர்கள் உத்தரவு பெற்று இப்போது மில்லை ஓட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். லாரியும் பறிமுதல் செய்யப்பட்டது. அத்தனை பேரும் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



*முற்பகல் 11-35*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்பது வெகுநாளைய கோரிக்கை. கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளாக நான் சட்டமன்ற உறுப்பினராக கேட்டுக்கொண்டு இருக்கின்ற, எனக்கு முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்ட கோரிக்கை. இன்றையதினம் அது நிறைவேற்றப்பட்டு இருப்பதாக அறிகிறேன். அதற்கு நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வருகிற ஆண்டு அங்கே மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நடைமுறைப்படுத்தப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்று பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் முதலமைச்சர் அவர்கள் காமராஜர் நினைவு மண்டபத்தை திறந்துவைக்கிற அந்த விழாவில் இதை அறிவித்தார்கள். அறிவித்ததோடு மட்டுமல்ல, உடனடியாக கடந்த மாதமே அதற்கென்று தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் இப்பொழுது கன்னியாகுமரியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். Medical Council of India-க்குப் போட வேண்டிய விண்ணப்பங்களையெல்லாம் சரிபார்த்து அதை அனுப்பிக் கொண்டிருக்கிறார். நிச்சயமாகச் சொல்கிறேன். 2001 ஜூன் மாதத்திலே மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். கலைஞரே முதலமைச்சராக வந்து அதைத் திறந்து வைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த உத்தரவாதத்திற்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் சொன்னதைப் போல, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றில்லாமல், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் வலுவாகக் கேட்டுக்கொண்ட கோரிக்கை. அதை நிறைவேற்றியதற்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

குளச்சலிலே ஒரு துறைமுகம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை. அதுவும் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவாக நீங்கள் ஆரம்பித்துத் தந்திட வேண்டுமென்று அந்த மாவட்ட மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் இதில் நான் ஐயப்படுகிறேன் என்று சொன்னால், 1989 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்கிறேன் என்று சொல்லி 347 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒரு அடிக்கல் போட்டார்கள். ஆனால் அது அதற்குப் பிறகு செயல்படாமல் போய்விட்டது. அப்படி ஒரு சூழ்நிலை வந்துவிடக் கூடாது என்கிற உணர்வின் அடிப்படையில் நான் இதை உங்கள் முன்னாலே வலுவாக எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குளச்சலில் ஒரு துறைமுகம் தொடங்க வேண்டுமென்று இந்த அரசு பெருமுயற்சி எடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக மலேசிய அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி ஒரு மாதத்திற்கு முன்னாலே மலேசிய அமைச்சர் திரு. தத்தோ சாமுவேல் இங்கே வந்து நம்முடைய முதலமைச்சர் முன்னாலே M.o.U ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டமும் நிச்சயம் இந்த ஆட்சியிலே வரும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோல ஆசிரியர் பயிற்சிப் பள்ளி பிரச்சினை, மிகப்பெரிய பிரச்சினை. கடந்த ஐந்தாண்டுகளாக மாண்புமிகு கல்வி அமைச்சரிடம் கேட்டு அவரும் பரிசீலிப்பதாகச் சொல்லி, நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு விசாரித்து ஐந்தாண்டுகள் ஓடிப்போய்விட்டன. ஆனால்..... (குறுக்கீடு)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நேரம் வீணாகக் கூடாது என்பதற்காக நான் குறுக்கிட்டுப் பதில் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குழு சொன்ன ஆலோசனையை ஏற்று, டெல்லியிலே சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்ய, வாதத்திலே வல்ல இரண்டு வழக்கறிஞர்களிடத்திலே கலந்து பேசி, இரண்டு மூத்த வழக்கறிஞர்களில் ஒருவர் அதை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது என்று சொல்லி, இன்னொருவர் ஏற்றுகொள்வார்கள், முடிவு நமக்குச் சாதகமாக இருக்காது என்று சொல்லி, எப்படியிருந்தாலும்



அப்பீல் செய்தால்தான் நமக்கு உரிமை கிடைக்கும், இல்லையென்றால் மாநில அரசு இதில் தலையிட்டு செய்ய உரிமை இல்லாமல் இருக்கிறது என்பதற்காக சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்து, சுப்ரீம் கோர்ட்டில் இந்த வழக்கை எடுக்கவே முடியாது என்று மறுத்துத் தள்ளிவிட்டார்கள். ஆகவே, இனி இந்த அரசு வேறு வகையில் வழிதேட அந்த மாணவர்களுக்கு பயிற்சிப் பள்ளியில் சேரும் மாணவர்களில் ஆண்டுதோறும் 40 விழுக்காடு அளவுக்கு அந்தக் குறிப்பிட்ட மாணவர்களில், மூத்தவர் யார் அல்லது அதிகம் படித்தவர் யார், இரண்டு வருடமும் படித்தவர் யார் என்னும் அடிப்படையில் அவர்களைச் சேர்த்து, இதுவரையில் எண்ணூறு அல்லது ஆயிரம் பேர் பயிற்சிப் படிப்பைப் படித்துக்கொண்டு இருக்கிறார்கள். முறைப்படி இரண்டு ஆண்டு படிப்புதான் தரவேண்டுமென்று உயர்நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழங்கிய தீர்ப்பு காரணமாக, குறுகியகாலப் படிப்பு வழங்குவதற்கு ஆசிரியர் பயிற்சியில் இடமில்லை என்று அறிவித்த காரணத்தால், நாங்கள் அந்த முழுமையான பயிற்சிப் படிப்பை வழங்கிக்கொண்டிருக்கிறோம். இப்போது இந்தப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்ந்திருக்கிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்துக்கு நன்றி. ஆனால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் மாணவர்களுக்கு.. (குறுக்கீடு)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தவறான அடிப்படையில் பேசுவது எந்தக் கட்சிக்கும் நல்லதல்ல. அவருடைய கட்சிக்கும் நல்லதல்ல. முதலில் 30 ஆயிரம் பேர் இல்லை. மொத்த எண்ணிக்கையே 23 ஆயிரம். இவர்களுள் இரண்டு ஆண்டு படித்தவர்கள் 14 ஆயிரமோ, 12 ஆயிரமோ. தேர்வு எழுதியவர்கள் இதிலே 10 ஆயிரம் பேர்.

அவர்களுக்கு தேர்வு முடிவு கொடுக்கக் கூடாது என்று சொல்லப்பட்டவர்கள் 4 ஆயிரம் பேர். ஆகவே, நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அந்த எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தாகிவிட்டது. பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்ததாகச் சொல்பவர்களையெல்லாம் சேர்த்து ஒரு கணக்கு வைத்துக்கொண்டு 30 ஆயிரம் என்று பேச வேண்டிய அவசியமில்லை. நியாயமாக பாதிக்கப்பட்டவர்களான 6, 7 ஆயிரம் பேர்களில் 2 ஆயிரம் பேருக்கு இந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள்கூட வரவில்லை.

*முற்பகல் 11-40*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் எடுத்திருக்கிற முயற்சிக்கு நன்றி. பாக்கியிருக்கின்றவர்களுக்கும் இந்த ஆண்டுக்குள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதிலே மத்திய அரசு நிதி வழங்கி DIET என்ற சிறந்த ஆசிரியர் பயிற்சி வழங்குகிற கல்வி நிறுவனம் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் இப்போது 29 மாவட்டங்களிலும் நடைபெறுகிறது. அதிலே இடம் கொடுத்தால்தான் அந்தப் பயிற்சி சிறப்பாக இருக்கும் என்ற முறையில் அதிலே சேர்க்கப்படுவோரில் 100-க்கு 40 பேர் அளவிற்கு இந்த மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாகப் பதில் சொன்னார்கள். இதிலே பல மாணவர்களுக்கு வயது வரம்பு கூடிப்போய்விட்டது என்று சொல்கிறார்கள். ஆகவே, வயது வரம்பைத் தளர்த்தி அந்த மீதம் இருக்கின்ற மாணவர்களுக்கும் பயிற்சிப் பள்ளிகளில் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தனியார் பள்ளிகளிலும் இந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கு நம்முடைய அரசு ஏன் முயற்சி செய்யக் கூடாது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டு வரையிலே வயது வரம்பை இந்த மாணவர்களுக்கு மட்டும் தளர்த்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. வயது வரம்பை 5 ஆண்டு வரைக்கும் தளர்த்துவது ஏனென்றால் அவர்கள் படிப்பு ஏற்கெனவே விட்டுப்போன காரணத்தினால் வயது வரம்பு என்ன தீர்மானிக்கப்பட்டிருக்கிறதோ அதைவிட 5 ஆண்டு வரையில் இந்த மாணவர்களைச் சேர்க்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதை என்னுடைய நினைவிலிருந்து நான் சொல்கிறேன். பெரும்பாலும் சரியாக இருக்கும். தனியார் பயிற்சிப் பள்ளிக்கூடங்களிலே, சிறுபான்மைப் பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு மாணவர்களைச் சேர்ப்பதிலே தனி உரிமை இருக்கிறது. பெரும்பாலான பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் சிறுபான்மை சமூகத்தினரால் நடத்தப்படுகின்றன. அதிலே தலையிடுவது அவ்வளவு நியாயமாக இருக்காது. ஏனென்றால் அது அவர்கள் தனி உரிமை. திரு. ஞானசேகரன் ஊர்கிஸ் கல்லூரி Admission பற்றி ஒரு வேண்டுகோள் கொடுக்கிறபோது அது ஏற்கெனவே சிறுபான்மைக் கல்லூரி, அதிலே



அரசாங்கம் மாணவர்களைச் சேர்க்கிற விதிமுறையைக் கட்டாயப்படுத்தாதீர்கள், அவர்களுடைய உரிமையைப் பாதிக்கும் என்று விண்ணப்பம் கொடுத்தார். இந்தமாதிரி பல பேர் கருதுகிற காரணத்தால் அரசு தலையிட முடியாத நிலைமை உள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி மாணவர்களைப் பொறுத்தளவிலே சிறுபான்மையினருக்கு உரிமையிருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. என்னுடைய மாவட்டத்திலே விருதம்பட்டியில் இருக்கக்கூடிய ஒரு தனியார் பள்ளியில் பிஷப்பே ஸ்டே வாங்கிவிட்டார். ஆனால், அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய கரஸ்பான்டெண்ட் ஒவ்வொருவரிடமும் ரூ.2 இலட்சம், ரூ.2½ இலட்சம் வாங்கி 32 பேரை சேர்த்து ரெடியாக வைத்திருக்கிறார்கள். இப்படி இதிலே பணம் பெறுவதை இந்தத் துறை எப்படியாவது தடுத்து நிறுத்துவார்கள் என்று சொன்னால், தரமான மாணவர்கள் சேருவதற்குரிய வாய்ப்பு கிட்டும். இதற்கு அமைச்சர் ஏதாவது செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எங்கே எப்படித் தலையிடலாம் என்றுதான் நாங்கள் காத்திருக்கிறோம். ஆனால், தகுந்த புகார் வரவில்லை. ஞானசேகரன் அவர்கள் இங்கே இன்னார் இன்னாரிடத்தில் இவ்வளவு பணத்தை - வக்கீலாக இருப்பதால் சொல்கிறேன் - கொடுத்ததற்கு இன்ன ஆதாரம் என்று சொல்லி அரசிடம் கொடுத்தால் நாங்கள் விசாரணை நடத்தி அந்த நிறுவனத்தின்மீது தகுந்த நடவடிக்கை எடுப்போம். அப்படி ஏற்கெனவே பொறையாற்றிலே, தரங்கம்பாடியில் நடைபெறுகிற ஒரு நிறுவனத்தைப் பற்றி ஒருவர் புகார் கொடுத்ததாக ஒரு கடிதம் வந்தது. வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அறிவார் என்று தொடர்புபடுத்தி இருந்தது. பிறகு விசாரணை நடத்தியபோது நாங்கள் யாரும் பணம் கொடுக்கவில்லை, நாங்கள் இடம் கேட்கவில்லை என்று வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்துவிட்டார். ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. ஏனென்றால் திருடுகிறவனும், திருட்டுக்கு உடந்தையாக இருக்கிறவனும் இரண்டு பேரும் ஒன்றாக இருக்கிறபோது யாரும் எங்களிடம் சான்றுடன் புகார் கொடுப்பதில்லை. அதுபற்றி ஞானசேகரன்தான் கவனித்து வாங்கித் தர வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அதற்குத்தான் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். அவர் பேசட்டும். (குறுக்கீடு) அவரைப் பேசவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரவிரும்புவது, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய் விலை, இரப்பர் விலை — இந்த இரண்டும்தான் இந்த மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தை நிர்ணயிக்கக்கூடியவை—இவை இரண்டும் இன்றைக்கு மிக மிகக் கீழேயிருக்கின்ற ஒரு சூழ்நிலை. எனவே, வெளிநாடுகளிலிருந்து கொப்பரைத் தேங்காய் இறக்குமதி செய்வதை, synthetic rubber இறக்குமதி செய்வதை அரசு ஊக்குவிக்காமல் அவைகளை தடுத்து நிறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் தந்திருக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதைப்போல வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதை தடை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பரளியாறு, கீரிப்பாறை இந்தப் பகுதிகளிலே 1964-ல் இரப்பர் மரம் நடப்பட்டது. அதைப் பாதுகாத்து slaughter செய்திருக்கிறார்கள். Slaughter செய்த பிறகு புதிதாக இரப்பர் பிளான்டேஷன் செய்யப்படாத சூழ்நிலை இருக்கிறது. இதனாலே வரக்கூடிய 2, 3 ஆண்டுகளில் பால் வடிக்கும் தொழிலாளர்கள், இரப்பர் தோட்டத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, இரப்பர் பயிரிடப்பட்ட பகுதிகளில் மீண்டும் அதைப் பயிரிடுவதற்கு வனத் துறை முனைப்புடன் செயல்பட வேண்டுமென்ற வேண்டுகோளோடு, அந்த இரப்பர் கார்ப்பரேஷனை இரத்துச் செய்து, வனத் துறையே, அரசாங்கமே அதை டேக் ஓவர் செய்து, அரசு இரப்பர் தோட்டமாக அதை மாற்ற வேண்டும்; கார்ப்பரேஷன் இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்; அதையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். அங்கு பணியாற்றிக்



கொண்டிருப்பவர்கள், அங்கு பல கோடி ரூபாய் மோசடி நடந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தனிக் கவனம் செலுத்தி, அந்தக் கழகத்திற்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-45*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அரசு இரப்பர் கார்ப்பரேஷனே பெருத்த நஷ்டத்தில் போய்க்கொண்டிருக்கிறது; ரூ6 கோடி, ரூ7 கோடி நஷ்டத்திலே போய்க்கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, அங்கே கோடிக் கணக்கிலே ஊழல் பண்ணுவது எப்படி? அவர்களால் சம்பளமே கொடுக்க முடியாமல், நாம் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அது இலாபத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒன்று. ஊழலின் காரணமாக அது நஷ்டத்தில் இருக்கிறது. நீங்கள் வந்த பிறகு அல்ல; உங்களுக்கு முன்னாலேயிருந்து. (குறுக்கீடு)...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கழிந்த ஆட்சி என்று சொல்கிறீர்களா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் அதிலே கருத்து வேறுபாடு உடையவன் அல்ல, கழிந்த ஆட்சியிலேயிருந்து தொடர்ச்சியாக, அங்கே ஊழல் மலிந்து, நல்ல ஒரு ஸ்தாபனம் இன்றைக்கு சீரழிந்து சின்னாபின்னமாகப் போய்க்கொண்டிருக்கிற சூழ்நிலையில், (குறுக்கீடு) அங்கே ஊழல் நடக்கலாம், ஆதாரபூர்வமாக இல்லாமல் அதைப்பற்றி நான் சொல்வதற்கில்லை. அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு 3 மாதத்திற்கு முன்பாகவே ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. உயர்த்தப்பட்ட ஊதியம் வழங்கப்பட முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். எனவே, அதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் பல்வேறு போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அதிலே கவனம் செலுத்தி, அரசு ஒப்பந்தம் போட்டு இருப்பதுபோல, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்,

அதேபோல, Purchase Tax தோட்டத் தொழிலாளர்களின் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இரப்பர் பர்சேஸ் பண்ணும்போது 8 சதவீதம் அவர்களுக்கு Purchase Tax போடுகிறார்கள். அதேபோல Sales Tax 4 சதவீதம் போடுகிறார்கள். அதேபோல மார்க்கெட் செஸ்

1 சதவீதம் போடுகிறார்கள். ஆக 13 சதவீதம் இரப்பர் விற்பனை ஆகும்போது வரியாகப் போகிறது. ஏற்கெனவே 65 ரூபாய் விற்றுக்கொண்டிருந்த இரப்பர், இன்றைக்கு 23 ரூபாய், 24 ரூபாயாக விற்கிறது. இதிலேயும் விற்று வரி கூட்டுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, தோட்ட முதலாளிகள் அந்தத் தோட்டங்களையே மூடிவிடலாமா என்கிற ஒரு நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, இரப்பரின் விலை குறைந்து இருக்கிறதே தவிர, இரப்பரினால் செய்யப்பட்ட டயர் அல்லது வேறு பொருட்களின் விலை குறையவில்லை. அன்றைக்கு 50 ரூபாய்க்கு வாங்கிய பொருட்களின் விலை இன்றைக்கு அதே விலைக்கு விற்காத நிலைதான் இருக்கிறது. எனவே, கூடுதல் பணம் எங்கே போய்ச் சேருகிறது என்பதை நீங்கள் கண்டுபிடித்து, (மணி அடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்; அந்த இரப்பர் தொழில் ஒட்டுமொத்தமாகப் பாதித்து விடாமல் நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு பள்ளிகளில் பணியாற்றுகின்ற குறியீட்டாளர்கள் 227 பேர் ஜி.ஓ.எண் 527-ன் கீழ் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 218 பேர் பணி நிரந்தரம் செய்யப்படாத சூழ்நிலை இருக்கிறது. அதையும் கவனத்திலே கொண்டு அவர்களை நீங்கள் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு மிக்க வேதனையான செய்தி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மேற்குக் கடற்கரை சாலைப் பணி; அந்த மேற்குக் கடற்கரை சாலைப் பணி ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. அது ஆரம்பிக்கப்பட்டபோது இருந்த நிலையும் இல்லாமல், இப்போது மனித நடமாட்டமே இல்லாத விதத்தில் இட்டத்தட்ட 20, 25 கிலோ மீட்டர்—அதிலே பெரும்பகுதி என்னுடைய தொகுதியில் வருகிறது—பெருமுனை, கருங்கல், தேங்காய்பட்டினம், (மணி அடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) எல்லாவற்றையும் சேர்த்து.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தயவுசெய்து அனுமதியுங்கள். நான் கான்ட்ரோவர்ஷியலாகப் போகமாட்டேன். அந்த மேற்குக் கடற்கரை சாலை 25 கிலோ மீட்டர் வரை ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டு



இருக்கிறது. நாங்கள் பல்வேறு போராட்டங்கள் நடத்தி, அதிகாரிகள் நிச்சயமாக மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் முடித்துத் தருவோம் என்று எங்களிடம் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை இன்று சந்தித்துப் பேசியபோது, குமாரதாஸ், நிச்சயமாக மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் அந்த மேற்குக் கடற்கரைச் சாலை முடித்துத் தரப்படும் என்ற உத்தரவாதத்தை அளித்து இருக்கிறார்கள்.

*முற்பகல் 11-50*

எஸ்.டி.. மாங்காடு பாலம். 100 அடி தூரம் கடப்பதற்கு நாங்கள் 15 கிலோ மீட்டர் சுற்றி வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தையும் நீங்கள் உடனடியாக முடித்துத் தந்திட வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்கள் சங்கம் மத்திய அரசுக்கு இணையாக தமிழக அரசு கால்நடை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வலியுறுத்தி, பல்வேறு போராட்டங்களை நடத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும்கூட அதை நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆண்டுகள் பல ஓடிவிட்டன. குறைந்தபட்சம், 29 ஆம் தேதி அறிவிக்கிற இடைக்கால பட்ஜெட்டிலாவது அவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பளத்தை வழங்குகிற வகையில் அறிவிப்பு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களின் சார்பாக சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே 60 வயதானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை; அவர்களுக்கும் ஈ.எஸ்.ஐ.யிலே மருத்துவ வசதி வேண்டுமென்ற கோரிக்கை; கட்டுமானப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை; அதேபோல வெளி நாடுகளிலிருந்து கட்டுமானப் பணியாளர்களுக்கு உலக டெண்டர்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. பென்னார்டு. (குறுக்கீடு) டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் 20 நிமிடமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** உலகளாவிய டெண்டர் போட்டு, வெளி நாடுகளிலிருந்து கட்டுமானப் பணியாளர்கள் இங்கே வருகிறபோது, இங்கேயுள்ள ஏழையெளிய மக்களுக்கு கட்டுமானப் பணிகளில் வேலை செய்கிற வாய்ப்பும், வசதியும் இல்லாமல் இருக்கிற காரணத்தினாலே, உலகளாவிய டெண்டர்கள் போடக் கூடாது என்ற கோரிக்கையை அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். அதையும் நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருவாரியாக யானைக்கால் நோய் வந்து நிறைய பகுதிகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் உடல் ஊனமுற்றவர்கள் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகள் வழங்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறபோது கருணை அடிப்படையில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சென்னை கார்ப்பரேஷனில் வழங்கியிருக்கிறார்கள். அதே மாதிரி மொழிப் போராட்டத் தியாகிகளுடைய வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலே வேலையிலே முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே வீட்டுமனைகளைப் பதிவு செய்கிறபோது பத்திரப் பதிவுக் கட்டணத்தை மூன்று மடங்கு அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அது சாதாரண மனையாக இருந்தாலும் விளை நிலங்களைப் போல 3 மடங்கு — 13 ரூபாய் என்று முன்பு இருந்தது என்று சொன்னால், இப்போது 52 ரூபாய் பத்திரப் பதிவுக்கு என்று ஓர் உத்தரவினைப் போட்டு ஏழைகள் நிலத்தை வாங்கவும் முடியவில்லை, விற்கவும் முடியவில்லை. இதனாலே இவர்கள் பதிவு செய்ய கேரள மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம். இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அதில் என்ன குளறுபடி, எப்படி நடந்திருக்கிறது. ஏன் இந்த மாவட்டத்தில் மட்டும் உச்சவரம்பிற்கு மேலாக பணத்தை வசூலிக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அப்படி பாதிக்கப்பட்டு இருக்கிற மக்களுக்கு...



***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பத்திரப் பதிவுக்குக் கூடுதலாகக் கட்டணம் வசூலிப்பதாகச் சொல்கிறார்கள். கூடுதலாக வசூல் செய்வதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே கிராம நத்தம் இல்லாத காரணத்தால் மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கவில்லை என்ற புகார் எனக்கு வந்திருக்கிறது. அங்கே கூடுதலாகப் பணம் யாரும் வசூலிப்பதில்லை. பத்திரப் பதிவுத் துறையிலே பதிவு செய்வதற்குக் கூடுதலாகப் பணம் கேட்பது இல்லை. அங்கே கிராம நத்தம் இல்லாமல் முழுமையாக பேரூராட்சி மன்றமாக இருக்கிறது. கிராம நத்தம் இல்லையென்று தகவல் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பேசி இருக்கின்றேன். அது சம்பந்தமாக விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசியது போதும். திரு. இரா. பெர்னார்டு.

***திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அருமையான ஆளுநர் உரை இந்தியத் துணைக் கண்டத்தின் இறையாண்மையையும் சமூக நீதியையும் கட்டிக் காக்கிற வகையில் உள்ளதோடு மொழி உணர்வோடு தமிழகத்தில் நலத் திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் அறிவித்திருக்கிற உரை மட்டுமல்ல, 5-வது முறையாக கலைஞர் அரசு, கழக அரசு அமைப்பதற்கு அச்சார உரையுமாகும். அந்த வகையில் இந்த உரை மீது கருத்துச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கும் அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

50-ல் கிடைக்காதது 5-ல் கிடைத்திருக்கிறது. 50 ஆண்டு காலமாக குமரி மாவட்டத்திற்குக் கிடைக்காத பல நற்திட்டங்கள் 5 ஆண்டுகளில் கிடைத்திருக்கின்றன. அந்த வகையில், உலகப் பொதுமறை தந்த அய்யன் வள்ளுவருக்குச் சிலை, பொய்கை அணைத் திட்டம், மாம்பழத்தாறு அணைத் திட்டம், மேலமணக்குடி-கீழமணக்குடி இணைப்புப் பாலம், மேற்குக் கடலோர இணைப்புச் சாலை, பெருந்தலைவர் காமராஜருக்கு மணி மண்டபம், அமரர் சுயமரியாதைச் சுடர் ஜீவாவுக்கு மணி மண்டபம். எனது கன்னிப் பேச்சில், எனது தொகுதி ஆசாரிபள்ளத்திற்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தேன். அது

நிறைவேற்றப்பட்டு, இன்று தனி அலுவலர் நியமிக்கப்பட்டு பூர்வாங்கப் பணி நடந்து வருவதற்கு மாண்புமிகு முதல்வருக்கும், துறை அமைச்சருக்கும் மக்கள் சார்பில் நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குளச்சலில் வர்த்தகத் துறைமுகத்தோடு மீன்பிடித் துறைமுகமும் அமைக்க வேண்டுமென்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், துறை அமைச்சர் அவர்களும், அரசும் செய்து வருகிற அருமையான பணிக்கு என்னுடைய நன்றியை, பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென் மாவட்டங்களில் மனித நேயத்திற்கும், சமூக நீதிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க இருப்பதை வரவேற்று, குமரி மாவட்டத்திற்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.

*முற்பகல் 11-55*

சிறுபான்மையினரை மதிக்கின்ற அரசு கழக அரசு, கலைஞர் அரசு. ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பார்கள். ஒரு காலத்தில் தமிழகத்தை சீர்கேடாக்கி, சின்னாபின்னமாக்கி, அழித்து சிதைத்து சின்னாபின்னமாக்கிய ஒரு பெண்ணினுடைய ஆட்சியில் ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்ய சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண் நீதி அரசரை தமிழகத்தின் ஆளுநராக ஏற்கச் செய்து அவர் மூலம் பல நல்ல திட்டங்களை வகுத்துச் செப்பனிடுகின்ற அரிய பணியை செய்திருக்கின்ற அந்த உரை வரவேற்கத்தக்க உரை, பாராட்டத்தக்க உரை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டவன். மாற்றுக் கட்சியினர் இந்த உரையை வரவேற்று, வாழ்த்திப் பாராட்டாவிட்டாலும், வசை கூறாமல், வசை பாடாமல் இருக்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். இந்த வகையில் அய்யன் வள்ளுவன்

> 'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்'

என்ற குறளையும்,

> 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற குறளையும் நமக்குத் தந்திருக்கிறார். அந்த வகையில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நட்பு, கூட்டு பலவகை. அதில்



கூடா நட்பு ஒரு வகை. அதற்கும் அய்யன் வள்ளுவர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

> "உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
> பாம்போடு உடனுறைந் தற்று"

இந்தக் குறளை இந்த மாமன்றத்தில் நினைவுபடுத்துவதில் நான் பெருமைப்படுகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில் பல திட்டங்களை வகுத்து, சட்டங்களை வகுத்து நிறைவேற்ற முயற்சித்தபோது அந்தப் பலன்கள் ஏழை எளிய கிராம மக்கள் வாழ்கிற பகுதியில் சென்று அடையவில்லை என்று ஒரு காலகட்டத்தில் மிகுந்த வேதனையோடு வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தவகையில் பார்க்கிறபோது இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அந்த நிலை இல்லை. காரணம் கலைஞர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய மீனவ, விவசாய, நெசவாள மக்களை உயர்த்தவும், தூக்கவும் வகுத்திருக்கிற திட்டங்கள் கிராமங்களைச் சென்றடைந்து, அந்த கிராம மக்கள் நலமும், வளமும் பெற்று மகிழ்ச்சியடைகிறார்கள். அந்தவகையில் சொல்கிறபோது திருமறை ஒரு வாசகத்தை சொல்லியிருக்கிறது. 'ஏழைகளுக்கு இரங்குகின்றவன் பாக்கியவான்', அந்த வகையில் ஏழைகளை உயர்த்தத் திட்டங்களை வகுத்துக் கொடுத்த தலைவர் கலைஞர் இன்றைய முதல்வர் பாக்கியவான் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே அந்த பாக்கியவானுக்கு ஏழை மக்கள் சார்பில் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் தூர்வாரி, விவசாயப் பெருங்குடி மக்களை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிற ஒப்பற்ற அரசு, இந்த அரசு என்பதற்கு என்னுடைய பாராட்டுக்கள். ஓடாத தேர்களை எலலாம் ஓட வைத்தீர்கள்; போடாத ஊர்களுக்கு எல்லாம் சாலை போட்டீர்கள்; கிராமங்கள் வளர்ச்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் திட்டம், மின்சார வசதி, தெரு விளக்குகள், சாக்கடை வசதி, சிற்றூர்களுக்கெல்லாம் சிற்றுந்து — மினி பஸ் — வசதி—இவை எல்லாம் மிகுதியாகப் பாராட்டப்படக்கூடிய ஒன்று.

ஆரம்பப் பள்ளி இல்லாத ஊர்களே இருக்கக் கூடாது. அதுதான் கல்வியின் முதிர்ச்சி, வளர்ச்சி என்பதற்காக இந்த அரசு வகுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். தன்னையும் தன் இயக்கத்தையும் உருவாக்கி ஆளாக்கிய தலைவர்களையும், வழிகாட்டிகளையும் நினைவு கூர்ந்து,

*'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு',*

*'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று'*

என்ற அய்யனுடைய குறள்களையும் முதல்வர் கலைஞர் அவர்கள் நெஞ்சிலே பதித்திருக்கிற காரணத்தால், இன்று தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்; பேரறிஞர் அண்ணாவின் பெயரால் மறுமலர்ச்சித் திட்டம், பங்காரு அம்மையார் பெயரால் மகளிர் மேம்பாட்டுத் திட்டம ஆகிய இந்தத் திட்டங்களைத் தந்துள்ளார். மனபபூாவமாக மக்கள் வரவேற்றிருக்கிறார்கள். நமக்கு நாமே திட்டம், வருமுன காப்போம் திட்டம், கால்நடை இலவச சிறப்பு முகாம் திட்டம் ஆகிய திட்டங்கள் வரவேற்கப்பட்டு மக்களால் பாராட்டப்படுகின்றன. பூமாலைத் திட்டம், புகழ் வாய்ந்த திட்டமாக இருக்கிறது. வாழ்ந்து காட்டுவோம், வாழ வைப்போம் திட்டம், வரவேற்புக்குரியதாக இருக்கிறது. அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம, விவசாயிகள் நலம் பேணும் திட்டம், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் இதுபோன்ற வேறு பல திட்டங்கள் மக்களைச் சென்றடைந்து மகிழ்ச்சிப் பெருக்கால் மக்கள் இந்த ஆட்சியை பொற்கால ஆட்சி, பொற்காலந்தான் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலம் என்று சொன்னால், பாராட்டினால் அது மிகையாகாது.

பாலங்கள், சாலைகள். நாலரை ஆண்டு காலத்தில் ஏறத்தாழ 4537 கோடி ரூபாயில் சாலைகள், பாலங்கள் வைத்து சிறப்பு செய்வித்த முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். பரந்தும் விரிந்தும் இருக்கின்ற சென்னை மாநகராட்சியில் பெருகி வரும் ஜனத்தொகையையும், போக்குவரத்து நெருக்கடியையும் தீர்த்து வைத்து சமாளிக்கின்ற வகையில் 9 பாலங்கள் அமைத்து சிறப்பு செய்திருக்கிற இம்மாமன்றத்தின் உறுப்பினரும், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினரும், மாநகர மேயருமான, வணக்கத்திற்குரிய தளபதி அவர்களுடைய பெரும் பணியை, தாய்த் தமிழகத் தலைநகருக்கு வந்து வசதியைப் பெறுகின்ற மக்கள் சார்பில் இதய பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

*நண்பகல் 12-00*

அடுத்து, கணினி கல்வி ஏழையெளிய மாணவர்களும், கணினிக் கல்வியைத் தெரிந்துகொள்ளும் வகையில், விஞ்ஞான விரிவாக்கத்தையும், அறிவியல் வித்தைகளையும் ஏழை மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலே பெறுகின்ற வகையில் செய்திருப்பதோடு நடப்பாண்டில் 60,851 மாணவர்கள் கணினிக் கல்வியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன் இந்த ஆண்டு அரசுக் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில், இந்தத் திட்டம் அரசுக் கல்லூரிகளிலே நிறைவேற்றப்படவிருப்பது பாராட்டுக்குரியது.



**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சுப. தங்கவேலன்—தலைமை)**

அடுத்து, முக்கியமான விஷயம். தமிழ் இணைய மையங்கள், உலகில் வாழும் தமிழ் மக்கள் தமிழைக் கற்கவும், தமிழின் சிறப்பு, பண்பாடு, தமிழர்களின் வரலாறு, கலை, கலாச்சாரம், அரசியல், நாகரீகம், மொழிவளம், இலக்கியம், இலக்கணம் இவற்றோடு தற்கால தமிழாய்ந்த தமிழரின் ஆட்சிப் பெருமையை உலகத் தமிழர்களும், உலக மக்களும் தெரிந்துகொள்வதற்கு இந்த இணைய மையங்கள் பயன்படுமென்பதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வரும் பிப்ரவரித் திங்களில் தொடங்க இருப்பது தமிழுக்குச் செய்யும் ஈடு இணையற்ற தமிழ்த் தொண்டு ஆகும். தமிழருக்கு எல்லாம் பெருமை தரும் அருஞ்செயலாகும். இந்த அருஞ்செயலுக்கு மூலகாரணமான முதல்வரை உலகப் பொதுமக்கள் சார்பில் பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன்.

கலைஞர் ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட மீனவர் நலன் கருதி, மீனவர்களுக்குப் பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொடுத்ததோடு, 1989 ஆம் ஆண்டு பின்தங்கிய மீனவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க தமிழ்நாடு முழுவதும் வாழும் கிருத்தவ மீனவர்கள் உட்பட அனைத்து மீனவர்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து மீனவர்களுக்குப் புதிய நல்வாழ்வு அளித்துள்ளீர்கள். அதற்காக, பலமுறை இந்த மாமன்றத்தின் மூலமாகப் பாராட்டும், வாழ்த்தும் நான் தெரிவித்திருக்கிறேன். இப்போதும் தெரிவிக்கிறேன். ஆயினும், குமரி மாவட்டத்தில் வாழும் சிறுபான்மை மீனவ கிருத்தவ பரவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை. இது குறித்து மனுக்கள் மூலமாகவும், இந்த மாமன்றத்திலும் பல்வேறு முறை நான் வேண்டியிருக்கிறேன். தற்போது குமரி மாவட்டத்தில் கிருத்தவ மீனவ பரவர் சமுதாயத்தைச் சார்ந்த சிலர் நீதிமன்றத்தில் முறையிட்டு ஒரு நல்ல தீர்ப்பைப் பெற்று அந்தத் தீர்ப்பின் நகலை தங்களின் மேலான பார்வைக்கும் உரிய நடவடிக்கைக்கும் தந்துள்ளார்கள். தாங்கள கனிவுடன் பரிசீலித்து உரிய ஆணை பிறப்பித்து, குமரி மாவட்ட மீனவ கிருத்தவ பரவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கான சான்றிதழ் வழங்க அதிகாரிகளுக்கு உரிய ஆணை பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிக மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதை இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள அத்தனை மக்களும் பாராட்டுகிறார்கள். நாடும் பாராட்டுகிறது. அன்றாடத் தேவையான சமையல் எண்ணெய், உணவுப் பொருட்கள் விலை உயர்வைத் தடுக்க உயர்மட்டக் கண்காணிப்புக் குழு அமைத்து சிறப்பாகச் செயல்பட்டு இருப்பதற்காக நான் துறை அமைச்சரை மிகவும் பாராட்டுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த மாநிலத்திலும் கொடுக்காத அளவுக்கு 77 இலட்சம் ரூபாயைக் கொடுத்து மக்களுக்கும் எங்களுக்கும் இருக்கின்ற இணைப்பையும், பிணைப்பையும் அதிகப்படுத்தி, ஒரு சிறப்பான நிலையை, ஒரு கௌரவத்தை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை தலை தாழ்த்தி வணங்கி இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்குவது பாராட்டுக்குரியது. தொழில் துறையில் தமிழகம் ஆசியாவின் நுழைவாயிலாக இருக்கும் என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் அறிவித்துள்ளது பெருமையளிக்கிறது. முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முதலிடத்தைப் பிடித்து வருகிறது என்ற முதல்வரின் மகத்தான அறிவிப்பு தமிழ்நாட்டுக்குப் பெரும் சிறப்பைத் தருகிறது, பாராட்டுகிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரது சமூக உரிமைகளைப் பாதுகாக்க நல்ல திட்டங்கள் தமிழக அரசால் வழங்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

மீனவர்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் இலவச மின் திட்டம் வகுத்து இருப்பது பாராட்டுக்குரியது.

30 மாதத்தில் 300 கோடி ரூபாய் இலஞ்சம் வாங்கிய பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபரான நடிகரை விரட்டி அடித்த மக்களுக்கு முன் உதாரணமாக இருந்தது தமிழகம்தான். 1996 ஆம் ஆண்டு ஊழல் செய்தவர்களை நாட்டைவிட்டு ஓட்டி, ஓரம் கட்டியிருக்கிற மக்கள் தமிழ் மக்கள். எனவே எதிர்காலத்திலும் தமிழ் மக்கள் தவறு செய்யமாட்டார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்லி, இந்த நிலையை உருவாக்கிய முதல்வர் அவர்களையும், அரசையும், அமைச்சர்களையும் நான் இங்கே பாராட்டுகிறேன்.



சுதந்திரப் பொன்விழா ஒரு சிறப்பான நிகழ்ச்சி. அமைச்சர்கள் வரலாம் போகலாம். முதல்வர்கள் வரலாம் போகலாம். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு ஒரு தனிப் பெருமை என்னவென்று சொன்னால், சுதந்திரதின வெள்ளி விழாவிலும் அவர்தான் முதலமைச்சர். சுதந்திரதின பொன்விழாவிலும் அவர்தான் முதலமைச்சர். இன்று குடியரசு தின பொன்விழாவிலும் அவர்தான் முதலமைச்சர். இந்தக் காலகட்டத்தில் இந்த மாமன்றத்தில் அவருக்குக் கீழே உறுப்பினராக இருந்து பணியாற்றுகின்ற, செயலாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றதை நினைத்து இதயபூர்வமாக மகிழ்ச்சியடைகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

*பிற்பகல் 12-05*

எனக்கு முன்னால் பேசிய எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள், அதையே நானும் சொல்லி, கொப்பரைத் தேங்காய்க்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்; விலை நிர்ணயம் வேண்டும் என்றும், படித்த மாணவர்களுக்கு, சுதந்திரப் போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்கும், மொழிப்போர் தியாகிகளின் பிள்ளைகளுக்கும் வாய்ப்புகள் வழங்கி உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரையை நான் இதயப்பூர்வமாக வரவேற்று, அதேநிலையில் முதல்வர் கலைஞர் அவர்களுடைய உற்ற நண்பரான கவியரசு கண்ணதாசன் அவர்கள் சொல்லியிருக்கிற பாடல் வரிகளைச் சொல்லி நான் என் உரையை நிறைவு செய்ய இருக்கிறேன்.

"போற்றுவார் போற்றட்டும்;
புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்.
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் இயம்பும் என்றால்
எடுத்துரைப்பேன், எவர்வரினும் நில்லேன்-அஞ்சேன்"

என்று சொல்லியிருக்கிற கருத்தை இந்த மாமன்றத்திலே தெரிவித்து, இந்த அருமையான ஆளுநர் உரையை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ந்து மன நிறைவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

அரசு நலத் திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துவதற்கு அரசோடு ஒத்துழைத்த அனைத்துத் துறை அதிகாரிகளையும், இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு பாராட்டி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. சுப. தங்கவேலன்):** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க வாயப்புக் கொடுத்தமைக்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு ரேஷனில் வழங்கி வருகின்ற சர்க்கரையை நிறுத்தப் போவதாக அறிவித்து இருக்கிறது. இதன் மூலமாக 60 கோடி மக்களுக்கு இனிமேல் ரேஷனில் சர்க்கரை .வழங்கப்படமாட்டாது என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், மாநில அரசு ரேஷனில் அரிசி வாங்காதவாகள் கூடுதலாக சர்க்கரையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஏற்கெனவே அறிவிததிருக்கிறது. இந்த நிலையில் மத்திய அரசு எடுத்திருக்கக்கூடிய முடிவு மாநில அரசினுடைய கொள்கைக்கு மாறானதாக இருக்கிறது. எனவே, தமிழக அரசு, மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தினாலும்கூட, மானியத்தைக் கொடுத்து, அதன் மூலமாக அரிசி விலை கூடாமல் இருக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியதுபோல, தமிழகத்தில் இருக்கக்கூடிய, வறுமைக் கோட்டிற்கு மேல் இருக்கக்கூடிய மக்களுக்கும் ரேஷனில் தொடர்ந்து சர்க்கரை வழங்குமா என்பதை இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது சம்பந்தமாக மத்திய அரசினுடைய முடிவை எதிர்த்து மாநில அரசு கருத்து தெரிவிக்காமல் இருப்பது வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு நபருக்கு 425 கிராம் என்று மத்திய அரசு சர்க்கரை தருகிறது. ஆனால், மாநில அரசு நபருக்கு 500 கிராம் என்றும் ஒரு குடும்ப அட்டைக்கு 2 கிலோ என்ற அளவிலேயும் சர்க்கரை வழங்கிக்கொண்டு வருகிறது. அதற்கே ஒவ்வொரு மாதமும், மத்திய அரசு தருகின்ற சர்க்கரையை விட, கூடுதலாக 3,000 டன்னை நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். 26,000 டன் அவர்கள் தருகிறார்கள் என்று சொன்னால், கூடுதலாக



3,000 டன் நாம் மானியம் கொடுத்து வாங்கி மக்களுக்கு வழங்கிக் கொண்டு வருகிறோம். இதிலே ஏற்கெனவே அரிசி தேவையில்லை சர்க்கரை வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறவர்களுக்கு எந்த விதத்திலும் அதை நிறுத்தாமல் நிச்சயமாக வழங்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மத்திய அரசு அறிவித்திருக்கிறது, வறுமைக் கோட்டிற்கு மேலே இருக்கிறவர்களுக்கு சர்க்கரை இல்லை என்று. துறையின் சார்பாக நாங்கள் எழுதியிருக்கிறோம்; எங்களுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. கே. தங்கமணி:** தேயிலை விவசாயிகள் தங்களுடைய உற்பத்தித் தேயிலைக்கு அதிக விலை வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடினார்கள். போராடிய விவசாயிகள்மீது காவல் துறை கடுமையான தாக்குதலைத் தொடுத்து இருக்கிறது. பெண்கள் உட்பட ஏராளமானவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மனித உரிமைக் கமிஷன் சென்று ஆராய்ந்து ஒரு முடிவை அறிவித்திருக்கிறது. தாக்கப்பட்ட தேயிலை விவசாயிகளுக்கு பாதிப்பிற்கு ஏற்றவகையில் நஷ்டஈடு வழங்க வேண்டும்; அவர்களுடைய தேயிலைக்குக் கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும்; தேயிலை விவசாயிகள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று முடிவு சொல்லியிருக்கிறது. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறதா, அதே சமயத்திலே மனித உரிமை கமிஷன் வழங்கிய அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதையும் இந்த அவைக்கு அரசு தெரிவிக்க வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-10*

இன்றைக்கு காவல் துறையினுடைய அத்துமீறலான நடவடிக்கைகள் என்று வருகிறபோது, படிப்பதற்கு அரசு வழங்கும் கல்வித் தொகையை காலத்தில் வழங்க வேண்டும் என்று போராடிய மாணவர்கள்மீது தடியடி நடத்தி இருக்கிறது. மூன்று மாணவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். 120-க்கு மேற்பட்ட மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். குறை சொல்பவர்களைத் தாக்குகின்ற நிலையை காவல் துறை தொடர்ந்து எடுத்து வருகிறது.

[2001 ஜனவரி 24

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மதுரையிலே நடைபெற்ற சம்பவத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என நான் கருதுகின்றேன். சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கின்ற பணத்தை முறையாகக் கொடுக்க வேண்டும் என்று முதலிலே கோரிக்கை வைத்தார்கள். ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே, இந்த அரசாங்கம் கொடுத்துவிட்டது. மறுபடியும் ஸ்காலர்ஷிப் லோன் வேண்டுமென்று கேட்டார்கள். இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துகொண்டேயிருக்கிறது. உதாரணத்திற்கு சொல்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே ஆயிரம் பேராக இருந்த மாணவர்களுடைய எண்ணிக்கை, கடந்த ஆண்டு 2000 ஆக உயர்ந்தது. இந்த ஆண்டு 8 ஆயிரம் என்று உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே நான்கரை கோடி ரூபாய் ஸ்காலர்ஷிப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்து, பட்ஜெட்டிலே அந்தப் பணத்தை வழங்கியிருக்கிறார்கள். இப்படி அரசாங்கத்தின் சார்பிலே அவர்களுக்கு விளக்கம் சொல்லியும், இந்த ஊர்வலம் திட்டமிட்டே நடைபெற்றிருப்பதாகத்தான் என்னைப் பொறுத்தவரையில் கருதுகின்றேன். ஏனென்றால், ஊர்வலம் வருகின்ற மாணவர்கள் திடீரென்று, இரண்டு கேன்களிலே பெட்ரோல் எடுத்துக்கொண்டு, ஒரு மாணவர்மீது ஒருவர் கொட்டுவதும், ஒரு போலீஸ் அதிகாரிமீது இன்னொருவர் கொட்டுவதும் என்பது, திடீரென்று ஏற்படக்கூடிய சம்பவமல்ல. அரசியல் நோக்கத்தோடு, இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்த ஊர்வலம் திட்டமிட்டு நடத்தப்பட்டு, அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதை காவல் துறையினர் தடுக்க நினைத்தார்கள். அவர்கள் பெட்ரோல் ஊற்றி, தீக்குச்சி பற்ற வைக்கின்ற நேரத்திலே போலீஸ்காரர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவேதான் லத்தி சார்ஜ் செய்து அவர்களைக் கலைத்தார்கள். இருந்தாலும்கூட, நேற்று இரவு வரையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாணவர்களுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி அவர்களுக்கு நிலுவையிலே ஏதாவது அரசாங்கம் பணம் தர வேண்டுமென்றால், அதையும் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொல்லி, இப்போது ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஜனவரி 24]

**திரு. கே. தங்கமணி:** எப்படியிருந்தாலும், ஆதிதிராவிட மாணவர்கள் படிப்பதற்கு வசதியற்ற நிலையிலே இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு தொடர்ந்து வழங்கி வரக்கூடிய அந்த கல்விக் கடன் சலுகையை அளிக்க வேண்டுமென்று, இந்த நேரத்திலே மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி பின்னடைவு பணியிடங்களை நிரப்புவதற்காகப் போடப்பட்ட ஜி.ஓ. 44-ஐ இரத்து செய்து அதன்மூலமாக அந்த மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு நிராகரிக்கப்பட்டு வருகிறது. இது என்ன காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறது? இந்த அரசுகூட சமீபத்திலே டிசம்பருக்குள் நிரப்புவோம் என்று தெரிவித்திருந்தாலும்கூட, இருக்கக்கூடிய உத்தரவை ஏன் வாபஸ் வாங்க வேண்டும், ஏன் இரத்து செய்ய வேண்டும்? எனவே, அந்த உத்தரவு அடிப்படையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய ஒரு நிலையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சலுகை அளிப்பதிலே அரசாங்கம் பிறப்பித்த ஜி.ஓ. 44-ஐப் பற்றி வெளியிலே சில அரசியல் கட்சிகள், நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ், அஇஅதிமுக போன்ற கட்சிகள் எல்லாம் அறிக்கைகளைத் தொடர்ந்து பத்திரிகைகளிலே விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றேன். ஜி.ஓ. 44 என்பது ஏற்கெனவே, உச்ச நீதிமன்றத்திலே 9 நீதிபதிகள் கொடுத்த தீர்ப்பிலே, ஒரு நீதிபதி கொடுத்த அப்சர்வேஷனை வைத்துக்கொண்டு, அதிகாரிகள் அரசாங்கத்திடம் தவறான தகவலைச் சொல்லி இந்த உத்தரவைப் பிறப்பிக்கலாம் என்று சொல்லி, ஜி.ஓ. 44 பிறப்பிக்கப்பட்டது. பிறகுதான் ஒரு தவறான உத்தரவைப் பிறப்பித்துவிட்டோம் என்று அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தவுடன், அரிஜன மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு உண்மையிலே உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடும் ஜி.ஓ. 33 பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான கௌரவப் பிரச்சினையும் இல்லை. இந்த அவையிலே இருக்கக்கூடிய அத்தனை எதிர்க் கட்சிகளும் ஜி.ஓ. 33-ஆல் பாதிப்பு ஏற்படுகிறது, ஜி.ஓ. 44 தான் நன்மை பயக்கும் என்று சொல்வார்களேயானால்,

அது குறித்துச் சொல்ல விரும்புகிறேன். ஜி.ஓ. 33 மூலம் பின்னடைவுப் பணியிடங்கள் (Backlog) ஆக இருந்த பதவிகளில் 11,000 பேர்களில் ஓராண்டுக் காலத்தில் சுமார் 2,700 பேர்களுக்குப் பணி நியமனம் செய்திருக்கிறோம். இன்னும் 4 ஆண்டு காலத்திலே அத்தனைபேருக்கும் அந்த வாய்ப்பு இருக்கிறது. ஜி.ஓ. 44-லிலே அந்த வாய்ப்பு இல்லை. எனவே, இந்த விளக்கத்தை நான் கொடுத்ததற்குப் பிறகு அனைத்து எதிர்க் கட்சிகளும், இல்லை, இல்லை ஜி.ஓ. 44தான் அரிசன மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று எழுத்து மூலமாகத் தெரிவிப்பார்களேயானால், முதலமைச்சரோடு கலந்துபேசி இந்தச் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய கட்சித் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அரசு ஊழியர்களோடு சுமூகமாகப் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் அறிக்கை பெற்று அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**திரு. கே. தங்கமணி:** காலத்தின் நிலை கருதி வேகமாகச் சொல்கிறேன். கடந்த ஆட்சியில் போடப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார்கள். ஆனால், என்னுடைய மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் 1993 ஆம் ஆண்டு தேர்த் திருவிழாவில் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்காகப் போடப்பட்ட ஒரு வழக்கு கடந்த 8 ஆண்டுக் காலமாக நீடித்து வருகிறது. 36 அப்பாவிகளை இழுத்தடிக்கிறார்கள். எனவே, அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிவகங்கை மாவட்டம், கல்லலில் 161 பெண்கள் உட்பட 400 பேர் மீது குடி தண்ணீர் போராட்டம் என்று அறிவித்ததற்காக போராட்டம் நடத்தாதபோதே வழக்கு போடப்பட்டு 15 நாள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். வாய்தாவிற்காக அலைந்து வருகிறார்கள். அந்த வழக்கையும் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

தேவகோட்டையில் பட்டு குருக்கள் கொலை செய்யப்பட்டு 14 மாதங்கள் ஆகின்றன. இதுவரை குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை. ஏற்கெனவே மரியாதைக்குரிய உறுப்பினர் இராமசாமி அவர்களும் அதைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதற்கான நடவடிக்கையை முடுக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை ஏற்று நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். விவசாயத் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து ஆராய திரு. கோலப்பன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவும் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் சென்று வந்து 43 வகையான கோரிக்கையை அரசுக்குப் பரிந்துரையாக வைத்திருக்கிறது. அந்த அறிக்கை இன்னும் சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை. அதை இந்தக் கடைசி சட்டமன்றக் கூட்டத் தொடரிலாவது வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு அறிவித்த குறைந்தபட்ச கூலிச் சட்டம் இதுவரை முறையாக அமல்படுத்தப்படவில்லை. அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுடைய நல வாரியத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு ரூ.100 கட்டணம் வசூலிக்கபபடுகிறது. ஒரு குடும்பத்தில் 5 பேர் விவசாயத் தொழிலாளிகளாக இருந்தால் 500 ரூபாய் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அதைக் குறைத்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசு அறிவித்திருக்கக்கூடிய 12 வாரியங்கள் போக இன்றைக்கு மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு ஒரு தனி வாரியமும், கல் உடைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு தனி வாரியமும் வேண்டுமென்று அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு தனி வாரியம் தர வேண்டும். அதுபோல கொல்லர் மற்றும் தச்சர் போன்றவர்களுக்கும் தனி வாரியம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

8.5 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், தமிழக அரசு 10 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. இருந்தாலும்கூட, இன்றைக்கு 8.5 சதவீதத்திற்கு 850 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். 9 சதவீதம் என்றால் 900 ரூபாய் கொடுக்க வேண்டும். அது நிராகரிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒன்றே ஒன்று, மிக முக்கியமானது.

எல்லா ஆறுகளிலேயும் குறிப்பிட்ட காலத்திலே தண்ணீர் கிடைக்கிறது என்ற ஒரு நிலை. ஆனால், வைகை ஆற்றிலே அப்படி இல்லை.

எனவே, அந்தப் பகுதி விவசாயிகள் எல்லாம் செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி ஒவ்வோர் ஆண்டும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். வைகைக்கு உப நதியாக இருக்கக்கூடிய கிருதுமால் நதியிலே தண்ணீர் போய்ச் சேருவதில்லை. அதிலே ஒரு மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தினுடைய உரிமையைப் பறிக்காமல் தனியாக அதற்கென்று ஒரு ரீச் வைத்து கிருதுமாலை 4-வது ரீச்சாக சேர்த்துக்கொண்டு அந்தப் பகுதிக்கு தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம்.**

*பிற்பகல் 12-20*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்காக உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

> *'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
> *மானம் உடைய தரசு'.*

என்று வள்ளுவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அறநெறியில் சிறிதும் தவறாமல், குற்றம் ஏதும் இழைக்காமல், வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்கள் என்று வள்ளுவர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படி வள்ளுவர் சுட்டிக்காட்டியதற்கிணங்க இந்த ஆட்சி வீரத்துடனும், மானத்துடனும், அறநெறி பிறழாமலும், குற்றமேதும் இழைக்காமலும் இருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான், ஊழலற்ற ஆட்சி நடத்த வேண்டுமென்கிற நோக்கத்தோடு ஊழலைத் தடுத்திட நீதியரசர் இராமானுஜம் அவர்கள் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி வருகிறது. ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிக்குச் சட்டம் இயற்றிய முதல் மாநிலம், சட்டம் இயற்றியது மட்டுமல்ல, சட்டமியற்றிய இந்தியாவினுடைய முதல் மாநிலம் தமிழகம்தான் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

வீரமும் மானமும் நிறைந்ததாக இந்த ஆட்சி இருக்கிறது; முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி இருக்கிறது என்பதற்கு



அடையாளமாகத்தான் அண்மையிலேகூட நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் இராமர் கோயில் பிரச்சினையைப் பேசியபோது, பொதுப் பிரகடனத்திலே இல்லாததைப் பேசினால் இந்தக் கட்சி ஏற்றுக்கொள்ளாது, இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்று அறிவித்த பெருமைக்கும் வீரத்திற்கும் உரிய கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான் தமிழ்நாட்டிலே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு அது ஓர் அடையாளம். இந்த ஆட்சி, கொள்கைகளிலே எவ்வளவு உறுதியாக இருக்கிறது என்பதனைச் சொல்ல வேண்டுமானால், நான் பெரிதும் மதிக்கிற மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள்கூட இங்கே பேசும்போது சொன்னார்கள், 'கொள்கை ரீதியான படப்பிடிப்பாக ஆளுநர் உரை இருக்க வேண்டும். காண வேண்டிய காட்சிகளைக் காண மறுத்து முகத்தை மூடிக்கொள்கிற மாநில அரசு' என்று இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இந்த அரசு கொள்கையிலே உறுதியாக இருக்கிறது என்பதற்கு அடையாளம்தான், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்ற வாசகத்தை இன்னும் உறுதிப்படுத்தி, மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்திலே கூடுதல் அதிகாரங்களோடு 'சுயாட்சி என்று இந்த ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறோம் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் காண வேண்டிய காட்சிகளுக்குப் பயந்து முகத்தை மூடிக்கொள்பவர் அல்ல. நான் நினைவுப்படுத்திப் பார்க்கிறேன். டில்லியிலே நடைபெற்ற முதல்வர்கள் கூட்டத்தில், நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் திரு. லல்லுப்பிரசாத் யாதவ்மீது ஒரு சிறு குற்றச்சாட்டு சொன்னார்கள். நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. ஒரு சிறு குற்றச்சாட்டு சொன்னதற்காகவே அவர் கலந்துகொண்டால் நாங்கள் அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ளமாட்டோம் என்று வெளியேறியவர்கள், குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதற்குப் பின்னால், தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்குப் பல்வேறு பத்திரிகை அலுவலகங்களுக்குப் போய் காத்துக் கிடக்கிறவர்களுடைய வாசலிலேபோய் இன்றைக்கு இந்தியத் தலைவர்கள் காத்துக் கிடக்கிற காட்சியைக் காணத் தவறியிருக்கிறார்கள் என்பதனை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்ல. நம்முடைய பேரவைச் செயலகத்திலேயே நடைபெற்ற அனைத்துத் தலைவர்களுடைய கூட்டத்தில் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மதவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர் கலந்து கொண்டால் கலந்துகொள்ள

மாட்டோம் என்று வெளியேறியவர்கள் இன்றைக்கு அவரைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு ஒரு இரண்டு மணிநேரம் பேசுகிற காட்சியைக் காணத் தவறியவர்கள் அவர்கள்தானே தவிர நாமல்ல; இந்த அரசல்ல என்பதனை...

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையிலே லத்தீப் அவர்கள் கலந்துகொள்கிற கூட்டத்தில் நாங்கள் கலந்துகொள்வதில்லை என்று எப்போதும் வெளியேறியதில்லை. ஒரு தவறான தகவலை அவைக்குத் தருகிறார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நான் கம்யூனிஸ்டுகளைத்தான் சுட்டிக் காட்டினேன் கம்யூனிஸ்ட் என்று வருகிறபோது, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சீய கம்யூனிஸ்ட் என்று பிரிந்திருக்கிறீர்கள். ஆனால், கொள்கை ரீதியாகப் பார்க்கிறபோது, நீங்கள் இரண்டுபேரும் பேசுகிற பேச்சு தொழிலாளர் சார்பாக, கம்யூனிஸ்ட் கொள்கைகளைச் சார்ந்ததாகத்தான் இருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படி மற்றவர்கள் காணத் தவறுகிற காட்சிகளைக்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் காணத் தவறுவதில்லை என்பதற்காக நான் இதைச் சுட்டிக்காட்டினேனே தவிர வேறு அல்ல.

நம் அரசு எந்த அளவிற்கு நல்லிணக்கத்தோடு இருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் நீதியரசர் மோகன் அவர்களுடைய பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. மனித உரிமைகள் மீறாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான், மனித உரிமைகள் மீறாமல் இருக்க மாநில மனித உரிமைகள் ஆணையத்தைத் திறந்து சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினால்தான், அதிலே பல்வேறு வழக்குகளைத் தொடுத்து அவர்களிடத்திலே விசாரித்து அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய அரசானது மக்கள் நலனிலே எடுத்துக்கொண்டிருக்கிற அக்கறையினுடைய விளைவாக, உணவு தானியப் பொருட்கள், சமையல் பொருட்கள் போன்றவற்றின் விலைவாசியுயர்வைக் கண்காணிப்பதற்காக, தடுப்பதற்காக உயர்மட்டக் குழு அமைத்திருக்கிறது.

இங்கேகூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இந்த ஆட்சி 3 மாதங்களுக்கு



முன்பாகவே இராஜினாமா செய்ய வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1966-லே இதே அவையிலே பேசினார்கள் என்று இங்கே சுட்டிக்காட்டி அவர் பேசிவிட்டு 1967-லே ஆட்சிக்கு வந்தார்கள். எனவே, நாங்கள் அப்படிப் பேசியிருக்கிறோம் என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாளைக்குத் தேர்தல் என்றால், 2 நாட்களுக்கு முன்பாக எதிர்க்கட்சித் தொண்டர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். அப்படி ஜனநாயகத்திற்குப் புறம்பாக நடந்துகொண்டு, இந்த நாட்டிலே இந்தி எதிர்ப்பு என்ற மொழிப் பிரச்சினை வருகிறபோது டிரைவர்கள் இல்லாமல் என்ஜின்கள் ஓடிய காரணத்தால், மாணவர்கள் குருவிகளைப் போல சுட்டுக்கொல்லப்பட்ட காரணத்தினால், ஜனநாயகத்திற்குப் புறம்பாக நடந்துகொண்ட அந்த ஆட்சி 3 மாதத்திற்கு முன்பாக இராஜினாமா செய்ய வேண்டும் என்று தலைவர் பேசினார். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தேர்தலுக்கு முன்பாக எந்த அரசியல் கட்சியினுடைய தொண்டர்களையும் கைதுசெய்ததாக வரலாறு இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் தேதி இந்த அவையில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், இன்றைய முதல்வர் அவர்கள ஆற்றிய உரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் சொல்லக்கூடிய காரணங்கள் எதுவும் இல்லை. உண்மையிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் ஜனநாயகம் மலர வேண்டும் என்று சொன்னால் அல்லது தமிழ்நாடு முன்னோடியாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அமைச்சர்கள் எல்லாம் இராஜினாமா பண்ண வேண்டும், சிக்கனம் கருதி.

இரண்டாவது நேர்மையான, நியாயமான தேர்தல் நடத்துவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அவர்கள் இராஜினாமா செய்துவிட வேண்டும் என்ற விதத்தில்தான், அப்படித்தான் நம்முடைய மாண்புமிகு இன்றைய முதல்வர் பேசியிருக்கிறாரே ஒழிய, நம்முடைய வைதியலிங்கம் அவர்கள் இல்லாத கருத்துக்களை எல்லாம் அதில் கற்பனையிழையோடு சேர்த்து, எதையோ பேசுவது சரியல்ல. அவர் முழுவதுமாக அதைப் படித்துவிட்டுப் பேசவேண்டும் என்று கேட்டுக்[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224689
சென்னை-600 008

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கற்பனையாகப் பேசவில்லை. நியாயமாக, நேர்மையாகத் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதற்காக இராஜினாமா செய்யச் சொன்னதற்குக் காரணம், நேர்மையாக நடந்துகொள்ளாமல் கட்சித் தொண்டர்களைத் தேர்தலுக்கு 2 நாளைக்கு முன்பு கைது செய்து அவர்களைச் சிறைச்சாலையிலே அடைத்துவிட்டு தேர்தலை நடத்த வேண்டும் என்று எண்ணிய காரணத்தால்தான் நியாயமாக, நேர்மையாகத் தேர்தல் நடைபெற இராஜினாமா செய்யச் சொன்னோம். இந்த ஆட்சி வள்ளுவருடைய குறளுக்கேற்ப நடைபெறுகிறது என்பதற்கு அடையாளமாகச் சொல்கிறேன்.

*"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்*
*அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"*

என்று வள்ளுவர் சொல்லியதற்கேற்ப மக்கள் பிணியின்றி வாழ்வதற்காகத்தான் இந்த ஆட்சியிலே முதல்வர் கலைஞர் அவர்கள் மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்பநிலை, உரிய பாதுகாப்பு ஆகியவற்றை அளிப்பதற்காக வருமுன் காப்போம் திட்டம் கொண்டுவந்து அவர்களுடைய பிணி நோக்குகிற அந்தப் பணியிலே ஈடுபட்டு சற்றொப்ப ரூ.4.58 கோடி செலவில் ஓராண்டு காலத்தில் 84 இலட்சத்து 58 ஆயிரம் மக்கள் அதிலே பலன் பெற்றிருக்கிறார்கள். விளைச்சல் மிகுதியாக வேண்டும் என்பதற்காகத்தான் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஆறுகள் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தி விவசாயிகளுக்குப் பலன்தருகிற வகையிலே மாற்றப்பட்டிருக்கின்றன.

இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. வட்டியும், அபராத வட்டியும் அவர்களுக்குத் தள்ளுபடி செய்யப்படுகிறது. ஊக்கத் தொகையாக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு குவிண்டாலுக்கு 40 ரூபாய் அதிகமாகத் தரப்படுகிறது. தரிசு நிலங்களை மேம்படுத்த 30,000 ஹெக்டேர் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி வள்ளுவர் குறிப்பிட்ட விவசாய மிகுதிக்கு, விளைச்சல் மிகுதிக்கு இந்த அரசு, முதல்வர் கலைஞர் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதனை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பொருளாதார வளம் பெருக வேண்டும் என்று வள்ளுவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதனுடைய அடிப்படையில்தான் சாலைகள்



பலப்படுத்தப்படுகின்றன. நாட்டிலே பொருளாதார வளம் பெருக வேண்டுமானால் தொழிற்சாலைகள் மிகுதியாக வர வேண்டும். தொழிற்சாலைகள் வர வேண்டுமானால் அதற்குரிய முன்னேற்பாடான காரியங்களைச் செய்து தர வேண்டும் என்பதற்காகத்தான் சாலைகள் பலப்படுத்தப்படுகின்றன. பாலங்கள் அமைக்கப்படுகின்றன. மின் உற்பத்தி செய்யப்படுகிறது. குடிநீர் தட்டுப்பாடின்றி தந்து கொண்டிருக்கிறோம். தொழில் வளத்திலே தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது பொருளாதாரத்திலே முன்னணியிலே வருகிறது என்பதற்கு அடையாளம் என்பதனையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்னணியிலே மட்டும் அல்ல, எதிர்க்காலத் தலைமுறையினருக்கு ஏற்றவகையில் கணினியிலே முன்னணியிலே இருக்க வேண்டும் என்று செய்தித் தொலைத் தொடர்பாக இருந்தாலும், உயிரியல் தொழில்நுட்பமாக இருந்தாலும் இவற்றை இன்றைக்கு உலக அரங்கில் திரும்பிப் பார்க்கிற அளவுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவதிலே பெருமையடைகின்றேன்.

வள்ளுவர் அவர்கள் நல்ல ஆட்சியிலே மக்கள் இன்ப நிலையில் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதுபோல இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த ஆட்சி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரிலே ஏழைத் தாய்மார்கள் தங்கள் வீட்டிலே இருக்கிற பெண்களுக்குத் திருமணம் செய்கிறபோது 10 ஆயிரம் ரூபாய் இலவசமாக அளிக்கிற திட்டம், இலவச வேட்டி, சேலை திட்டம், கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு நிதியுதவித் திட்டம், அது மட்டுமல்ல உணவு தானியத்திற்கு இந்த ஆண்டு 1700 கோடி ரூபாய் மானியம். கிராமங்களிலே கான்கிரீட் சாலைகள் இவை எல்லாம் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டங்கள் என்பதனை யாரும் மறந்துவிட முடியாது. அது மட்டும் அல்ல, உரிய பாதுகாப்பும் தரப்பட்டிருக்கிறது. சமூகத்திற்கு உரிய வாழ்வு, பாதுகாப்பு வேண்டும் என்கிற காரணத்தினால்தான் அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் கொண்டு வந்திருக்கிறோம். கைவினைஞர்களைப் பாதுகாப்பதற்காக உலக அளவிலே சின்னம் அளித்து, பூமாலைத் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், மகளிர் பாதுகாப்பிற்காக பங்காரு அம்மாள் நினைவு மகளிர் திட்டம் கொண்டு வந்து, 10 இலட்சம்

மக்களுக்கு மேல் பலன் பெற்றிருக்கிறார்கள் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், அதேபோல சீர்மரபினர் இவர்களுக்கு எல்லாம் பணியிடங்களிலே எவ்வளவு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்த உயர் மட்டக் குழுவிலே அதிகாரிகளை அழைத்து, கணக்கைச் சரிபார்க்கச் செய்து, உண்மையைக் கண்டுபிடித்து அப்படி கண்டுபிடித்த விவரங்கள் சரியா, தவறா என்று தெரிந்துகொள்வதற்காக வெள்ளை அறிக்கை வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கோரிக்கை கொடுத்தபோது, வெள்ளை அறிக்கை வைப்பது என்ன, அறிக்கையின்மீது விவாதமே செய்யுங்கள் என்று சொல்லி, மூன்று மணி நேரம் விவாதத்திற்காக அனுமதித்து, அந்த வெள்ளை அறிக்கையை சட்டமன்றத்திலே வைத்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும். அப்படிப்பட்ட முதல்வரைத்தான், அப்படிப்பட்ட இந்தச் சட்டமன்றத்திலேதான் ஜனநாயகத்திற்குப் புறம்பாக பேச்சுரிமை பறிக்கப்படுகிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். எனக்கு இன்னும்கூட வேடிக்கையாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களை உட்கார வைத்துக் கொண்டு சில பேர் பேச்சுரிமை பறிக்கப்படுகிறது என்று சொன்னார்கள்; அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். அனைவருக்கும் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் 1991-லேயிருந்து 1996 வரையிலே, எத்தனை முறை வேஷ்டியை இழந்திருப்பார். அவரை இந்த இருக்கையிலே உட்காரவைத்துக்கொண்டு, எங்களுடைய பேச்சுரிமை பறிக்கப்படுகிறது என்று சொல்கிறபோது, அது வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருக்கிறது.

இந்த ஆட்சியிலேதான் ஜனநாயகம் மட்டுமல்ல, சட்டமன்றத்தினுடைய மரபும் காக்கப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஒரு முறை சுட்டிக்காட்டியதைப் போல எதிர்க்கட்சியினரை வாய் திறந்து பேசவிட்டு, ஆளும் கட்சியினர் காதுகளைக் கூர்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னாரே, அது தமிழ்நாடு சட்டமன்றத்திலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையிலே உள்ள அரசிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது



என்ற காரணத்தினாலே, பெரும்பான்மையான ஆளுங்கட்சியினர் இரண்டு பேர் பேசினார்கள் என்றால், மற்றவர்கள் எல்லாம் 5 பேர், 6 பேர் பேசுகிற நிலைமையை உருவாக்கி இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி பின்னடைவுப் பணியிடங்களைக் கண்டுபிடித்தது மட்டுமல்ல, கண்டுபிடித்ததற்குப் பின்னாலே, மொத்த இடங்கள் 11,264-ல் ஒரே ஆண்டில் இதுவரை 2,374 பணியிடங்கள் நிறைவு செய்யப்பட்டன. அந்த வெள்ளை அறிக்கை மீதான விவாதத்திலே சொன்னார்கள். இப்போதே ஒட்டுமொத்தமாகச் செய்யுங்கள்; நீங்கள் செய்யவில்லையென்றால் யார் செய்வார்கள் என்று கேட்டபோது, நான்தான் அடுத்த முறையும் வருவேன். நானே செய்வேன் என்று முதல்வர் சொன்னாரே, அதற்கு அச்சாரமாகத்தான் இங்கே பேசியவர்கள் அத்தனைபேரும் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஏனென்றால், இது இடைக்கால நிதிநிலை அறிக்கை. இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே ஒரு அரசு தன்னுடைய திட்டங்களை அறிவிக்க முடியாது. எதிர்காலத்திலே என்ன செய்யப்போகிறோம் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்லிவிட்டால் உடனே தேர்தல் கமிஷனுக்கு எழுதுவார்கள். தேர்தல் வருகிறது என்ற காரணத்தினாலே ஒரு இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்து, அதிலே பல காரியங்களைச் செய்வதாக வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்கள் என்று சொல்லிவிடுவார்கள். அப்படிச் சொல்லாதபோதே நீங்கள் திட்டங்களை அறிவிக்கவில்லை என்று சொல்வது மட்டுமல்ல, திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டும் என்ற கோரிக்கைகளையும் வைக்கிறார்கள் என்கின்றபோது, அவர்களுக்கே நம்பிக்கை இருக்கிறது, நாம் தான் மீண்டும் வருவோம் என்பதிலே. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதிலிருந்து நாம் இதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இன்னும்கூட, குறளைச் சுட்டிக்காட்டி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் (மணியடிக்கப்பெற்றது). ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஜனநாயகத்தை ரொம்பவும் காப்பவர் என்று எங்களுக்குத் தெரியும். எனக்கு 7 இலட்சம் ஓட்டுகள், ஒரு நிமிடம் எனக்குக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐஸ் வைக்க வேண்டாம். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

[2001 ஜனவரி 24

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்"*

என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சொன்னார். உண்மைதான். பெரியவர்களின் நட்பை கைவிடுவது பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிட பத்து மடங்கு தீமை உடையது என்று சுட்டிக்காட்டி பேச்சை முடித்தார்கள். நான் முடிக்கிறபோது சொல்கிறேன்.

*"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு"*

உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களைச் செய்ய வேண்டும். தாம் நினைந்து பொருந்தாது செய்யும் செயல்களை உலகம் ஏற்காது. அரசியல் உலகம் கூட ஏற்காது என்பது மட்டுமல்ல;

*"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்"*

ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்தாலும் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விட்டுவிட்டாலும் கெடுவான் என்பதையும் வள்ளுவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதுமட்டுமல்ல,

*"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை*
*ஊக்கார் அறிவுடை யார்"*

என்றும் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். பின்னாலே இலாபம் வரப்போகிறதே என்பதை நினைத்து, இருக்கிற பொருளை இழந்துவிடக் கூடாது என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11-வது சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர்



2001 ஜனவரி 24] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

அவர்கள் 19-1-2001 அன்று ஆற்றிய உரையை வரவேற்று, வாழ்த்தி, பாராட்டி மாண்புமிகு சுப. தங்கவேலன் அவர்கள் 22-1-2001 அன்று முன்மொழிந்து தொடங்கிவைத்து, மாண்புமிகு மீ.அ. வைதியலிங்கம் அவர்கள் வழிமொழிந்து பேசிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே எனது உரையைத் தொடங்குகின்றேன்.

*பிற்பகல் 12-35*

மதவாதம் என்கிற மதம் பிடித்த யானையை மனித நேயம் என்ற சங்கிலியால் கட்டிப்போட்டு வைக்கின்ற சக்தி படைத்த மாபெரும் தலைவர்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலுக்காகக் கடந்த காலங்களிலே முழுக்க முழுக்க மதவாதிகளாக இருந்தவர்களை இன்று ஒன்று சேர்த்துக்கொண்டு மனித சங்கிலி நடத்துகின்றார்கள். இது யாரை ஏமாற்ற? மக்கள் விழிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த கால நினைவுகளை மறந்து விட மாட்டார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கலைஞர் தலைமையிலான கூட்டணியே மதச் சார்பற்ற அணி என்பதை, கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் எல்லாக் கட்சிகளும் மதச் சார்பற்றவை என்பதை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சிறுபான்மையினருக்காக அவர் செய்யும் ஒவ்வொரு செயலும், சொல்லும் அவர்களின் அரணாக, கேடயமாக அமைந்து வருகின்றது. தேசிய செயல் திட்டத்தில் சேர்க்கப்படாத எந்தச் செயல் திட்டமும், குறிப்பாகச் சிறுபான்மையினருக்கு எதிரான எதுவும் தேசிய ஜனநாயக அணிக்குப் புறம்பானது, அதனைத் தி.மு.கழக அரசு எதிர்க்கும்; கலைஞர் அவர்கள் எதிர்ப்பார்கள். ஆகவே, தேசிய ஜனநாயக அணிக்குத் தமிழ்நாட்டிலே டாக்டர் கலைஞர்தான் தலைவர் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலே இன்றையதினம் தமிழகத்திலே செய்வதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம் என்ற சொல்லுக்கு சொந்தக்காரராகக் கடந்த ஐந்தாண்டு காலமாகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்று அனைத்து சமுதாய மக்களையும் அரவணைத்து சிறப்போடு நடத்திச் செல்லுகின்ற பாங்கினை இங்கே கண்டுகொண்டிருக்கின்றோம். அந்த அடிப்படையிலே

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறுபான்மை சமுதாய மக்கள் மேல் கொண்டிருக்கின்ற பற்று, பாசத்தின் காரணமாக இன்றைய தினம் அமைதிப் பூங்காவாக இந்தத் தமிழகம் சிறப்போடு இருப்பதை இங்கே கண்டுகொண்டிருக்கின்றோம்.

சமத்துவ சமுதாயம், சகோதரத்துவ உணர்வோடு அண்ணன் தம்பிகளாக, அக்காள், தங்கைகளாக, மாமன், மச்சான்களாக உறவு முறையோடு இன்று தமிழகத்திலே வாழ்ந்து வருகின்றோம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பாமர மக்களுக்காக, இன்றையதினம் குரல் கொடுத்து தமிழகத்தை வழி நடத்திச் செல்லுகின்ற ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் இஸ்லாமிய மக்கள் தலைநிமிர்ந்து வாழ்கின்றோம் என்பதைச் சொல்வதிலே பெருமையடைகின்றோம்.

எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, சாதனைகளைப் படைத்து வருகின்ற இந்த நேரத்திலே இன்றையதினம் பட்டி தொட்டிகளிலே வாழக்கூடிய கிராமப்பகுதி மக்கள்கூட முதல்வர் கலைஞருடைய ஆட்சியைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். சாலை வசதி, சாக்கடை வசதி, தெருவிளக்கு வசதி, கிராமங்களிலே சிமெண்ட் ரோடு, கான்கிரீட் ரோடுகள், குடிதண்ணீர் வசதி, பட்டிதொட்டிகளிலே குடிக்கத் தண்ணீர் இல்லாத இடங்களிலேயெல்லாம் இன்றையதினம் தரைமட்டத் தொட்டி, மேல்நிலைத் தொட்டிகளை அமைத்துக் கொடுத்து ஆங்காங்கு உள்ள கிராமப் பகுதியினுடைய மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே பொறுப்பேற்றிருக்கின்ற உள்ளாட்சித் துறையினுடைய முயற்சியின் காரணமாக, குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கின்றது. இன்றையதினம் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழகம் தொழிற்துறையிலே இன்றையதினம் முன்னேற்றம் கண்டு, முதலிடம் பெற்றுள்ளதை இங்கே எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதுபோன்று வேலைவாய்ப்புகள். படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. திட்டங்களை அறிவித்து இன்றையதினம் பள்ளிக் கூடங்கள் கட்டுவது மட்டுமல்லாமல், கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றது. சிறுபான்மை சமுதாய மக்களுக்காக முதல்வரவர்களது நல்லாட்சியிலே



சிறுபான்மை நல ஆணையம் அமைக்கப்பட்டு, அந்த ஆணையத்தினுடைய தலைவராக மரியாதைக்குரிய நம்முடைய எஸ்றா சற்குணம் அவர்களையும், சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த சேலம் அமானுல்லாகான் அவர்களையும் மற்றும் 3 உறுப்பினர்களையும் அங்கே நியமனம் செய்து அந்த ஆணையம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மத்திய, மாநில அரசினுடைய உறவு சுமூகமாக இருக்கின்ற காரணத்தினால், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே அங்கம் பெற்றிருக்கின்ற காரணத்தினால் இன்றையதினம் மத்தியிலே பி.ஜே.பி. ஆட்சியில் அமர்ந்திருந்தாலும், சிறுபான்மை மக்களுக்கு அநீதிகளும் அக்கிரமங்களும், இழைக்கின்ற ஒரு சூழ்நிலை தமிழகத்திலே உருவாகாது இருக்கின்ற வகையிலே முதல்வர் கலைஞர் மூலமாக இஸ்லாமிய மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றிரண்டை மேற்கோள் காட்ட வேண்டுமென்று சொன்னால், புனித ஹஜ் பயணிகள், ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டுமென்று சொல்வோமேயானால், கடந்த காலத்திலே 2,000 பேருக்கு மேல் அனுப்பப்படாமல் இருந்தது. இப்போது கலைஞருடைய நல்லாட்சியிலேதான் விண்ணப்பித்த இஸ்லாமிய மக்கள் அத்தனைபேர்களும், ஏன் கடந்த இரண்டாண்டு காலமாக 3,100-க்கும் மேற்பட்டவர்கள் முதல்வரவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு — இந்த ஆண்டுகூட 3,150 பேர்களை — அனுப்பி வைக்கக்கூடிய வாய்ப்பை மத்திய சர்க்கார் வழங்கியிருக்கின்றது. இது ஒன்றே, பாரதீய ஜனதாவினுடைய கூட்டாட்சியிலே முதல்வர் கலைஞர் அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்திற்குப் பெற்றுத் தந்த நன்மையாகும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-40

அதேபோன்று குர்லா என்ற தேர்வுக் குழுக்கள் இருந்தன. அந்தக் குழுக்களையெல்லாம் நீக்கிவிட்டு, அரசுக்கு விண்ணப்பித்த அத்தனை பேரும் ஹஜ் செல்லக்கூடிய வாய்ப்பை தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்வதில் பெருமைப்படுகிறேன். அதேபோன்று தமிழகத்திலே வாழக்கூடிய இஸ்லாமிய மக்களுக்காகச் செயல்படும் வக்ஃப் வாரியக் கட்டடம் சாந்தோம் நெடுஞ்சாலையில் சிறிய கட்டடத்தில் இயங்குகிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தோம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியால் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒரு இடத்தை வழங்கியிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நாங்கள் எண்ணிப்

பார்க்கிறோம். அதேபோன்று, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்காக மணி மண்டபம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அதையும் முதல்வர் அவர்கள் அன்போடு ஏற்றுக்கொண்டு, காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபம் உருவாக்கப்படுகிறது என்ற நிலையை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் மூலமாக நமக்கு அறிவித்திருக்கின்றார்கள். அதுவும் விரைவில் திறக்கப்படும் என்று எண்ணி நாங்கள் ஆவலோடு காத்து இருக்கிறோம்.

ஆலய உலமாக்களுக்கு 500 ரூபாய் பென்ஷன் வழங்கப்பட்டுக் கொண்டிருந்ததைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம். இன்னும் 1,800 பேர் விண்ணப்பித்துக் காத்திருக்கிறார்கள். அதையும் கருணை உள்ளத்தோடு முதல்வரவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சாதனைகளையும் திட்டங்களையும் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள். 29 திட்டங்களை அவர்கள் வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்கள். அதில் 26-வது திட்டத்திலே குறிப்பிட்டிருக்கிற ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு அக்கறை செலுத்தி வருகிறது இட ஒதுக்கீடு பற்றி வெள்ளை அறிக்கை ஒன்றைப் பேரவையில் அளித்ததோடு மட்டுமின்றி, நிரப்பப்படாத அனைத்துப் பின்னடைவுப் (பேக்லாக்) பணிகளையும் ஐந்தாண்டுகளுக்குள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அறிவிப்பையும் செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகளிலும் ஷரியத் மாநாட்டிலும் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக அவர்கள் சொல்கிறபோது தேர்தல் நேரத்தில் இட ஒதுக்கீடு உங்களுக்குக் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சிறுபான்மை சமுதாயத்தின்மீது அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கிற, பாதுகாப்பாக இருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலேதான் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். நீங்கள்தான் இந்தச் சமுதாயத்திற்கு உற்ற துணைவனாக இருந்து பாதுகாத்து வந்திருக்கிறீர்கள். கடந்த கால ஆட்சியில் இருந்தவர்கள் இதுவரை இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த



நன்மைகளைப் பட்டியலிட்டுக்காட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒவ்வொரு செயலையும் இந்தச் சமுதாயத்திற்காக நீங்கள்தான் செய்திருக்கிறீர்கள். மிலாது நபி விழா விடுமுறையாகட்டும், சமுதாயத்திற்குச் செய்யப்பட வேண்டிய நல்ல திட்டங்களாகட்டும், நீங்கள் தான் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, உங்களிடத்திலேதான் இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் பணிவன்போடு கேட்டுக்கொண்டிருக்கிறோம். நீங்கள் செய்து கொடுக்கக்கூடியவர்கள். அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும் என்று சொல்வார்களே, அந்த அடிப்படையிலே உரிமையோடு உங்களிடத்திலே கேட்கிறோம். உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற அந்த அடிப்படையிலே அந்த இட ஒதுக்கீட்டை இந்தத் தேர்தலுக்கு முன்பாக எங்களுக்கு அளிக்க, நடைபெறுகின்ற இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலாவது ஓரளவுக்கு அளிப்பீர்கள் என்று நாங்கள் ஆவலோடு காத்திருக்கிறோம். ஆகவே அதைச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு நல்ல திட்டங்களை நீங்கள் அறிவிப்பு செய்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மினி பஸ் திட்டத்தை நீங்கள் செயல்படுத்தியிருக்கிறீர்கள். கிராம மக்கள் எல்லாம் அதை வரவேற்றுப் பாராட்டுகிறார்கள். நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும் பஸ்ஸையே பார்க்காத பல பட்டிதொட்டி கிராமங்களில் உள்ள மக்கள், மினி பஸ் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டுகிறார்கள். அவர்கள் தற்போது நல்ல முறையில் பயன் பெற்று வருகிறார்கள். இது ஒரு நல்ல திட்டம் என்று வரவேற்றுப் பாராட்டுகிறோம். ஆனால் மினி பஸ் உரிமையாளர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இப்போது 20 கிலோ மீட்டர் தூரம் வரைதான் மினி பஸ்கள் இயங்கலாம் என்று நீங்கள் அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். கிராமங்களில் ஓடுவதால் இந்த பஸ் நஷ்டத்தில் இயங்குவதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் எல்லாம் 30 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்க அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அருள் கூர்ந்து நீங்கள் அந்த அளவிலே இவர்களுக்கும் கூடுதல் தூரம் இயக்க அனுமதி கொடுப்பதோடு, கட்டணத்தை உயர்த்திக்கொள்வதற்கும் அனுமதி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் லோயர் பவானி திட்டத்தின்கீழ் பாசன அனுமதி வழங்கப்பட்டுள்ள 23,000 ஏக்கர் நிலப்பரப்போடு, தாராபுரம்

பெட்டில் இருக்கக்கூடிய மேலும் 15,000 ஏக்கர் நிலப்பரப்பையும் அதிலே சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அதில் க. பரமத்தி தென்னிலை மேல்பாகம், தென்பாகம், முஞ்சனூர், அஞ்சூர் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள கிராமங்கள் கடைமடைப் பகுதிகளாக இருக்கின்றன. அங்கேயே மேலும் கடைமடைப் பகுதிகளாக இருக்கும் குள்ளம்பாளையம், எல்லங்காடு, இராமச்சந்திரபுரம் போன்ற பகுதிகளுக்கும் அந்த வாய்க்கால் நீட்டிக்கப்பட வேண்டும் என்று அங்கே கேட்டிருக்கிறார்கள். ஒரத்துப்பாளையம் அணைத் தண்ணீர் பாசன வாய்க்காலில் கலப்பதைத் தடுத்து, ஒரு 'சைபன் குகை' வழிப்பாதை கட்ட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். டெண்டர் வரை வந்த பின்னர் அந்தப் பணி தொடங்கப்படாமல் உள்ளது. அதனை, விவசாயிகள் நலன் கருதி, உடன் தொடங்கிடக் கேட்டுக்கொள்வதோடு, 10 சதம் பிழி திறன் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளார்கள். கரூர் மாவட்டத்தில், எனது தொகுதியில் இருக்கின்ற தனியார் ஆலைகள் மூலமாக 8.9 சதவீதத்திலிருந்து 10.4 சதவீதம் வரை பிழி திறன் கொண்ட கரும்புக்கு 750 ரூபாய் மட்டுமே கொடுத்து வருகின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள தனியார் கரும்பு ஆலை முதலாளிகளை அழைத்துப் பேசி, உடனடியாக இதற்குத் தீர்வுகாண வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியில் உள்ள சில குறைகளை மட்டும் சொல்லி, அவற்றை நிறைவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) எனக்கு வழங்கப்பட்ட, சட்டமன்ற உறுப்பினருக்கு.....

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. இன்னும் 8 பேர் பேச வேண்டும். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான



விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இடைநிலை ஆசிரியர்கள் பணியிடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்பட உள்ள பணியிடங்களுக்கு ஏற்பளிக்க வேண்டுமென்று கோரி தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர்கள் போராடி வருகின்றார்கள். அதுகுறித்து நேற்று தாம்பரத்திலிருந்து நடைபயணமாக அவர்கள் கோட்டை நோக்கி அமைதியாக வந்து போராடும்போது காவல் துறையினர் அவர்களைச் சிறைப்பிடித்து, சைதாப்பேட்டையில் உள்ள ஒரு கல்யாண மண்டபத்தில் சிறை வைத்திருக்கிறார்கள். அவர்கள் படித்து முடித்து கிட்டத்தட்ட 50, 52 வயது ஆகியும் வேலை கிடைக்காத நிலையிலே, தமிழகத்திலே சுமார் 1,80,000 பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இந்த அரங்கிலே கூறும்போது, வழக்காடு மன்றத்திலே இருக்கின்ற வழக்கிற்கு நல்ல முறையிலே தீர்ப்பு வரும்போது நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வாக்குறுதியையும் அளித்திருக்கிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி, வழக்காடு மன்றமும் அவர்களுக்கு ஒரு சாதகமான நிலையைச் சொல்லியிருக்கின்ற காரணத்தினாலே பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடங்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, இப்போது சிறைப்பட்டிருக்கும் அந்தப் பட்டதாரி ஆசிரியர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே அவர்களுக்குச் சரியான வசதி அளிக்கப்படாமல், காலைப் பசியாற உணவு வழங்கப்படாமல் இருக்கின்றார்கள். ஆகவே, இது குறித்து அரசு கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகளுக்கு maintenance grant வழங்குவதிலே தனியார் பள்ளிகளின் குரல்வளையை நெரிக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து 4% grant வழங்கிக் கொண்டிருந்த அரசு இப்போது 2% ஆக அதைக் குறைத்திருக்கிறது. ஆகவே, அப்படி குறைப்பதைவிட்டு, தயவுசெய்து எப்போதும்போல 4% என்றே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்று தனியார் பள்ளிக்கூடங்கள் அதிக அளவிலே தமிழ்நாட்டில் கல்வியைப் பெருக்கி, படித்தவர்கள் எண்ணிக்கையை அதிகமாக்கி கொண்டு வரக்கூடிய சூழ்நிலையிலே maintenance grant-ஐ 4% லிருந்து 2% ஆகக் குறைத்தது

முறையல்ல. ஆகவே, அதை மீண்டும் 4% ஆகவே வழங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறையிலே, unapproved layouts—நிலத்திற்கு 22-9-2000-க்குள் பத்திரம் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்தான் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்; மற்றவர்களுக்கெல்லாம் N.O.C வழங்க வேண்டுமென்ற ஒரு விதியை நீதிமன்றம் சொன்னதால் வைத்திருக்கின்றார்கள். ஒருவன் 100 unapproved layout-ஐப் போட்டு விற்கின்றான் என்றால், 50 பேர்கள் உடனடியாகப் பத்திரம் பதிவு செய்திருப்பார்கள். பணம் இல்லாதவர்கள் ஏழைகள் அட்வான்ஸ் கொடுத்து, அக்ரிமென்ட் போட்டிருப்பார்கள். அப்படிச் செய்வதால் பாதிப் பேர்களுக்கு அங்கீகாரமும், பாதிப் பேர்களுக்கு அங்கீகாரம் இல்லாத சூழ்நிலை என்று ஒரு குழப்பமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது குறித்து அமைச்சரவர்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள்; நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. ஆகவே, இது குறித்து நான் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசு ஊழியர்கள், ஏழைகள், பணம் இல்லாதவர்கள் என்று சொன்னால், பெரும்பாலும் அட்வான்ஸ் கட்டி, பாதிப் பணத்தைச் செலுத்துகிறார்கள். அப்போது 22-9-2000-க்கு முன்பு அட்வான்ஸ் கொடுத்தவர்களுடைய நிலை என்ன, அவர்களுக்கு இந்த அரசு என்ன பாதுகாப்பு வழங்குகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். மிகவும் கஷ்டமான நிலையிலே, தமிழ்நாடு முழுவதும் இதுபோன்ற unapproved layouts இருக்கின்ற காரணத்தினாலே, இதிலே ஒரு நல்ல நிலையைக் கொண்டுவர வேண்டும். அதுமட்டுமல்ல, துறைக்கு வருகின்ற வருமானத்திலே 60%-க்கும் மேற்பட்ட பகுதி குடியிருப்பு நிலங்களைப் பதிவு செய்வதால் வருகிறது. மற்றபடி விவசாய நிலங்களைப் பதிவு செய்கிறபோது மிகக் குறைந்த கட்டணத்திலே பதிவு செய்துவிட்டுப் போய் விடுகிறார்கள். ஆகவே, மக்களுக்குச் சொந்தமாக குடியிருக்க ஓர் இடம் வேண்டும். எனவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக இந்த அவைக்கு தக்க பதிலைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதுபோல, கூட்டுறவுத் துறை மூலமாக அரசு ஊழியர்கள் கடன் பெறுகிறபோது, அந்த நிலத்தை ஜனாதிபதியின் பெயருக்குப் பதிவு செய்ய வேண்டும்....



பிற்பகல் 12-50

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள், கூறியதுபோல் அங்கீகரிக்கப்படாத மனை விற்பனையைத் தடை செய்வதற்காகச் சட்டம் கொண்டுவரப்பட்டு, 22-9-2000 அன்று அந்தச் சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது. அது சம்பந்தமாக, பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்திலே தீர்ப்பும் வந்திருக்கிறது.

அந்தத் தீர்ப்பிலே 22-9-2000-க்கு முன்னாலே இது பொருந்தாது. அதாவது Retrospective effect கொடுக்காமல், Prospective effect கொடுத்திருக்கிறார்கள். இதற்குப் பின்னாடி இது பொருந்தும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே ஒருவர் இடத்தை விற்று விட்டார் என்றால், second sales-க்கு மறுப்பின்மைச் சான்றிதழ் வாங்க வேண்டியதில்லை. N.O.C. உள்ளாட்சித் துறையிலிருந்து வாங்க வேண்டியதில்லை என்று சொல்லி தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். தீர்ப்பிலே கொடுத்திருப்பதன் அடிப்படையில் பல நெறிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே 22-9-2000-க்கு முன்னாடி ஒரு சொத்தை வாங்குவதற்காக sale agreement போட்டிருந்தால், அதற்கு என்ன நிலை என்பதைக் கேட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜி. நிஜாமுதீன்: அதுகுறித்து, இந்தத் தேதி வரைக்கும் அக்ரிமெண்ட் போட்டவர்களுடைய நிலையை நாம் எடுத்துக்கொள்ளமுடியும் என்கிற ஓர் உத்தரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அரசு ஊழியர்கள் கூட்டுறவுத் துறை மூலம் லோன் வாங்கும்போது, அந்த நிலங்களை மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் பேரிலே மார்ட்கேஜ் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது அதற்குப் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்று ஜி.ஓ. இருக்கிறது. அதைச் சில மாவட்டப் பதிவாளர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள், சில மாவட்டப் பதிவாளர்கள் மறுத்து விடுகிறார்கள். குறிப்பாக நாகப்பட்டினத்திலே மறுக்கிறார்கள். பக்கத்திலே திருவாரூரிலே ஏற்றுக்கொள்ளகிறார்கள். இதற்குக் காரணம் கேட்டால் ஜி.ஓ.-வாக வரவில்லை; லெட்டராக வந்திருக்கிறது. நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி, இப்படி ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வியூவில் கருத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அரசு ஊழியர்கள் 4 சதவிகிதத்தைக்

கட்ட வேண்டிய கட்டாய நிலைக்கு வந்திருக்கிறார்கள். லோன் வாங்கும்போது 4% கட்ட வேண்டிய தேவையில்லை என்று சொல்லும்போது, பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆகவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு பொதுவான கருத்தை, அரசாணையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வேளாங்கன்னி முதல் வேட்டைக்காரனிருப்பு வரையுள்ள கிராமங்கள் நாகை தாலுகாவிலிருந்து பிரிக்கப்பட்டு, கீழையூர் தாலுகாவோடு சேர்க்கப்பட்டுள்ளன. இதுகுறித்து நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இரண்டு பஸ் மாறிச் செல்ல வேண்டியதாக இருக்கிறது: பக்கத்திலே நாகப்பட்டினம் இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தக் கிராமத்தைப் பிரித்து நாகை தாலுகாவோடு சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாகூர் மருத்துவமனையிலே தொடர்ந்து, 2, 3 ஆண்டுகளாக மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறது. ஒரு மருத்துவர்கூட இல்லை. Acting-ஆக 15 நாளைக்கு ஒரு முறை டாக்டரைப் போடுகிறார்கள். அவரும் போய் விடுகிறார். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு, உடனடியாக நாகூர் மருத்துவமனைக்கு மருத்துவரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவமனையில், மருத்துவர் பணியிடங்கள் கிட்டத்தட்ட 13 இடங்களுக்கு மேலே காலியாக இருக்கின்றன. இந்த நிலையிலே 'வருமுன் காப்போம்' திட்டத்திற்காக டாக்டர்கள் சென்று விடுகிறார்கள். இந்த நிலையால் மருத்துவமனை மிகவும் காலியாக இருக்கிறது. ஒரு நாளைக்கு 2,700 நோயாளிகளுக்கு மேலே வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேட்டைகாரனிருப்புப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் வருமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1998 ஆம் ஆண்டு உறுதி அளித்திருந்தார்கள். அதற்கான இடம் எல்லாம்கூட செலக்ட் செய்தாகிவிட்டது. ஆனால் ஏனோ தெரியவில்லை, அதிகாரிகளுடைய அலட்சியப்போக்கின் காரணமாக அந்தப் பணி நின்றிருக்கிறது. ஆகவே உடனடியாக இதை முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எல்லாப் பகுதிகளையும் வந்து பார்த்தார்கள். 10 கோடி ரூபாய் திட்டத்திலே குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்தத் தண்ணீர் நாகப்பட்டினத்திற்குப் போதுமானதாக இல்லை. மேலும் ஒரு சில போர்களிலே தண்ணீர் உப்பாக மாறி விட்டது. அது அமைச்சருக்கே தெரியும்; அதை நினைவூட்ட விரும்புகிறேன். தயவுசெய்து நீங்கள் தொடங்கி வைத்துள்ள கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்திலே, நாகையையும் சேர்க்க வேண்டுமென்று நான் உங்களுக்கு வேண்டுகோள் வைக்கிறேன். அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகையிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கடற்கரை ஓரமாக இருப்பதால் எங்கு கொண்டுபோய் நீரைச் சேர்ப்பது என்று தெரியவில்லை. வாய்க்கால், வடிகால் இல்லாத நிலையாக இருப்பதால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஆகவே, பாதாளச் சாக்கடைத் திட்டம் அவசியமாக இருக்கிறது. நாகை மக்கள் ரொம்ப ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நிச்சயமாக இதைசெய்து தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு. ஆகவே, உடனடியாக நாகையிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுததித் தர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாகூர்-நாகை பை-பாஸ் ரோடு திட்டம் அறிவிக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இடம்கூட தேர்வு செய்யப்படாத நிலையிலே அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் கொண்டு, அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செருதூர் என்றவொரு கிராமம் வேளாங்கன்னி பக்கத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 5 வருட ஆட்சியில் 10 முறை அந்தக் கிராமம் கடல் அரிப்பால் மூழ்கிக் கொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இன்று காலையிலே பார்க்கும்போதுகூட 'என்னப்பா' செருதூர் கிராமம் சம்பந்தமாக வந்திருக்கிறாயா என்று கவனத்தோடு கேட்டார்; ரொம்ப சந்தோஷம். ஆனால் ஒவ்வொரு முறையும் தற்காலிகமான தீர்வுகள்தான் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, அதற்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படுத்த, கடல் அரிப்பைத்

தடுப்பதற்கு, கருங்கல் சுவர் அமைக்க வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நான் நேரில் அவரைச் சந்தித்தபோது ஆவன செய்வதாகக் கூறியுள்ளார்கள். ஆகவே இதை உடனடியாகச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்படுகிற Maintenance grant-ஐ தயவுசெய்து குறைக்காதீர்கள். ஒழுங்கான, நேர்மையான கல்வியைத் தருவது தனியார் பள்ளிகள்தான். அதை 4% லிருந்து 2% ஆக குறைப்பது முறையல்ல. அதை உங்கள் ஆட்சியில் செய்ததாக இருக்கக் கூடாது.

*பிற்பகல் 12-55*

*மாண்புமிகு பேராசிரியர் க. *அன்பழகன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறுகிற தனியார் பள்ளிகளுக்கு ஏற்கெனவே அவர்களுக்கு வழங்கப்படுகிற நிதியின் அளவு கருதிப் பார்த்து அளிக்கப்பட்டதால் அந்த நிதி இரண்டு விழுக்காடு Maintenance Grant ஆக வழங்கப்பட்டது. இப்பொழுது ஆசிரியர்கள் சம்பளங்கள் 2½ மடங்கு, 3 மடங்கு உயர்ந்து போன காரணத்தால், இப்போதும் அதே விழுக்காடு என்பது ஏற்கெனவே மூவாயிரம் ரூபாய் வழங்கியதற்கு மாறாக 10 ஆயிரம் வழங்க வேண்டிய அளவுக்கு உயர்ந்து போகிறது. ஆகவே, அந்த விழுக்காட்டினைக் குறைத்து வழங்கினாலும் Maintenance-க்கு என்று கொடுக்கிற தொகை, போதுமானதாகும் என்று கல்வித் துறையைச் சார்ந்த இயக்குநரும், கல்வித் துறைச் செயலாளரும் திரும்பத் திரும்ப வாதித்து முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அதை உயர்த்துவதன் மூலமாகப் பல கோடி ரூபாய் அரசுக்கு மிகைச் செலவு என்ற முறையில் அதிகமாகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளம் உயர்த்திக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. அதை நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. ஆனால் சம்பளம் உயர்ந்திருப்பதற்காக maintenance grant-ஐ குறைப்பது நியாயம் இல்லை. விலைவாசியும் ஏறியிருக்கிறது. Maintenance என்பது சுண்ணாம்பு பூசுவது, பெருக்குவோரை வைத்துக் கொள்வது போன்ற பல்வேறு பணிகளுக்காக ஆளை வைக்கும்போது அதற்குரிய விலைவாசி ஏறியிருக்கிறது. ஆகவே அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து குறைந்தது..



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மறுபடியும் ஆட்சி வருகிறபோது மறுபரிசீலனை செய்து நிச்சயமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இறுதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன். இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை அமர்த்தியிருப்பது குறித்து—சில மாவட்டங்களில் இடைநிலை ஆசிரியரே இல்லை, வெளி மாவட்டங்களிலிருந்து போடுகிறார்கள். இந்தமாதிரி நிலையில் மீண்டும் அவர்களை அந்த ஊரில் பட்டதாரிகளைப் பணியமர்த்துவதும்..

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டு அந்த வழக்கு முடியாத ஒரு கட்டத்தில், அரசு தனியாக ஒரு கொள்கை முடிவு எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது. அந்த வழக்கு விரைவில் முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரையில், 'ஊழலற்ற, வெளிப்படையான நிருவாகம்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது, பக்கம் 2-லே 4 ஆம் பத்தியில். கொப்பரைத் தேங்காயில் பல கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆட்சியில். அதேபோல கதர்த் துறையில் 2½ கோடி ரூபாய் ஊழல். நாமெல்லாம் பார்த்திருப்போம், அரிசியை கடத்துவது என்றால், பஸ்ஸிலே கடத்துவார்கள், லாரியிலே கடத்துவார்கள்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரிசி கடத்துவதை நீங்களே பார்த்தீர்களா?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று இங்கே பேசுகிறார். இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லவேண்டுமானால், தங்களிடத்திலே ஆதாரம் இருக்கிறது என்றால், அந்தக் குற்றச்சாட்டை சபாநாயகரிடம் காட்டி,

தாங்கள் பேசலாம். நீதிமன்றத்திலே இருக்கிற வழக்குகளிலேயே அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று சொல்லி தள்ளப்பட்டிருக்கிற வழக்குகளெல்லாம் இருக்கின்றன. எனவே, இதுகுறித்துப் பேசுவதாக இருந்தால், தகுந்த ஆதாரம் இருந்தால் அந்த ஆதாரங்களை சபாநாயகரிடம் காட்டிப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆக, ஆதாரத்தை இங்கே காட்டிவிட்டுப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதே நீதிமன்றத்தில்தான் கொப்பரைத் தேங்காய் ஊழல், அரிசி கடத்திய ஊழல், கால்நடை தீவன ஊழல் 10 கோடி ரூபாய் வழக்கு..

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீதிமன்றத்திலே அந்த வழக்கு இருக்கிறது, போட்டிருக்கிறார் என்று சொல்கிறார். அப்படி நீதிமன்றத்தில் இருந்தால் இங்கே அதுபற்றிப் பேசக் கூடாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த மன்றத்தினுடைய மரபு. நீதிமன்றத்தில் இருக்கிற வழக்குப் பிரச்சினையை இங்கே பேசக்கூடாது. ஏற்கெனவே முடிவெடுத்த பிரச்சினையைப் பற்றித்தான் நீங்கள் சொல்லி குற்றம் சாட்டலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *(குறுக்கீடு)* எனக்கு 10 நிமிடங்கள்தான் தரப்பட்டிருக்கிறது.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நாங்கள் குறுக்கிட்ட நேரத்தையும் சேர்த்து வாங்கித் தருகிறோம். நாங்கள் வாங்கித் தருகிறோம். துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த அரசாங்கத்திலே இருக்கக்கூடிய சில அமைச்சர்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளெல்லாம் நாட்டு மக்களைத் திசை திருப்புவதற்கு, அவர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, தண்டனை கிடைத்ததற்குப் பிறகு, தி.மு.க. அமைச்சர்கள்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தோடு திட்டமிட்டே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் வழக்கறிஞர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு தொடுக்கப்பட்ட வழக்குகளாகும். அவையெல்லாம் நீதிமன்றத்திலே இருக்கின்றன. மீனளத் துறை அமைச்சர்மீதுகூட வழக்குப் போடப்பட்டது. அதை நேற்றையதினம் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. அதைப்போல ஆதாரம் இல்லாமல் வேண்டுமென்றே சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது என்று சொல்கிற அந்த வழக்குகள் நீதிமன்றத்திலே இருப்பதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நிரூபிக்கப்பட்டால் நாங்கள் அமைச்சர் பதவியில் இருந்து, இல்லை



அரசியலிலிருந்தே விலகிவிடுவோம். உங்களைப்போல மானம் கெட்டு இருக்கமாட்டோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

***பிற்பகல் 1-00***

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அரசியலைவிட்டு நீங்கள் விலகுவது நிச்சயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுக்கு பேரவை விதியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரவை விதி 93-ன்படி 'ஓர் உறுப்பினர் எழுத்து மூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்குத் தெரிவித்திருந்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகப் பேசவோ அல்லது தனிப்பட்ட முறையில் அவர் மீது குற்றமோ சாட்டக் கூடாது'. நீங்கள் என்னிடம் முன் அனுமதி வாங்கவில்லை. பேரவைத் தலைவரிடமும் வாங்கியிருப்பதாகத் தெரியவில்லை. எனவே, முறைப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் சொல்வது, இங்கே விவாதித்திருக்கிறோம், எல்லாவற்றையும் பேசியிருக்கிறோம். அரிசியைப் பொறுத்தவரையில் வேகனில் கடத்திய ஆட்சி இந்த ஆட்சிதான். கிட்டத்தட்ட 1400 கோடி ரூபாய் மதிப்புள்ள ரேஷன் அரிசியை தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இப்படி பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. அப்படி கடத்தப்பட்டது உண்மையானால், அதற்கான ஆதாரங்களை, ஆவணங்களைக் கொடுத்துவிட்டு நீங்கள் அதுபற்றிப் பேசுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. முறைப்படி நீங்கள் தெரிவிக்காமல் இப்படிப் பொத்தாம்பொதுவாகச் சொல்வது சரியல்ல. *(குறுக்கீடு)* நேரம் பற்றி உங்களுக்கு ஒன்றும் கவலை தேவையில்லை. நான் தருகிறேன் உங்களுக்கு நேரம்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேகனில் கடத்தியது ஆயிரம் டன். அது எப்படிச் சேகரிக்கப்பட்டது என்று கணக்குப் பார்த்து எல்லோர் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடத்தினவர்கள் 6 பேர், குண்டர் ஆக்டிலே சிறையிலே போடப்பட்டிருக்கிறார்கள். கடத்தின லாரி ஏற்கெனவே உபயோகித்த லாரியைத் தடுத்து நிறுத்தி

வைத்திருக்கிறோம். கலெக்டரேட்டில் நிறுத்தி வைத்திருக்கிறோம். நிறுத்தி வைத்த அந்த லாரியை கோர்ட் மூலமாக ஆர்டர் வாங்கி அவர்கள் எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். அத்தனை பேர் மேலேயும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. வேகனில் கடத்திய அந்த ஆயிரம் டன்னை பறிமுதல் செய்து கொண்டு வந்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் வைத்திருக்கிறோம். இது உண்மை. வேகனில் கடத்தினோம், வேகனில் கடத்தினோம் என்று சொன்னால், இதைக் கண்டுபிடித்திருக்கிறோம். நாங்கள் ஒன்றும் அதற்கு ஆதரவாக இல்லை. கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அடுத்து, கொப்பரைத் தேங்காய் ஊழல் என்று சொல்கிறார். கொப்பரைத் தேங்காய், மத்திய அரசு NAFED நிறுவனம் ரூ.32.50 காசுக்கு ஒரு கிலோ வாங்குகிறோம் என்று சொல்கிறார்கள், ரூ.32.50 காசுக்கு வாங்குகிறோம் என்று சொல்லிய பிறகு இடையில் இருக்கிறவர்கள் 30 ரூபாய், 27 ரூபாய்க்கு வாங்கி 32 ரூபாய்க்கு விற்கிறார்கள். விவசாயிகளுக்கு சரியானபடி பணம் கிடைக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு வந்தது. அமைச்சரே அதற்கு உதவியாக இருக்கிறார், எல்லோரும் உதவியாக இருக்கிறார்கள், அமைச்சர் அடிக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக முதலமைச்சர் 5 அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்தார். ஆய்வு செய்து முடித்த பிறகு, இதைவிட கேரளாவில் கொள்முதல் செய்வது நல்லதாக இருக்கிறதா, அந்த முறையில் கொள்முதல் செய்யலாமா என்று போய் பார்த்து வரச் சொன்னார். கேரளாவில் போய் பார்த்துவிட்டு வந்து அங்கேயிருக்கிறதைவிட இங்கே நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு, இனிமேல் விவசாயிகளுக்கு நேரடியாக அவர்கள் பேரில்தான் பணம்கொடுக்க வேண்டும். அவர்கள் விவசாயம் பண்ணியிருக்கிறார்கள் என்பதற்கு, தென்னந்தோப்பு இருக்கிறது என்பதற்கு அத்தாட்சி விவசாயத் துறை அதிகாரிகள் கொடுக்க வேண்டும். அதை V.A.O. ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இவ்வளவும் சொல்லி, பத்திரிகையில் எல்லாம் வந்து, விளம்பரம் கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே பொய் சர்ட்டிபிகேட் கொடுத்த V.A.O பேரில், மற்றவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 14 சங்கங்கள் பேரில் 81 enquiry நடந்து கொண்டிருக்கிறது. கோர்ட்டில் போட்டார்கள். இதில் அமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார், அதனால் அமைச்சர் சொல்ல வேண்டுமென்று சொல்லி High Court-ல் வழக்குத் தொடுத்தார்கள். எடுத்த இந்த நடவடிக்கை, முதலமைச்சர் எடுத்த நடவடிக்கை எல்லாவற்றையும் கோர்ட்டில் சொன்ன பிறகு கோர்ட்



அந்த case-ஐ தள்ளுபடி செய்துவிட்ட அடிப்படையில், ஆதாரம் இருந்தால் நீங்கள் விஜிலென்ஸ் மூலமாக enquiry பண்ணுங்கள் என்று கோர்ட் தீர்ப்பு சொல்லியது. சும்மா எடுத்தவுடனே கொப்பரைத் தேங்காய் ஊழல், அரிசி கடத்தல் ஊழல் என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொன்னமாதிரி, நம்மை ஊழல், ஊழல் என்று சொல்கிறார்களே அவர்கள் பெயரிலும் — சொல்ல வேண்டும் என்று சொல்லக் கூடாது. இதிலே தவறுக்கு ஏற்கெனவே ஆதாரம் இருந்து சொன்னால் நீங்கள் சொல்வதற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். அதைவிட இந்த தமிழ்நாட்டினுடைய பொது விநியோகத் திட்டத்தினுடைய அரிசி எப்படி கடத்தப்பட்டுக் கொண்டிருந்தது, அது எப்படி இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் விலாவாரியாக - என்னிடம் ஆதாரம் இருக்கிறது - நானும் பேசுவேன். அதனால் ஏதோ ஒரு வாய்ப்பு கிடைத்தால் உடனே அரிசி கடத்தினோம், அதைக் கடத்தினோம், இதைக் கடத்தினோம் என்று சொல்லக் கூடாது, ஆதாரம் சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்தானே பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். சுந்தரம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவார், அவர் உங்கள் கட்சித் தலைவர். அவருக்கு எல்லாம் தெரியும். அவர் பேசுவார். சுந்தரம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** ஒரு விளக்கம். அவர் அனுமதித்து விட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் அனுமதிக்கக் கூடாது, நான் அனுமதிக்க வேண்டும். சுந்தரம் நீங்கள் பேசுங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இந்த அவையினுடைய உறுப்பினர்கள் இடையிலே எழும் விவாதத்தில் விளக்கம் சொல்ல அனுமதி கிடையாது. எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது. அவர்மீது சொல்லப்பட்ட காரணத்தினால் அமைச்சர் விளக்கம் சொல்கிறார். அமைச்சர் விளக்கம் சொல்லலாமே தவிர, உறுப்பினர் இடையிட்டுச் சொல்ல உரிமை கிடையாது.

**திரு. இரா. விசுவநாதன்:** மறுப்பைச் சொல்லவே கூடாதா?

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உட்காருங்கள். திரு. சுந்தரத்தினுடைய நேரம் வீணாகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். உங்களை உட்காரச் சொல்லி உத்திரவிட்டுவிட்டேன். திரு. சுந்தரம், பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** நாங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களை அனுமதிக்கிறோம்; நீங்கள் எங்களை அனுமதிக்கமாட்டேன் என்கிறீர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி முறைகேடாக நடந்துகொள்ளக் கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரத்தைப்பற்றி அல்ல; ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு பேசுங்கள். நேரத்தைப் பற்றி நான் பார்த்துக்கொள்கிறேன். உங்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தருகிறேன். ஆனால், ஆதாரம் இருந்தால்தான் பேச வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக கவர்னர் உரையிலே சட்டம் ஒழுங்கு பற்றி பேசி இருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு இருக்கின்றது; சிறப்பாக போலீஸ் துறை நவீனப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்றெல்லாம் கவர்னர் உரையிலே பேசி இருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன். தூங்குபவர்களை எழுப்பி விடலாம்; ஆனால், தூங்குபவர்கள் போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது. இதுதான் உண்மை. வீரப்பனைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் உங்களுக்கு இருந்திருந்தால், கண்டிப்பாக வீரப்பனை நீங்கள் பிடித்து இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான அடிப்படையிலே விவாதத்தைத் தொடங்கிப் பேச முற்படக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுக்கு எண்ணம் இருந்தால் பிடித்து இருக்கலாம்



என்று திரு. சுந்தரம் சொன்னார்கள். எங்களுக்கு எண்ணம் இருந்தால் பிடித்து இருக்கலாம். அப்படியென்றால், உங்களுக்கு எண்ணம் இல்லாமல்தான் பிடிக்காமல் இருந்தீர்களா? (குறுக்கீடு) உங்களுக்குப் பிடிக்கும் எண்ணம் இல்லை என்று தானே அர்த்தம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எங்களுக்கு எண்ணம் இருந்ததனாலேதான் தேடுகின்ற வேட்டையிலே ஆரம்பித்து, அவரைப் பிடிப்பதற்கு....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள்; அமைச்சர் எழுந்துவிட்டால் நீங்கள் உட்கார வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சி முடிகின்ற வரையில் அந்தப் பணியை ஆற்றினார்கள்; தொடர்ந்து தேடிக்கொண்டே இருந்தார்கள். எப்படி எல்லாம் தேடப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. ஏனென்றால், சில நிலைமைகளில், சில சிக்கலான நிலைமைகளில் தொடர்ந்து அதே பணியில் ஈடுபட வேண்டிய அவசியம் வருகிறது. அதேபோன்று இன்றைக்கு அந்த நிலைமை எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால், ஓர் உள்நோக்கம் கற்பிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு எந்த நியாமும் கிடையாது. நாங்களும், நீங்கள் தேடியதைவிட வேகமாகத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலே உங்களுக்கு எண்ணம் இல்லை என்று சொல்கிறேன். இப்போது உங்களுக்கு நான் சொல்கிறேன்; நவம்பர் 11 ஆம் தேதியே,...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அது வேறு விளக்கம். இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் எனக்குத் தோன்றுகிற ஒரு விளக்கத்தைச் சொல்கிறேன். முதலமைச்சர் என்ன சொல்லுவார் என்று தெரியாது. கர்நாடக நடிகர், அந்த மாநிலத்தினுடைய பாராட்டுக்குரிய நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்டு வருவதுதான், அந்தக் காலகட்டத்திலே ஒரே நோக்கமாக இருந்தது. அதுபற்றி எவ்வளவு பெரிய கவலையாக இருந்தது என்பதை எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அறிவார்கள். கர்நாடகத்திலே உள்ள தமிழர்கள் வீணாக ஒரு பழிக்கு ஆளாகிவிடுவார்கள், துன்பத்திற்கு ஆளாகிவிடுவார்கள் என்று நாம் கவலைப்பட்டோம். அந்தச் சூழ்நிலையிலே அந்த முயற்சிக்கு

எதிராக எவ்வளவு இடையூறான அறிக்கைகள் விடப்பட்டன? அந்த நேரத்தில் ராஜ்குமாரை மீட்டு வருவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியிலே தமிழக அரசு மட்டுமல்லாமல், கர்நாடக முதலமைச்சரும் மத்திய அரசுக்குத் தெரிவித்து, பல நடவடிக்கைகள் எடுத்து, ஏதோ ஒரு வகையில், எப்படியாவது ராஜ்குமாரை மீட்டு வர வேண்டுமென்ற ஒன்றுதான் அன்றைக்கு ஒரே குறிக்கோளாக இருந்தது. ஆகவே, அந்தச் சூழ்நிலையில், ராஜ்குமார் மீட்கப்படாமல் இருந்திருந்தால் என்ன விளைவுகள் ஏற்பட்டு இருக்கும்? மீட்கிற முயற்சி நடைபெற்றபோது ஒரு தவறான காரியம் ஏதேனும் நடைபெற்று, அதனாலே அவருடைய உயிருக்கோ, உடலுக்கோ ஒரு கேடு ஏற்பட்டு இருக்குமானால், எவ்வளவு பெரிய துயர விளைவு ஏற்பட்டிருக்கும் என்பதை இந்த அவையிலே உள்ளவர்கள் எல்லாம் எண்ணிப் பார்ப்பார்களேயானால், அந்தக் காலகட்டத்தில் அன்றைய கர்நாடக முதலமைச்சர் தமிழக முதலமைச்சரோடு கலந்து இப்படித்தான் நாம் தொடர வேண்டும் என்று தீர்மானித்தார்கள்; அதைத்தான் செய்ய முடிந்தது. அதிலே தேதி வைத்து, நேரம் வைத்து, காலம் வைத்து, ராஜ்குமாரை விடுவித்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறபோது எந்த இடத்தில் விட்டார்கள்; எந்த இடம் வரைக்கும் வந்தார்கள்—இதையெல்லாம் யாரும் verify பண்ண முடியாது. அங்கு இருக்கிறவர்கள் சொல்கிற செய்தியைத்தான் நாம் கேட்க முடியும். அவர் மீண்டு வந்தார் என்ற அந்த அளவுக்கு அந்தக் காரியத்திலே ஒரு மாபெரும் வெற்றி கிடைத்ததை மறந்துவிட்டு, பேசக் கூடாது. அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்றுதான் அரசாங்கம் யோசிக்க முடியுமே தவிர, அவர் வெளியிலே வந்த உடனே, உள்ளே இராணுவம் போகும்; உள்ளே படை போகும் என்று சொல்லிக்கொண்டு ராஜ்குமாரை மீட்டு இருக்க முடியாது. அதிலே கொஞ்சம் புத்திசாலித்தனமாக இந்த அரசு நடந்து கொண்டதை தவறான முறையிலே திசை திருப்ப வேண்டாம். எப்படித் திருப்பினாலும், அதற்கும் பதில் இருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ராஜ்குமார் உயிர்ப் பிரச்சினைபற்றி சொல்லி, அதனாலேதான் அப்போது அந்த விதத்திலே நடவடிக்கை எடுத்தோம் என்று சொல்கிறீர்கள். ராஜ்குமார் விடுவிக்கப்பட்டதற்குப் பிறகு—



பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராஜ்குமார் விடுதலைக்கு முன்னாலே உங்கள் கட்சித் தலைவர் எப்படிப்பட்ட அறிக்கை வெளியிட்டார்கள். அந்த முயற்சியைக் கெடுப்பதிலேயே திட்டமிட்டுச் செயலாற்றினார்கள். அப்படிப்பட்ட நோக்கத்தில் வெளியிட்ட அறிக்கைகள் எத்தனை வேண்டும்.?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ராஜ்குமார் உயிர்ப் பிரச்சினை என்று சொன்னீர்கள். ராஜ்குமார் விடுவிக்கப்பட்டதற்குப் பிறகு குறைந்தது 10 நாட்களுக்குப் பிறகு நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். வேண்டுமென்றே வீரப்பனை தப்புவிக்கவிட வேண்டுமென்கிற எண்ணத்தில்தான் 10 நாட்களுக்குப் பின்னால் அந்தப் படையை உள்ளே அனுப்பியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே இராஜதந்திரம் என்னும் ஒன்றிருக்கிறது. ராஜ்குமார் மீண்டு வருவதற்கு முன்னாலே நாங்கள் காவல் படையைக் கொண்டுபோய் பக்கத்திலே—இராமர் கோயில் கட்டுவதற்காக, பாபர் மஸ்ஜித் இடிப்பதற்கு நரசிம்மராவ் கொண்டுபோய் நிறுத்தி வைத்திருந்தாரே படை—அதுமாதிரி பக்கத்திலே நிறுத்தி வைக்கிற காரியத்தை நாங்கள் செய்யவில்லை. ஏன் செய்யவில்லை என்றால், அந்த நேரத்தில் ஒரு சந்தேகம் வருமானால் விளைவுகள் வேறுவிதமாக ஆகக்கூடும். ஒரு தனி மனிதனாக நடிகர் ராஜ்குமார் அங்கே சிக்கி இருக்கிறபோது அவரை எப்படியும் மீட்டுத்தான் ஆக வேண்டுமென்பதிலே அகில இந்தியாவும், மத்தியிலே ஆட்சியிலே உள்ளவர்கள் உட்பட அக்கறை காட்டியபோது, மீட்கப்படும் வரையில் இன்னொரு நோக்கத்தில் திட்டமிட்டு அதன்மீது நடவடிக்கை எடுப்பது ஓர் அரசாங்கத்திற்கு புத்திசாலித்தனமான காரியம் ஆகாது. ஆகவே அவரை மீட்பதுதான் ஒரே நோக்கம். வீரப்பனைப் பிடிப்பது என்பது என்றைக்கும் இருக்கிற பணியின் பழைய பாக்கி.

**திரு. பி.ஆர், சுந்தரம்:** அதனால்தான் குறைந்தது 10 நாட்கள் டைம் கொடுத்து, அவனை வெளியில் தப்பித்துப் போ என்று தப்பித்ததற்குப் பின்னால் செயல்பட வேண்டும் என்பதற்காக (மணியடிக்கப்பெற்றது) தேடுதல் வேட்டையில் இறங்கச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் தயவுசெய்து அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். பிடிக்க முடியாததற்கு ஏற்கெனவே காரணம் சொல்லியிருக்கிறார்கள். பக்கத்திலே 6 அடி தூரத்திலே யானை நின்றாலே தெரியாது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மைக் கொடுக்கச் சொல்லுங்கள். அடுத்தது, நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் வீரப்பனை பிடிப்பது எங்களுடைய நோக்கம் இல்லை என்று. இந்த ஆட்சி இருக்கிறபோது வீரப்பனை உங்களால் பிடிக்க முடியாது. இதுதான் உண்மை. பிடிக்க வேண்டுமென்கிற எண்ணமும் உங்களுக்குக் கிடையாது.

இன்னொன்று நாட்டிலே இருக்கிற மிசா பாண்டியன் போன்றவர்களையே உங்களால் பிடிக்க முடியவில்லை. காட்டிலே இருக்கிற வீரப்பனை...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தவறான குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. மிசா பாண்டியனைப் பிடிக்கவில்லையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மிசா பாண்டியன் அவரே வந்து சரண்டர் ஆனார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எப்படியோ உள்ளே வந்து சிறையில் இருக்கிறார் இல்லையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் பிடித்தீர்களா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** யார் பிடித்தது? அ.இ.மு.க. தலைவர் ஜெயலலிதா பிடித்துக் கொடுத்தார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் இப்படிப் பேசிக்கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏன் வந்து சரண்டர் ஆனார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போலீஸோட இடுக்கிப்பிடி தாங்க முடியாமல்தான் அவர் வந்து சரண்டர் ஆகியிருக்கிறார். அதை விடுங்கள். அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏன் சரணடைந்தார்? அவருடைய குடும்பத்தில் இருக்கிறவர்களையெல்லாம் கொண்டு போய் உள்ளே வைத்ததால், அவருடைய நண்பர்களையெல்லாம் கொண்டுபோய் சிறையில் வைத்ததால், இனி நாம் வெளியே இருந்தால், நம் குடும்பத்திலே உள்ளவர்கள் அத்தனை பேர்களுக்கும் பாதிப்பு ஏற்படும்; அதனால் நாம் மாட்டிக் கொண்டாலும் பரவாயில்லை; குடும்பத்தில் இருக்கிறவர்களாவது நிம்மதியாக இருக்கட்டும் என்று அரசாங்கம் எடுத்த நடவடிக்கையால்தான் அவர் வந்து சரண்டர் ஆனாரே தவிர அவர் ஒன்றும் ஜெயலலிதா சொல்லி சரண்டர் ஆகவில்லை. இது ஒன்று.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர்கள் ஏன் சொல்ல வேண்டும்? அவர்கள் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. அம்மா ஏன் சொல்ல வேண்டும்? அம்மா பெயரை ஏன் இழுக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏனென்றால் அம்மா என்ன சொல்கிறார்களோ அதை நீங்கள் பேசுகிறீர்கள். அதைப்பற்றி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் நேருக்கு நேர் பேசிக் கொள்ளாதீர்கள். என்னைப் பார்த்துப் பேசுங்கள். திரு. சுந்தரம், உட்காருங்கள், அமைச்சர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்ல வருவது என்னவென்றால், இப்போது வீரப்பனைப்பற்றி எதை வைத்துப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இன்றைக்கு ஓர் அறிக்கை விடுகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சட்டப்படி யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கும். அந்த மிசா பாண்டியன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் துணை மேயராக இருந்தவர். இதே அ.தி.மு.க. ஆட்சியாக இருந்தால் அவரைக் காப்பாற்றியிருப்பீர்கள். ஆனால் நாங்கள் காப்பாற்றவில்லை. யாராக இருந்தாலும் நாங்கள் நடவடிக்கை

எடுக்கிறோம். தஞ்சாவூரிலே ஒரு கொலை வழக்கிலே சம்பந்தப்பட்ட அமைச்சர் காரிலே பவனி வந்த அந்தக் காலம் தி.மு.க. ஆட்சிக் காலம் அல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் 47 நாள். 47 நாள் டைம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதுவும் அசெம்பிளி நடக்கிறது. அசெம்பிளி 19 ஆம் தேதி நடக்கிறது. அசெம்பிளி 19 ஆம் தேதி நடக்கிற காரணத்தினாலேதான் எப்படியும் அசெம்பிளியில் வந்து பிரச்சினையை எழுப்புவார்கள் என்று மெட்ராஸிலேயிருந்து தூது போய்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மிசா பாண்டியன் அவர்கள், சட்டமன்றம் கூடுகிறது. சுந்தரம் உள்ளே போய் தான் இருக்கிற இடத்தைச் சொல்லிவிடுவார் என்று பயந்து வந்து சேர்ந்துவிட்டார் என்று நான் ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்றைக்கு கோயம்புத்தூரிலே செல்வராஜ் என்கிற போலீஸ்காரர் பட்டப்பகலிலே கொலை செய்யப்படுகின்றார். போலீஸ்காரருடைய மனைவிமார்கள் வீதியிலே வந்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு என்று சொல்லவில்லை. இனறைக்குள்ள சூழ்நிலை. இதுதான் இந்த நாட்டிலேயுள்ள நிலைமை.

முதல்வர் பேசினார். முதலில் எடுத்தவுடனே பேசினார். இந்த ஆட்சி வந்தவுடன் பேசினார். கள்ளச் சாராயப் பானைகள்மீது துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என்று சொன்னார். குண்டு பாயவில்லை. கள்ளச் சாராயம் தெருவெங்கும் ஓடிக் கொண்டிருக்கிறது. இதுதான் நாட்டினுடைய இன்றைய நிலைமை. கடலூரிலே கள்ளச் சாராயத்தை எதிர்த்து போராடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இளைஞர் வெட்டிக் கொல்லப்படுகின்றார்.

அதேபோல் செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகே பீமன்தோப்பைச் சேர்ந்த சகோதரிகள் இரத்தினம்மாள், இந்திராணி அவர்கள் இரண்டு பேரும் படுகொலை, அதற்கு போலீஸ் வேறு காரணம் சொல்கிறது. குடும்பத் தகராறு காரணமாக அங்கே பிரச்சினை ஏற்பட்டது என்று சொல்கிறது. நேற்றைக்குக்கூட அங்கே போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. பெரிய அளவிலே மகளிர் எல்லாம் சேர்ந்து பெரிய போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். கட்டுரை பத்திரிகையில் வந்திருக்கிறது. கள்ளச்



சாராயம் நாட்டிலே அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் இன்றைக்கு இந்த நாட்டினுடைய நிலைமை. இன்றைக்கு ரேஷன் அரிசி பற்றி பெருமையாக எங்கும் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். ரேஷன் கடைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இதுதான் உண்மை நிலைமை. இரண்டு ரூபாய் அரிசி எங்கே கிடைக்கிறது? உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லட்டும், இரண்டு ரூபாய் அரிசி எங்கே போனது சொல்லுங்கள். (குறுக்கீடு) இரண்டு ரூபாய் அரிசியை மாற்றி 3½ ரூபாய்க்கு விற்கிறீர்கள்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு திரு கா.நா. நேரு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் வீரப்பனிடம் போனார். அங்கே செல்லுபடியாகவில்லை; கள்ளச்சாராயத்திடம் போனார். அங்கேயும் செல்லுபடியாகவில்லை. ஏதாவது ஜனங்களிடம்போய் அரிசி பற்றிச் சொன்னால் எப்படியாவது ஆகும் என்று இந்த அரிசி பற்றி தம் கட்டுகிறார்கள். ஏழு, எட்டு நாட்களாக, எந்தக் கடை மூடப்பட்டிருக்கிறது சொல்லுங்கள் (குறுக்கீடு), சும்மா விளையாட்டு பண்ணக்கூடாது, எந்தக் கடை மூடியிருக்கிறது? நீங்கள் பாட்டுக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொத்தாம்பொதுவிலே இந்தக் கடை மூடியிருக்கிறது, அந்தக் கடை மூடியிருக்கிறது, என்று சொல்வது தவறு. ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு சொல்ல வேண்டும். (குறுக்கீடு) திரு. சுந்தரம், 4700 கடைகள், புதிய கடைகள் திறந்திருக்கிறோம். பகுதி நேரக் கடைகள் திறந்திருக்கிறோம். ஒரு கடைக்கு, பகுதி நேரக் கடை திறக்கிறபோது (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள். அமைச்சர் கேட்பதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறீர்கள். எந்த எந்த இடங்களில் மூடப்பட்டிருக்கின்றன என்று ஆதாரத்தைச் சொல்லுங்கள். பிறகு பேசுங்கள்.

***மாண்புமிகு துரைமுருகன்:** Point of order. ஒரு மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோதும் மாண்புமிகு உறுப்பினர் நின்று கொண்டே இருப்பது என்ன முறை?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** பொதுப்படையாக 4,700-க்கு மேற்பட்ட புதிய கடைகளும், பகுதி நேரக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கடைக்கு, ஒரு பகுதி நேரக்கடை என்கிறபோது, ஒரே ஆள்தான், இதிலே மூன்று நாட்கள், அதிலே மூன்று நாட்கள் என்று பொருட்களை மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். பகுதி நேரக் கடைக்குச் சென்று இருக்கிறபோது முழுநேரக் கடை இரண்டு நாட்களுக்கு மூடியிருக்கும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், 200 அட்டைகள் இருந்தால்கூட அந்த இடத்திலே கடை வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய சௌகர்யத்தை முன்னிட்டு நிறைய கடைகளைத் திறந்திருக்கிறோம். ஆனால் 800 குடும்ப அட்டைகள் உள்ள கடையில் வருவாய் எவ்வளவு உள்ளதோ, அவ்வளவுக்குத்தான் வேலைக்கு ஆள் வைத்துக்கொள்ள முடியும். எல்லா இடத்திலும் ஆட்களை வைத்துக்கொள்ள முடியாது. அதனால் இந்தக் கடை மூடியிருக்கிறது, அந்தக் கடை மூடியிருக்கிறது என்று பொத்தாம் பொதுவிலே சொல்லக் கூடாது. குறிப்பிட்டுச் சொன்னால் பொறுப்பேற்று நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைத் தெரிந்துகொண்டு, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** துணைத் தலைவர் அவர்களே, Point of order. திரு. சுந்தரம் சொல்வதிலேயே ஒரு கருத்து இருக்கிறது. அதாவது இரவு 8.00 மணிக்கு மேலே எல்லாக் கடைகளுமே மூடியிருக்கின்றன. அதை நாம் உண்மையிலேயே ஒத்துக்கொள்கிறோம். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் வேலை செய்கின்ற நேரத்தில் கடை திறந்திருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எனக்கு ஒரு 30 நிமிடம் டைம் கொடுத்தால் எல்லாமே பேசுவேன். என்னுடைய பேச்சிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் 20 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதிலே கேட்ட கேள்விகளுக்கு உருப்படியாகப் பதில் சொல்ல முடியவில்லை. (குறுக்கீடு) மேலும் 30 நிமிடங்கள் தேவையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை, நான்கு வருஷமாக கேட்டு பதில் சொல்லி, இன்றைக்கு என்ன பெரிதாக, பதில் சொல்லப் போகிறார்கள். அடுத்து விவசாயிகள் பிரச்சினை, எல்லோரும் பேசி முடித்துவிட்டார்கள். என் பங்குக்கு நானும் பேசியாக வேண்டும்.



ஏனென்றால் முதல்வர் இங்கே பேசினார், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் பற்றி பேசினேன். பதில் சொல்ல முடியவில்லை அவராலே, இப்போது ஆளை விடுங்கள் என்று சொன்னார், நான் சொல்கிறேன் விவசாயிகள் உங்களை ஆள விட்டார்கள், நீங்கள் நல்லதைச் செய்வீர்கள் என்று உங்களை ஆள விட்டார்கள். இன்றைக்கு அந்த விவசாயிகள் உங்களை ஆள விடுவதற்குத் தயாராக இல்லை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் காலத்தில் அப்படிச் சொன்னீர்கள். இப்போது 10 சதவீதம் என்று சொல்கிறீர்கள், இது எந்தவிதத்தில் நியாயம், யாரை ஏமாற்றுவதற்காக நீங்கள் இந்த அறிவிப்பை அறிவித்திருக்கிறீர்கள். இதுதான் இன்றைக்கு உண்மை. (குறுக்கீடு) சரக்கில் இருக்கிற பிழிதிறன் (குறுக்கீடு) எனக்குத் தெரியவில்லை, பிழிதிறன்... 10 சதவீதம் பிழிதிறன்.

**திரு. ஐ. கணேசன்:** துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, உங்களுடைய திட்டம் ஒவ்வொன்றையும் சொல்லியிருக்கிறீர்கள். சமத்துவபுரம் திட்டம் பற்றியெல்லாம் நேற்று பேசினார்கள். சமத்துவபுரத்தைப் பொறுத்தவரையில், நீங்களே ஜாதியை உருவாக்கியிருக்கிறீர்கள். இதுதான் உண்மை. அந்த வீட்டுக்குப் போய் பார்த்தால், இந்த வீடு ரெட்டியார் வீடு. இந்த வீடு உடையார் வீடு — இப்படித்தான் பெயர் வைக்கிறார்களேயொழிய....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வீடு இன்னாருடைய வீடு என்று பெயர் எழுதப்பட்டு இருக்கிறதே தவிர, ஜாதியின் பெயரை எழுதியிருக்கவில்லை, எழுதினாலும் தப்பு இல்லை. என்ன காரணம் என்றால், இத்தனை ஜாதியைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியில் 100 வீடுகளில் பக்கத்தில் பக்கத்தில் ஒற்றுமையாக இருந்து வாழ்ந்து காட்டுகிறோம் என்பதை உங்களைப் போன்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கு அப்படி எழுதினால்கூட தப்பு இல்லை; ஆனால் எழுதவில்லை.

*பிற்பகல் 1-20*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதிலே சமூக விரோத நிகழ்ச்சிகள்தான் நடக்கின்றன.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக விரோத நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இவர்களைப் போன்றவர்கள் காரணமாக இருந்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றி விசாரணை தொடங்கலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த சமத்துவபுர வீடுகள் கட்டப்பட்டு, 3, 6 மாதங்கள் ஆகின்றன. அதற்கு இரண்டாயிரம் ரூபாய் ஒதுக்குகிறீர்கள். எதற்கென்றால் பராமரிப்பு செய்வதற்கு. எங்கேயாவது கட்டடங்கள் 3,6 மாதங்களில் ஒழுகுமா? எந்த யோக்கியதையில், எந்த விதத்தில் கட்டியிருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு கற்பனை, கட்டி முடித்த பிறகுதான் அதற்குரிய தொகை வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகுதான் கணக்கிலே சேர்க்கப்படுகிறது. இடையிலே எதற்காக நாங்கள் பணம் கொடுக்க வேண்டும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கட்டி முடிததற்குப பின்னால் கொடுக்கிறீர்கள். 3 மாதங்களிலே கட்டடம் ஒழுகுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டடத்திற்கு மேல் தளத்திற்கு ஓடு போடவில்லை என்று சொல்லி, பணம் தேவை என்று கேட்டதற்குப் பிறகு இரண்டாயிரம் ரூபாய் கூடுதலாகச் சேர்த்துக் கொடுத்திருக்கிறோம். அதாவது, மேல் ஓடு ஒட்டுவதற்குக் கொடுத்திருக்கிறோம். கட்டிய கட்டடத்திற்காக அல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதேபோல உழவர் சந்தை, உழவர் சந்தையைப் பொறுத்தவரையில் அடுக்கு மொழியிலே பேசுவதற்கு நன்றாக இருக்கிறது. உழவர்கள் பொருட்களைக் கொண்டு வந்து, அவர்களே விற்று, அதிக இலாபம் எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உழவர் சந்தை என்பது அடுக்கு மொழியல்ல, அழகு மொழி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்கள் பாணியில் அப்படியே வைத்துக் கொள்ளுங்கள், அடுக்குமொழி, அழகுமொழி என்று வைத்துக்கொள்ளுங்கள். கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. ஆனால் இப்போது நிறைய உழவர் சந்தைகளைப்பற்றிச் சொன்னால், எங்கே



என்று கேட்பீர்கள். வாருங்கள் நான் காட்டுகிறேன். உழவர் சந்தைகள் மூடிக் கிடக்கின்றன. இதுதான் உண்மை.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை மூடியிருக்கிறது என்று சொல்கின்றார்கள். காலையில் 4, 5 மணியளவில் தொடங்கக்கூடிய சந்தைக்குக் கொண்டுவரக்கூடிய காய்கறிகள், கீரை வகைகள், மற்ற பொருள்கள் எல்லாம் 9 மணி, 10 மணிக்கெல்லாம் பல கடைகளில் விற்றுவிடுகின்றன. அப்படி விற்றுவிட்டால் கடை மூடித்தான் இருக்கும். சில கடைகள் 11 மணிவரைகூட நடக்கின்றன. காய்கறிகள் இருந்தால், இப்போது மாலை வரைகூட விற்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. காய்கறியே வராமல் மூடப்பட்ட உழவர் சந்தை எது என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் நான் ' அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உழவர் சந்தைக்கு வருகின்ற உழவர்கள் ஒரு காய்கறி, இரண்டு காய்கறி, 3 காய்கறி பயிரிட்டுக் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஆனால், உழவர் சந்தையில் பார்த்தால் எல்லா காய்கறிகளும் இருக்கின்றன, வெளியிலே இருந்து வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அதுதான் உண்மை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உழவர் சந்தைக்கு 600, 700 அடையாள அட்டைகள் என்ற அளவுக்கு உழவர்களுக்கு நாங்கள் அடையாள அட்டை தருகிறோம். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். ஒரு உழவர் சந்தைக்கு எந்தெந்தப் பகுதிகளிலே இருந்து, கிராமங்களிலே இருந்து காய்கறிகளைக் கொண்டு வரலாம் என்று முடிவு செய்து 600, 700 அடையாள அட்டைகள் கொடுத்தாலும்கூட, காய்கறி உற்பத்தி செய்கின்ற விவசாயி என்று பார்த்தால் 60 பேர், 70 பேர், 100 பேர், 200 பேர் என்ற அளவுக்குத்தான் இருப்பார்கள். அவர்கள்தான் காய்கறிகளைக் கொண்டு வருவார்கள். இப்படி 100 பேர், 200 பேர் வரை காய்கறிகளைக் கொண்டு வரும்போது ஒரே காய்கறியையா கொண்டு வருவார்கள்? சுந்தரமாக இருந்தால் அப்படிக் கொண்டு வரலாம். 200 பேர் 200 விதமான, அல்லது 10, 20 விதமான காய்கறிகள்தான் கொண்டு வருவார்கள். அப்படிக் கொண்டுவருகிறபோது பல காய்கறிகள், பல கீரை வகைகள் அந்த உழவர் சந்தைக்கு வரும். அதைத்தான் பொதுமக்கள் வாங்கிச் செல்கிறார்கள்.

[2001 ஜனவரி 24

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை. அமைச்சர் சொல்வதற்கும் நான் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதிலே வியாபாரிகள் அந்த அட்டையைப் பயன்படுத்தி 20 சதவீதம் இலாபம் வைத்து, வியாபாரம் செய்கின்றார்கள் என்றுதான் நான் சொல்லுகின்றேன். அடுத்து, எங்கே கடை மூடப்பட்டுள்ளது என்று கேட்கிறார்கள். இந்தப் பத்திரிகை பற்றிச் சொன்னால், உங்களுக்கு ஆதரவாகப் பேசுகின்றவர்களின் பத்திரிகை என்று சொல்லுவீர்கள்.

*பிற்பகல் 1-25*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் பேசியதைப்பற்றி, நான் கவலைப்படவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. எதுவுமே ஆதாரம் இல்லையே. நான் கேட்க விரும்புவது மாண்புமிகு உறுப்பினர் கையிலே இருக்கிற பத்திரிகை சோவினுடைய பத்திரிகை, துக்ளக் பத்திரிகை. கேட்டால் நெருங்கிய தொடர்பு; ஐந்து வயதிலிருந்து பழகிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்வீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், துக்ளக்கிலே இருக்கிறதை நீங்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டு அதுதான் உங்களுடைய வேதம் என்று நீங்கள் சொல்கிறீர்களா? அப்படியென்றால் என்னிடம் துக்ளக் நிறைய இருக்கிறது. அதிலே என்னென்ன (குறுக்கீடு) கேளுங்கள், நீங்கள் துக்ளக்கை ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது. இப்பொழுது இந்து பத்திரிகையிலே, ஒரு செய்தி வருகிறது என்றால், சரி, ரொம்ப பேர் படிக்கிறார்கள். ஒரு வாரப் பத்திரிகையிலும் கமெண்ட். இப்பொழுது, உழவர் சந்தை எல்லாமே நூற்றுக்கு நூறு நன்றாக நடக்கிறது என்று நாங்கள் சொல்லவில்லை. ஒன்றிரண்டு தப்பு இருக்கிறது என்று முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், இப்பொழுது தென்காசியிலே நகரத்திலிருந்து சிறிது தொலைவிலே கட்டிவிட்டோம் என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். உடனே, முதலமைச்சர் அதைப் பத்திரிகையில் பார்த்தவுடனே, ஊருக்கு மத்தியிலே கட்டச் சொல்லியிருக்கிறார். ஆக குறைகள் சுட்டிக்காட்டப்படும்போது, எந்தப் பத்திரிகையாக இருந்தாலும், நாங்கள் திருத்திக்கொள்கிறோம். நாங்கள் திருத்திக் கொள்ளவே மாட்டோம், நாங்கள் வைத்ததுதான் சட்டம் என்று நினைக்கிற ஆட்சியில்லை இது. ஆகவே, துக்ளக்கில் வருவதுதான் ஆதாரம் என்றால், நிறைய அம்மாவைப் பற்றி சொல்லியிருப்பதெல்லாம் இருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இப்பொழுது தென்காசி என்று நீங்களே சொன்னீர்கள். தென்காசியைப் பொறுத்தவரை மூடப்பட்டிருக்கின்றது என்று சொல்லி இருக்கிறார்கள். பல இடங்களிலே மூடப்பட்டிருக்கிறது



2001 ஜனவரி 24] [திரு. பி.ஆர். சுந்தரம்]

என்று சொல்லியிருப்பதை நான் சொல்கிறேன். அடுத்தது, உங்கள் சப்ஜெட்டுக்கு வருகிறேன் எந்த பத்திரிகை என்று.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மூடி இருப்பது ஏன் என்றால், காய்கறி விற்றுவிட்டால், மூடித்தான் இருக்கும். காலையிலே காய்கறி கொண்டு வருகிறார்கள்; எல்லாம் விற்பனையாகி விடுகிறது. விற்பனை ஆன பின்னாலே, நுகர்வோரும் வர மாட்டார்கள். காய்கறி விற்பனையாளர்களும் உள்ளே இருக்க முடியாது. அப்பொழுது மூடித்தான் இருக்கும். அப்பொழுது போய், ஒரு போட்டோ எடுத்து போட்டுவிட்டு, யாருமே இல்லை, மூடியிருக்கிறது என்று சொன்னால், அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேபோல, நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தவரையில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரை மணி நேரம் ஆகிவிட்டது. இதுவரை 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேபோல, வருமுன் காப்போம் திட்டத்தைப் பற்றி, இரண்டு மூன்று நாட்கள் நீங்களும் அறிக்கை விட்டு முன்னாள் அமைச்சர் ஒரு அறிக்கைவிட்டு, எல்லாம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இந்து பத்திரிகை என்றெல்லாம் சொன்னீர்கள். அந்த இந்து பத்திரிகையிலே சொல்லி இருக்கிறார்கள். இந்த முகாம் நடத்துகிறபோதெல்லாம் டாக்டர்களும் அங்கே போனால், ஆஸ்பத்திரி மூடிக்கிடக்கிறது, என்று இந்து பத்திரிகையிலே சொல்லியிருக்கிறது. ஆனால், நீங்கள் முதலிலே என்ன சொன்னீர்கள்? முகாமே நடத்தவில்லை என்று சொல்லிவிட்டு அப்புறம் (குறுக்கீடு) நான் சொல்கிறேன் விளக்கம். கிட்டத்தட்ட 10 ஆயிரம் மருத்துவ முகாம்கள் நடந்திருக்கின்றன. 10 ஆயிரம் மருத்துவ முகாம்களிலே நீங்கள் சொல்வது இரண்டரை கோடி மக்கள் பயன் அடைந்து இருக்கிறார்கள் என்று, எங்கள் அம்மா சொன்னதற்கும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே உறுப்பினர் விசுவநாதன் பேசி அதற்கு சரியான பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேரம் ஆகிறது. இன்னும் அடுத்த உறுப்பினர் பேச வேண்டாமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஒதுக்கியதற்கு மேலே பேசியிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தச் சிறப்பு முகாம்களிலே எந்த டாக்டரும் கலந்துகொள்ளவில்லை. ஒரே ஒரு ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர்தான் கலந்துகொண்டார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் சொல்கிறேன். கிட்டத்தட்ட 6 மருத்துவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆறு மருத்துவர்களுக்கு மேல்தான் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், அதிலே இரண்டரை கோடி பேர் கலந்து கொண்டது உண்மை. அதிலே, 51 இலட்சம் பேர் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். அதாவது விழிப்புணர்வு -- எய்ட்ஸ், டி.பி. அதே மாதிரி, உங்களுக்கு தெரியாது (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லவில்லை. என் கையிலே இருக்கிறது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக, தலைமைக் கழகத்திலிருந்து வந்த அறிக்கை. இது முன்னாள் அமைச்சர் கொடுத்தது. அவர் என்ன சொல்கிறார் என்றால், நம்முடைய முன்னாள் முதலமைச்சர், இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இவர் சொல்கிறார். 18-1-1992 அன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பெயரில் மருத்துவ நலத்திட்ட முகாம்கள் தொடங்கப்பட்டன. அந்த மருத்துவ முகாம்களிலே 51 இலட்சத்து, 64 ஆயிரத்து 641 பேர் கலந்து கொண்டார்கள். அமைச்சர் சொல்வது எங்களுக்குத் தெரியாது. அவர் சொல்வது, 51 இலட்சம் என்கிறார். அம்மா சொல்கிறார்கள் இரண்டரை கோடி என்று. ஆகையினால், எவ்வளவு என்று கேட்டேன். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது ஒரு பொது நிகழ்ச்சியாகத் தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கூடினார்கள். அங்கு மருத்துவ விழிப்புணர்ச்சி, பிரச்சாரம் செய்வதோடு விழிப்புணர்வு சம்பந்தப்பட்ட பேனர்கள், தட்டிகள், சுவரொட்டிகள் நோட்டீஸ்கள் வைக்கப்பட்டன. சுமார் இரண்டரை கோடி பேர் இந்த நிகழ்ச்சியிலே



கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களில் 51 இலட்சத்து, 64 ஆயிரத்து 640 பேர் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுக்கு மருந்து, மாத்திரை கொடுத்து இருக்கிறார்கள். மொத்தம் இரண்டரை கோடி பேர்களிலே, விழிப்புணர்வு பெற்றவர்கள் மீதிப்பேர். அதுதான் உண்மை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அ.தி.மு.க. ஆட்சியில், நடைபெற்றது மருத்துவ முகாமா, தி.மு.க ஆட்சியில் நடைபெறுவது மருத்துவ முகாமா என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சவால். வருகிற தேர்தலில் இதை வைத்தே, தமிழ்நாட்டு மக்கள் வாக்களிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தமிழ்நாட்டு மக்கள் ஏற்கெனவே முடிவு செய்து விட்டார்கள். இனி, எந்தக் காரணத்தைக் கொண்டும், அ.தி.மு.க.-வை ஆட்சியிலே கொண்டு வருவதில்லையென்று.

பிற்பகல் 1-30

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) இப்படி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வது, அதிக வாய்ப்புகள் தரப்படவில்லை, அதிக நேரம் ஒதுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அடிக்கடி சொல்கிறார். இன்று மட்டும் 33 நிமிடங்கள் பேசி, அடுத்தவருடைய நேரத்தையும் அவரே எடுத்துக்கொண்டிருக்கிறார்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை (25-1-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 1998-99-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

10. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பதினொன்றாவது அறிக்கை (2000-2001)

11. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பன்னிரண்டாவது அறிக்கை (2000-2001)

12. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பதிமூன்றாவது அறிக்கை (2000-2001)

13. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பதினான்காவது அறிக்கை (2000-2001)

14 பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பதினைந்தாவது அறிக்கை (2000-2001)

D
V2'1,3'P01
P01.N3.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224639
சென்னை-600 008
நூலகம்

அரசு மையம் அச்சகம், சென்னை-600 079.